# அரும்பிய முல்லை

UNIVERSITY LIBRARY
3 1 MAY 1957
MADRAS

## தீபன்

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

UNIVERSITY EXTENSION LIBRARY
1 6 DEC 1957
MADURAI

தமிழ்ப் பண்ணை

*Univ. Grants Commission.*

இரண்டாம் பதிப்பு

தமிழ்ப் பண்ணை. M/S 384

ஏப்ரல், 1948.

விலை ரூ. 3—8—0

இதில் வெளியிடப்பட்டிருக்கும் படங்கள்
புதுமைப் பதிப்பகத்தார் உதவியவை.

# முகவுரை

மூன்று வருஷங்களுக்கு முன் ஒருநாள் சாயங் கால வேளை. நானும் எனது நண்பர் ஸ்ரீ தீத்தாரப்ப னும் (செல்லையா) மயிலாப்பூர் கடற்கரைக்குக் காற்று வாங்கச் சென்றோம். எங்கள் மோட்டார் வண்டியை மெரினவில் நிறுத்திக்கொண்டு, அதில் உட்கார்ந்த படியே பேசிக் கொண்டிருந்தோம். எதிரிலிருந்த பரந்த மணல் வெளியிலும், பக்கத்தில் சென்ற நடை பாதையிலும் ஜனங்களின் கூட்டம் அதிகமாகக் காணப்பட்டது. அது, ஆண் பெண் குழந்தைகள் அடங்கிய பெருங் கூட்டம். பட்டணத்து ஜனங்க ளுக்குக் கடற்கரையை அனுபவிக்கச் சொல்லியும் தரவேண்டுமா? அவரவர்கள் இஷ்டம்போல் இங்கு மங்கும் உலாவுவதும், மணலில் உட்கார்ந்து பேசுவது மாக இருந்தார்கள். கடலலைகள் இடைவிடாது நுரைக் கோலமிடும் கலையழகில் தங்கள் மனதை ஈடு படுத்திப் பொழுது போக்கிக்கொண்டிருந்தார்கள்.

நாங்களிருவர் மட்டும், உட்கார்ந்த இடத்தை விட்டு நகரவில்லை. ஒருபுறத்திலே நீலக்கடலில் கொந் தளித் தெழும் அலைகள் மடிந்து மடிந்து விழுந்த காட்சி தூரத்தில் தென்பட்டது. மற்றொரு புறத்தில் மேற்கு வானம் முழுவதிலும் அந்தி நேரத்தின் செந்

நிறம் பரவிக்கிடந்தது. எங்கள் சம்பாஷணையிலும், சிறிது சிரிப்பு, சிறிது ஆழ்ந்த கருத்துக்களின் பிரதி பலிப்பு, நிறைவேருத ஆசைகளின் தவிப்பு - இவையெல்லாம் மாறி மாறித் தோன்றி மறைந்துகொண்டிருந்தன.

•

சிறிதுநேரம் சென்றபின், எங்கள் பேச்சின் மத்தியில், என் நண்பர் திடீரென்று என்னைப் பார்த்து, 'எங்கிருந்து முல்லையின் மணம் கிளம்புகிறது? யாராவது பெண்கள் கூந்தலில் முல்லைமலர் சூடிக்கொண்டு செல்லுகிருர்களா?' என்று வினவினர். நான் வண்டியை விட்டு எட்டிப் பார்த்தேன். ஆம்; கூப்பிடு தூரத்தில், பூக்காரனொருவன், தலையில் புஷ்பங்கள் நிறைந்த கூடை ஒன்றைத் தாங்கிக் கொண்டு நடந்து சென்றுகொண்டிருந்தான். அவன் எங்களைக் கடந்து செல்லும் வரையில் முல்லையின் வாசனையை நாங்கள் அறியவில்லை. ஆகையால் நண்பரைப் பார்த்து, 'பூக்காரன் சமீபத்தில் வந்தபொழுது என் நமக்கொன்றும் தெரியவில்லை? நம்மைத் தாண்டிச் சென்ற பிறகு, கூடையிலிருக்கும் புஷ்பங்களின் நறுமணம் காற்றில் கலந்து இப்பொழுது நம்மேல் வீசுவதும் ஒரு வேடிக்கைதான்' என்றேன். அதற்குச் செல்லையா, 'இதிலென்ன விந்தை! வாழ்க்கையிலும் அப்படித்தானே? ஒருவன் அழகிய கவி பாடினல், அவன் ஆயுட்காலத்தில் அதை அனுபவித்துப் போற்ருமல், அவனுக்குப் பிற்காலத்திலே மெச்சுவது உலக இயல்பல்லவா? மேலும், மற்றுமொரு தத்துவமும் இதில் அடங்கியிருக்கிறது, கவனித்தீர்களா? முல்லை மறைந்தாலும் அதன் நறுமணம் சட்டென்று மறைவதில்லை' என்ருர்.

முல்லை மறைந்தாலும், அன்று காற்றில் மிதந்து வந்த அதன் இனிய வாசனை இன்றும் என்னை வசீகரிக்கிறது. செல்லையாவை இழந்த நமக்கு, இன்று காண்பதுபோலிருக்கிறது. அவர் முகத்தின் பொலிவும், சுவை நிறைந்த பேச்சும், கலையுணர்ச்சி ததும்பும் கடிதமும், கட்டுரையும். அரும்பிய இந்த முல்லையை, நன்ருக மலர்வதன் முன்பே, யாரோ பறித்துவிட்டார்கள். ஆனல், எங்கிருந்தோ அதன் நறுமணம் நம் மனதை அதன்பால் கட்டி இழுக்கின்றது!

செல்லையாவின் கவியையும், கதையையும், கட்டுரையையும் நாம் நுகர்ந்து மெய்ம்மறப்பதன் காரணம், அம்முல்லையின் மணம்தான். தன்னைப் பறிகொடுத்தாகிலும், தன் ஆசை முழுவதையும் சேர்த்து உருவாகக் காட்டும் உள்ளப்பெருக்கை, தன்னுடைய பாட்டிலும், எழுத்திலும் காட்டுவதே கலைஞன் சதா தேடுகிற பேரின்பம். அதுவே கலைஞன் செய்கிற தியாகமும்.

இந்த நாட்டு இலக்கியங்களிலே கடிதங்களுக்கு ஒரு ஸ்தானத்தை சமீபகாலம் வரையும் ஒருவரும் கொடுக்கவில்லை. ஆனல், இப்புத்தகத்தை வெளியிடுகிறவர்கள் சில அருமையான கடிதங்களையும், கட்டுரைகளுடன் சேர்த்திருக்கிருர்கள். அவற்றின் அருமை அவைகளை வாசித்தபின் நன்கு விளங்கும். ரஸிகர்களாயுள்ளவர்களுக்கு, செல்லையாவின் ஆவி மறைந்தும், அவருடைய ஜீவநாடியின் துடிப்பும் ஓட்டமும் இக்கடிதங்களில் காணக்கிடக்கின்றன. இதயத்தில் தனிமையில் வளர்ந்த இன்ப சிருஷ்டிகளை, தனக்கு உவந்த


மற்ருெருவருக்கு, பயமின்றியும், சங்கோசமின்றியும் தெரிவிப்பவை கடிதங்களே என்பதை இக்கடிதங்களை வாசிப்பவர்கள் தெளிவாக அறிவார்கள்.

சாமான்யமாக, ஒருவர் மறைந்த மறு நாளே அவரை மறப்பது மக்கள் இயல்பு. ஆனால், இக் கொடிய வழக்கத்துக்கு மாருக, இப்போது இப் புத்தகம் வெளியிடப்படுகிறது. மறைந்துபோன ஒரு கலையுள்ளத்தை இது நமக்குச் சதா நினைவூட்டிக் கொண்டிருக்கும்.

'ஆஸ்ரமம்,'
மயிலாப்பூர்
10-3-1942.

கி. சந்திரசேகரன்

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI



## சூரியோதயம்

சூரியோ தயத்தைப் பாருங்கடி - அந்தச்
சோதியில் மனமும் சேருங்கடி
வாரிதி யிலொரு சூரிய காந்தி
மலர்ந்து வருகுது பாருங்கடி. 1

நீலக் கடலினுக் குள்ளிருந்தே - அது
நிமிர்ந்து நிமிர்ந்து பார்க்குதடி
நாலி லொருபங்கு தோணுதடி - இப்போ
நல்லதோ ரழகாய்க் காணுதடி. 2

முற்றிலும் வட்டமாய் ஆச்சுதடி - இப்போ
முன்னை விடப்பெரி தாச்சுதடி
சுற்றி யுள்ளபொருள் அத்தனையும் - அதன்
சோதிசென் றணைந்து முத்துதடி. 3

ராத்திரி எங்குதான் தங்குமோடி - அது
ராத்திரி யெல்லாம் உறங்குமோடி
காத்திருப்போமென்று வந்ததோடி - நம்மைக்
காணவே தான் இங்கு வந்ததோடி. 4

*　　　*　　　*

கட்டு மரமொன்று காணுதடி - அது
கதிரவனைமுட்டப் போகுதடி - கை
கொட்டி அதனை நிறுத்துங்கடி - அது
முட்டிவிட் டால்பெரு மோசமடி. 5

ஈட்டிகளை எங்கும் வீசுதடி - கண்கள்
ஏறிட்டுப் பார்க்கவும் கூசுதடி
வீட்டுக்குப் போகலாம் வாருங்கடி - நாளை
விடியுமுன் வந்துநாம் பார்ப்போமடி. 6

○ ★ ○

2

# சுந்தரியும் தாமரையும்

எங்கள் வீட்டுக்குப் பின் பக்கத்தில் ஒரு தோப்பு. தோப்புக்கு மத்தியில் ஒரு சின்னக் குளம். குளத்துப் படிக்கட்டில் புஸ்தகமும் கையுமாக நான் மாலைப் பொழுதைக் கழிப்பது வழக்கம். ஒருநாள் மாலை, என்னமோ தெரியவில்லை. புஸ்தகத்தில் மனம் செல்லவில்லை. என்னைச் சுற்றிலும் இருந்த இயற்கைக் காட்சியை அனுபவிப்பதிலேயே லயித்து விட்டேன்.

அன்றைக்கு, மாலை வேளையே ஒரு தனி அழகுடன் விளங்கிற்று. மேற்குத் திசையில் மறைய எத்தனித்துக் கொண்டிருந்த சூரியன், தன்னுடைய ஆயிரக்கணக்கான கரங்களையும் நீட்டி, தொட்டதை யெல்லாம் தங்கமயமாகச் செய்துகொண்டிருந்தான். குளத்தங்கரையில் இருந்த அரசமரத்தின் இலைகள் தங்கத் தகடுகளாயின. காற்றில் அசையும்போது அவை மின்னின காட்சி கண்ணைப் பறித்துக்கொண்டு போயிற்று. அப்போதுண்டான "சல சல" என்ற ஒலி, எங்கிருந்தோ இளம் பெண்கள் கைகொட்டிச் சிரிப்பதுபோலிருந்தது.

குளத்துக்கு மத்தியில் தண்ணீர் அசைவற்று நின்றது. ஆனால் படிக்கட்டிலோ சின்

னஞ் சிறிய அலைகள் வந்து மோதிக்கொண்டிருந்தன. அப்படி மோதியது, புன்னகை பூத்த முகத்துடன் காதலி அன்ன நடை நடந்து வந்து, காதலன் கன்னத்தில் ஒரு 'தட்' தட்டி விட்டுப் போனதுபோல் இருந்தது.

குளம் பூராவும் ஒரே தாமரை இலை மயமாக இருந்தது. தெற்கு மூலையில், ஒரே ஒரு தாமரை மொட்டு மட்டும், நீர்மட்டத்துக்கு மேலே தன்னந்தனியாகத் தலைதூக்கி நின்றுகொண்டு பார்த்தது. தண்ணீர் மட்டத்தோடு மட்டமாய்ப் படுத்திருந்த இலைகளையெல்லாம் விட தான் எவ்வளவோ மேல் என்ற கர்வம்கூட அந்த மொட்டுக்கு இருந்திருக்கும்.

இப்படியெல்லாம் இயற்கையின் அழகை நான் ரஸித்துக் கொண்டிருந்தபோது, என்னுடைய தம்பி ஓடிவந்து என் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். சில நாட்களாக நான் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த கடிதந்தானா அது என்று தெரிந்துகொள்ள எவ்வளவு ஆசையாயிருக்கும்? அதை அங்கேயே பிரித்துப் பார்த்தேன். ஆம், நான் எதிர்பார்த்துக்கொண்டிருந்த கடிதந்தான். அம்மான் அவர்கள் என்னைத் தீபாவளிக்கு அங்கே வரும்படி எழுதி யிருந்தார்கள். அம்மான் வீட்டுக்குப் போவதில் எனக்கிருந்த ஆசைக்கு எத்தனையோ காரணங்கள் உண்டு. அவற்றையெல்லாம் உங்களிடத்தில் சொல்லக்கூடாது. சொல்வதற்கு வெட்கமாகவும் இருக்கிறது.

தோட்டத்தை விட்டு வீட்டுக்கு வந்ததும், ஒரு புது மாதிரி யோசனை மனசில் உதயமாயிற்று. எனக்கு இருந்த ஆத்திரத்தில், சுந்தரிக்கே ஒரு கடிதம் எழுதிப் போட்டுவிட்டால் என்ன என்று பட்டது. பிற்பாடுதான் - சே! அப்படியெல்லாம் செய்யக் கூடாது. அம்மான் தான் ஹாஸ்யப் பிரியராச்சே! சுந்தரிக்கு எழுதும் கடிதத்தை அவர்கள் பார்க்க நேர்ந்து விட்டால், நான் போனதும்,

ஞாயந்தானே நீர் சொல்லும்! - ஓய்
மாப்பிள்ளையே! நம்ம
சாதிக் கடுக்குமோ (ஞாயந்)

என்று பல்லவி பாடிக் கேலி செய்ய ஆரம்பித்து விடுவார்கள். கேலிக்குக்கூட இப்படிப் பட்ட வார்த்தைகள் சொல்லும்படி வைத்துக் கொள்ளக் கூடாது — என்று நினைத்து, சுந்தரிக்கு எழுதும் யோசனையை விட்டுவிட்டு, அம்மானுக்கே ஒரு கடிதம் உடனே எழுதித் தபாலில் போட்டு விட்டேன்.

உ

தீபாவளிக்கு முந்தின தினம் மத்தியானம் அம்மான் வீடு போய்ச் சேர்ந்தேன். வேலைக்காரன் சுடலைமுத்து, “எசமான்! சேவிக்கிறேன்” என்று ஒரு கும்பிடு போட்டுவிட்டுப் பெட்டி படுக்கைகளை மேடைக்குக் கொண்டு போய் விட்டான். பிற்பாடு அம்மான் வந்து “மாப்பிள்ளை, வாருங்கள்” என்றார்கள். நான் அவர்களைச் சேவித்தபின், இரண்டு பேருமாக

வீட்டுக்குள் 'தொட்டிக்கட்டு'க்குப் போனோம். அங்கே, அத்தை, "மாப்பிள்ளை! வாரும்!" என்றாள். நானும் "ஆமாம்" என்று தலையை அசைத்துவிட்டு, அக்கம் பக்கம் கொஞ்சம் அப்படிப் பார்த்தேன். ஒரு ஆளைக் காணோம். ஏன் காணோம் என்று நினைத்துக் கொண்டிருக்கையில், செல்லையாப்பயல் அடுப்பங்கரையிலிருந்து கால்வாசி பஜ்ஜி வாயிலும், முக்கால்வாசி கையிலுமாக ஓடிவந்தான். என்னைப் பார்த்தான்; வெட்கத்துடன் சிரிப்பும் தாங்கவில்லை. ஆனால், சப்தமிட்டுத் தான் சிரிக்க முடியாதே; வாய் நிறைய பஜ்ஜி இருக்கிறதல்லவா? அதைக் கொதக்கிக்கொண்டே, "எங்க அத்தான் வந்திட்டாகடோ" என்று கத்திக் கொண்டு ஒரே குதியில் பக்கத்து அறைக்குள் பாய்ந்துவிட்டான். எனக்கும் விஷயம் விளங்கி விட்டது.

மத்தியானச் சாப்பாடானதும், மேடைக்குப் போய்விட்டேன். மேடையிலே ஒரு ஹால். அந்த ஹாலுக்கு வலதுபுறத்தில் ஒரு வராந்தா அந்த வராந்தாவுக்கு அடுத்தாற்போல் மான வெளி. மானவெளி வழியாகக் கீழே பார்த்தால், தொட்டிக் கட்டில் நடக்கும் விவரங்களை பிறர் நம்மைக் கீழேயிருந்து பார்த்து விடாதபடி தெரிந்து கொள்ளலாம். வராந்தாவிலோ காற்று ஜில்லென்று வந்துகொண்டிருந்தது. அங்கே போட்டிருந்த சோபாவில் சாய்ந்தேன். ரயில் அலுப்பல்லவா? அப்படியே

கொஞ்சம் கண்ணை மூடினேன். ஆனல் தூங்கி விடவில்லை.

கண்களை மூடிக் கொள்ளலாம். ஆனல் மனக்கண்ணை மூட முடியுமா? அது பழைய கதைகளைப் புரட்ட ஆரம்பித்தது. போன வருஷத்துக்கு முந்திய வருஷந்தான் எனக்குக் கலியாணம் நடந்தது. கலியாணம் நடந்த மூன்ரும் நாள் மறுவீடு கிரகப் பிரவேசம். மறுவீட்டன்று இரவு பத்து மணிக்குப் பட்டணப் பிரவேசம் புறப்பட்டது. ஒரு மணி ஆயிற்று. இரண்டு மணி. மூன்றும் ஆய்விட்டது. சுந்தரிக்குக் கண் உள்ளேயே போய்விட்டது, பாவம், என்ன செய்வாள்! மூன்று நான்கு நாட்களுக்குச் சேர்ந்தாற்போல் யாரால்தான் இராத் தூக்கமே இல்லாதிருக்க முடியும்? தன்னை அறியாமல் வந்த தூக்கத்தில் சுந்தரி என்மேல் சாய்ந்தாள். கடலைபோலச் சுருண்டு, காற்றுப்போல் மிருதுவா யிருந்த அவளுடைய கூந்தல் என் கன்னத்தில் பட்டது. எனக்கு என்னமோ மாதிரி போய்விட்டது. அவளும் திடுக்கிட்டுப் போய் நேரே உட்கார்ந்துகொண்டாள். பிற்பாடு, வீடு வருகிற வரைக்கும், கொஞ்சங்கூடத் தூக்கக் கலக்கமில்லாமல் விழித்திருந்தாள். நான் சுந்தரியை அன்று பார்த்தவன் தான். போன தீபாவளிப் பண்டிகையை ஒரு காரணத்தை முன்னிட்டுக் கொண்டாட வில்லை. ஆகமொத்தம் இரண்டு வருஷகாலமாய் விட்டது சுந்தரியைப் பார்த்து. கலியாண சமயத்தில்

அவளுக்குப் பதின்மூன்று வயசு. இப்பொழுது பதினாறு ஆரம்பமாகி இருக்கிறது. எப்படி எப்படியெல்லாம் மாறி இருக்கிறாளோ, யார் கண்டது?

இப்படி நான் எண்ணிக் கொண்டிருந்த பொழுது, என் காதில் "ஜில்க் ஜில்க்" என்ற மிருதுவான சப்தம் கேட்டது. என்னவென்று கீழே எட்டிப் பார்த்தேன். பட்டைக் கொலுசு அணிந்த இரண்டு பாதங்கள் மட்டும் ஒரு படுதாவுக்குக் கீழே தெரிவதைப் பார்த்தேன். அப் பாதங்களின் அமைப்பையும் அழகையும் என்னென்று சொல்லுவேன்! "பாதங்கள் இவையென்னில் படிவந்தான் எப்படியோ!" என்று கற்பனை செய்து பார்த்ததில் எனக்குண்டான இன்பத்தை எடுத்துச் சொல்லுவதென்பது இயலாத காரியம்.

கொஞ்ச நேரத்துக்குப் பின் செல்லையாப் பயலின் அழுகைக் குரல் கேட்டது. அதற்குப் பின், ஒரு திரையை இழுத்த சப்தம் கேட்டது. இன்னும் ஏதோ ஒன்றுக்குச் சாவி கொடுக்கும் சப்தமும் கேட்டது. அப்படியே கீழே எட்டிப் பார்த்தேன். அங்கே செல்லையாப் பயலின் ரயில் சுற்றிச் சுற்றி வளையமிட்டுக் கொண்டிருந்தது. திடீரென்று ரயில் எதிலோ ஒன்றில் தட்டி நின்றது. என்ன என்று பார்த்தேன். வெண் பட்டினால் சுற்றப்பட்ட அதிக அழகுடைய ஒரு பெண் உருவம் வீணை யேந்திய கையுடன் அங்கு அமர்ந்திருக்கக் கண்டேன்.

“என்ன! தீபாவளிக்கு முந்தின நாளா சரஸ்வதி பூஜை!” என்ற சந்தேகம் வந்தது. ஆனால், அந்த உருவம் யாரையோ பார்த்துச் சிரித்ததுந்தான் என் சந்தேகம் தெளிந்தது. அழகாகச் சுருண்டிருந்த கூந்தலைப் பார்த்ததும், “சரி, இது சுந்தரியாகத்தான் இருக்க வேண்டும்” என்ற முடிவுக்கு வந்தேன். மற்றப்படி அவளுடைய தேகமும் முகமும் அடையாளம் தெரியாதபடி அப்படி மாறி விட்டன. வயசு என்பது ஒரு பெண்ணை எவ்வளவு அழகாகச் செய்து விடுகிறது! அந்தப் பிரும்மாவாலும் இந்த அற்புத மாறுதலைச் செய்ய முடியாது என்று எண்ணும்படியாக இருந்தது.

இப்பொழுது இருட்ட ஆரம்பித்து விட்டது. இனிமேல் தொட்டிக்கட்டில் நடக்கும் காரியங்களைப் பார்ப்பதென்பது அநேகமாக முடியாத காரியம். ஆகையால் சோபாவில் சாய்ந்தேன். சாய்ந்ததும், வீணையை மீட்டும் சப்தம் கேட்டது. அடாடா! என்ன சுகமான நாதம்! சங்கீதத்துடன் சாந்தத்தையும் சேர்த்து இதயத்துக்குள் ஊற்றினாற்போல் இருந்தது. முதலில் கொஞ்ச நேரத்துக்குத் தர்பார் ராகத்தின் ஜீவனைக் காட்டிவிட்டு, அதில் தானம் வாசிக்கப்பட்டது. உடனே,

**ஞானமிகும் கையே**
**நளினமுடன் வீணைதனில்**
**தானமிடும் கையே**

என்ற கண்ணி என் ஞாபகத்துக்கு வந்தது

என்ன இருந்தாலும் வீணைவாசிப்புடன் நின்று விட்டால் என்ன பிரயோசனம்? எவ்வளவு நன்றாக வாசித்தாலும் எனக்குத் திருப்தி ஏற்பட்டு விடாது. வீணையின் நாதத்துக்கு ஒப்பான குரலில் சுந்தரி இரண்டொரு தமிழ்ப் பதங்களை உணர்ச்சி ததும்பப் பாடக் கேட்டதுந்தான் எனக்குப் பூரண திருப்தி ஏற்பட்டது. வாய்ப் பாட்டுக்கு முன் வாத்திய சங்கீதம் எங்கே? ஏதோ ஒரு பதத்தில் "என் கணவனுக்கு இணையுண்டோ" என்ற இடத்தை அவள் வெகு அற்புதமாகப் பாடினாள். ஒரு வேளை என்னை மனசில் வைத்துக்கொண்டே பாடி இருப்பாள். பிற்பாடு கேட்பானேன் - அற்புதமாகப் பாடினாள் என்பதற்கு?

ங

அடுத்த நாள் தீபாவளி அல்லவா? எல்லோரும் எண்ணெய் ஸ்நானம் செய்துவிட்டுக் கோடி வேட்டி உடுத்திக் கொண்டோம். காப்பி, பலகாரம் வெகு மும்முரமாக நடந்தபின், மேடைக்குப் போய் சோபாவில் சாய்ந்தேன். கீழே வெடி போடும் சப்தம் கேட்டது. செல்லையாப் பயலுக்கு இதுதான் தீபாவளி என்று சொல்லவும் வேண்டுமா? நானும் ஒரு காலத்தில் "எனக்கு வேட்டி வேண்டாம், வெடிதான் வேண்டும்" என்று கூப்பாடு போட்டு அழுததுண்டு. ஆனல் அந்தக் காலமெல்லாம் எப்போதோ மலையேறிப் போய்விட்டது. இன்னுமா எனக்கு வெடியின்மேல் மோகம்? கொஞ்

சங் கூடக் கிடையாது. இருந்தாலும், இப் பொழுது, நான் சிறு வயசில் போட்ட வெடி தினுசுகளும், கொளுத்திய மத்தாப்பு தினுசு களும், ஞாபகத்துக்கு வந்தன.

நான் நினைத்தபடியே செல்லையாப்பயல் தொட்டிக் கட்டிலிருந்து தீபாவளியை வெகு உற்சாகத்துடன் கொண்டாடிக் கொண்டிருந் தான். அதைப் பார்த்துக் கொண்டிருந்தனர் சிலர். சுந்தரியும் அங்கே தூணில் ஜோராகச் சாய்ந்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள். அவள் அணிந்திருந்த சேலை, நீலவானத்தி லிருந்து ஒரு பதினெட்டு முழம் கிழித்தெடுத்து நெறி (கொசவம்) பிடித்து உடுத்திக் கொண் டாளோ என்று எண்ணும்படியாக இருந்தது. எதற்கோ அவள் திடீரென்று உள்ளே போனாள். போனவள் கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்து விட்டாள் - ஒரு ரோஸ் பட்டுப் புடவையை உடுத்திக்கொண்டு. அவள் கட்டி யிருந்த நீலச் சேலையின் அழகை நான் பருகிக் கொண்டிருந்தது அவளுக்குப் பொறுக்கவில்லை போலும்! ஆனால் அவள் மேலும் குற்றம் இல்லைதான். 'மொர மொர' என்றிருக்கும் கோடிச் சேலையை எவ்வளவு நேரந்தான் கட் டிக் கொண்டிருக்க முடியும்?

அவள் திரும்பி வந்ததும், செல்லையாப் பயல், ஒரு குதிரை வெடி சரியாகத் தீப் பற்றா ததினால் வெடிக்காது என்று நினைத்துக் கொண்டு, அதைத் திரும்பியும் கொளுத்துவதற்

காக அதன் பக்கத்தில் போனேனே இல்லையோ, அந்த நாசமாய்ப் போகிற வெடி வெடித்து விட்டது. உடனே அவன் திடுக்கிட்டு நடுங்கிப் போய் ஒரே குதி குதித்துத் தன்னுடைய அக்காளைப் போய்க் கட்டிக்கொண்டான். வெடியின் சத்தத்தினாலும், செல்லையாப்பயல் திடீரென்று மேலே வந்து விழுந்ததனாலும் திடுக்கிட்டுப் போனதில், அவள் கைக்காப்புகளும் வளையல்களும் ஒன்றோடொன்று மோதினதால் உண்டான அந்தத் தங்கநாதம் இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. சுந்தரிக்கு அப்பொழுது சிரிப்புத் தாங்கவில்லை. அவள் சிரித்த சிரிப்போ, ஸ்வர வரிசைகள் மாதிரி அவ்வளவு இனிமையாக இருந்தது.

இப்படியாக, அவள் நடக்கும்போதும், கைகளை அசைக்கும்போதும், உடம்பைக் குலுக்கும்போதும், சிரிக்கும்போதும் உண்டாகிற வித விதமான தொனிகளைக் கேட்டு மகிழாதபடி, 'டப் டிப்' என்று வெடிக்கும் வெடியின் சப்தத்தைக் காது செவிடுபடும்படிக் கேட்டு மகிழும் மக்களின் அறிவுதான் என்னே என்று எனக்குப் பட்டது.

௩

இப்படி இரண்டு நாட்களையும், பொழுது போனது தெரியாமல் இன்பகரமாகக் கழித்து விட்டேன். மூன்றாம் நாள் காலையில் காப்பி பலகாரம் ஆனதும், அம்மானிடம் போய், ஊருக்குப் போகவேண்டும் என்று சொன்

னேன். அவர்கள் "இன்னும் கொஞ்ச நாள் இருந்து போகலாமே" என்றூர்கள். அதற்கு நான் " இல்லை, கட்டாயம் போய் விடவேண்டியதுதான். ஊரில் வேலை யிருக்கிறது" என்று சொன்னதும், அவர்கள் பதில்கூடச் சொல்லாமல் வீட்டிற்குள் போய், "சுந்தரி!" என்று கூப்பிட்டது மட்டும் என் காதில் விழுந்தது. அதற்கப்புறம் அங்கே என்ன நடந்ததோ எனக்குத் தெரியாது. வெகு சீக்கிரத்தில் அம்மான் திரும்பி வந்து "சரி, உங்கள் இஷ்டம். சுந்தரியையும் உங்களுடன் கூட்டிக் கொண்டு போங்கள்" என்று சொல்லி விட்டார்கள். அவ்வளவுதான். நான் கொண்ட ஆனந்தத்துக்கு அளவு கிடையாது. இந்த ஆனந்தத்தை அனுபவித்துக்கொண்டிருக்கையில், அம்மான் குறுக்கிட்டு "நீங்கள் இப்படி இரண்டே நாள் இங்கே தங்கிவிட்டுத் திடீரென்று புறப்பட்டுப் போவது பற்றி நாங்களெல்லோரும் வருத்தப்படுவது ஒரு புறமிருக்க, நீங்கள் உட்கார்ந்து கொண்டிருந்தீர்களே அந்த சோபா, அதற்குத்தான் ரொம்ப ரொம்ப வருத்தமாக இருக்கும். உங்கள் மாதிரி அந்த சோபாவை இதுவரைக்கும் ஒருவரும் இவ்வளவு நன்ருக உபயோகப் படுத்தினது கிடையாது. இனிமேலும் யாரால் தான் அப்படி உபயோகப்படுத்த முடியும்?" என்று ஒரு ஹாஸ்யக் கல்வெடியைப் போட்டார்கள். எனக்கு மானம் கரையேறிவிட்டது. இனிமேல் அவர்கள் முன் நின்றுகொண்டிருக்க

முடியுமா? குனிந்த தலை நிமிராமல் சிரித்துக் கொண்டே மேடைக்குப் போய் விட்டேன்.

சட்டை, கோட்டு, அதற்குமேல் அங்கவஸ்திரம் எல்லாம் போட்டுக்கொண்டு கீழே இறங்கினேன். என்னுடைய சாமான்களும் சுந்தரியின் சாமான்களும் வாசலில் நின்றுகொண்டிருந்த இரட்டை மாட்டு வண்டியில் கொண்டு போய் வைக்கப்பட்டன. சுந்தரி, சுவரோடு சுவராய் நாணிக் கோணிக்கொண்டு நடந்துபோய் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். எல்லோரிடமும் சொல்லிவிட்டு நானும் வண்டியிலேறிக்கொண்டேன்.

வண்டியிலேறி சௌகரியமாய் உட்கார்ந்த பின் திரும்பிப் பார்த்தேன். சுந்தரியின் தங்கச்சி அழ ஆரம்பித்துவிட்டாள். அத்தைக்கும் கண் கலங்கி விட்டது. அம்மான், அங்கே என்னமோ வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த செல்லையாப் பயலை "அங்கே என்னடா பார்த்துக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டுக்கொண்டே அவன் இருந்த பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டார்கள். அப்பொழுது அத்தை, முகத்தை முந்தானையால் மூடிக்கொண்டு விம்மும் சப்தம் கேட்டது. உடனே சுந்தரியின் கன்னங்களில் இரண்டு மூன்று துளி கண்ணீர் முத்துமுத்தாய் உதிர்வதைக் கண்டேன். அப்படியே நானும் முகத்தைத் துடைக்கிற மாதிரி கைக்குட்டையை முகத்துக்குக் கொண்டு போனேன்.

இந்தக் காட்சியைக் கண்டு தாங்க முடியவில்லையோ என்னமோ, சுடலைமுத்து, "அடே மாடசாமி, விடுடா வண்டியை! ரயிலுக்கு நேரமாயிடிச்சு" என்று சொன்னான். வண்டியும் நகர்ந்தது. சுடலைமுத்து ஒரு கும்பிடு போட்டுவிட்டு நின்றுகொண்டான். வீட்டு வாசலில் நின்றவர்கள் வண்டி வெகு தூரம் போகிற வரைக்கும் அப்படியே நின்றுகொண்டிருந்தார்கள்.

ரு

அடுத்த நாள் காலை, சுமார் ஆறு மணிக்கு நானும் சுந்தரியும் என்னுடைய - அல்ல - எங்களுடைய வீடு போய்ச் சேர்ந்தோம். சேர்ந்து கொஞ்ச நேரத்துக்கெல்லாம் நான் வழக்கம் போல் தோட்டத்துப் பக்கம் போனேன். அங்கே, குளத்தின் தெற்கு மூலையில், அந்தத் தாமரை மொட்டைக் காணோம். மொட்டு எப்படி அங்கே இருக்கும் - பூவாக மலர்ந்த பிற்பாடு? அந்த மொட்டுக்கும் இந்தப் பூவுக்கும் எவ்வளவு வித்தியாசம்! இரண்டு மூன்று நாட்களில் அதே மொட்டு எவ்வளவு அழகான பூவாக மலர்ந்து விட்டது என்று எண்ண எண்ண எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்த ஆச்சரியம் காரணமாக, இன்னொரு ஆச்சரியம் ஞாபகத்துக்கு வந்தது. அதுதான் இரண்டு வருஷத்தில் சுந்தரி மாறின மாறுதல்.

இப்பொழுது இந்தத் தாமரைப் பூவை சுந்தரியும் பார்த்து மகிழ வேண்டும் என்ற

ஆசை எனக்கு உண்டாயிற்று. அப்படியே அந்தத் தாமரைப் பூவைப் பறித்துக்கொண்டு வீட்டுக்குப் போனேன். அதைச் சுந்தரியிடம் கொடுத்தேன். அவள் அந்தப் பூவை என்னை யும் காட்டிலும் அதிகமாக அனுபவித்தாள். அதை அவள் கையில் பிடித்துக்கொண்டு அதன் அழகைப் பருகிக் கொண்டிருந்தபோது, அவளுடைய முகத்தில் ஒரு புன்னகை பூத்தது. அந்தப் புன்சிரிப்பு அவளுடைய உள்ளத்தில் ஏற்பட்ட ஆனந்த உணர்ச்சியை அப்படியே எடுத்துக் காட்டிற்று.

என்ன இருந்தாலும், அந்தத் தாமரைப் பூவால் சிரிக்க முடியுமா?



## 5

# பதினெட்டாம் பெருக்கு

ஆடி மாதம் பதினெட்டாந் தேதியன்று தென்னாட்டு நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். பதினெட்டாம் பெருக்கு என்ற விசேஷத்தில் வெகுவாக ஈடுபடுவது பெண்கள்தான். ஆடவர்களோ, 'இந்தப் பெண்களுக்கு வீட்டில் பொழுது போவதில்லை. விசேஷம் என்றால் என்ன: அன்றையப் பொழுதை உண்டு களித்து ஊர்வம்பு பேசிக் கழிப்பதுதான். நமக்கு என்னத்துக்கு இந்தப் பெருக்கும் சுருக்கும்' என்று 'கிளப்'புக்குச் சென்று; சீட்டு விளையாட்டில் முனைந்து விடுவார்கள். ஏதோ வெறும் பொழுது போக்குக்கு என்றெண்ண வேண்டாம். 'துட்டு' வைத்துத்தான்.

பெண்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம். புதுப் புடவை உடுத்திக்கொண்டு கோயிலுக்குப் போவார்கள். புதிதாய்க் கலியாணம் ஆகியிருந்தால், மாப்பிள்ளையைப் பெண் வீட்டுக்காரர்கள் தங்கள் வீட்டுக்கு அழைப்பார்கள். மாப்பிள்ளையும் அவரைச் சேர்ந்தவர்களும் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளுவார்கள். பிற்பாடு எல்லோரும்

நதிக்குப் போவார்கள், சித்திரான்னங்கள் சகிதம்.

சித்திரான்னங்களை நம்மவர்கள் எப்படித் தான் கண்டு பிடித்தார்களோ! அமெரிக்காவையும் ஆகர்ஷண சக்தியையும் கண்டு பிடித்ததெல்லாம் இதற்குப் பிற்பாடுதான். அடாடா! சர்க்கரைப் பொங்கல் என்ன, புளியோதரை என்ன! ததியோதனம், தேங்காய், எலுமிச்சம்பழம், எள்ளுச்சாதம் என்ன, கொள்ளுச் சாதம் என்ன! சாப்பிட்டுப் பார்த்தாலல்லவா இவைகளுடைய அருமை பெருமையெல்லாம் தெரியும்? வெறுங் காகிதத்தில் எழுதிப் பயனென்ன?

நதிக்கரையில் படித்துறை. பெண்கள் கைகளினால் தண்ணீரை இறைத்து, சாப்பிடப்போகும் படிக்கல்லுகளைக் கழுவி விடுவார்கள். பெண்களுக்குக் கை நோவும் என்று எண்ணியோ என்னவோ, நதிப் பிரவாகம் அலைக்கைகளைக் கொண்டு பெண்களுக்கு ஒத்தாசை செய்யும். நம் நாட்டில் நதிகளை நங்கைகளாகப் பாவிப்பதன் தாற்பரியத்திலே ஒரு அம்சம் இப்பொழுதுதான் விளங்கும். மேல் படிகளுக்கெல்லாம் ஆடவர்கள் இரண்டு கையாலும் தண்ணீரை இறைப்பார்கள். பெண்களுடனே இப்படி ஆற்றுக்கு வந்த ஆடவர்கள் கொஞ்சம் அநாகரிகம் என்று கருதப்படுவார்கள். ஆனால் இதற்காக, சித்திரான்னங்களை விட்டு விடுவதா என்ன? இளம் பெண்கள்

அன்னங்களைப் பரிமாறும்போது, புராண காவியங்களிலுள்ள அன்னங்கள்தான் நதிக் கரைக்கு வந்து விட்டனவோ என்று தோன்றும்.

சில பெரியவர்களுக்கு இப்பொழுது கொஞ்சம் பயம் ஏற்படும்: எங்கே பெண்கள் கால் வழுக்கிப் பிரவாகத்தில் விழுந்து விடுவார்களோ என்று. இந்தப் பயமெல்லாம் வாலிபர்களுக்குக் கிடையாது. இளம்பெண்கள் தவறியோ வேணுமென்றோ நதியில் விழுந்துவிட்டால், ஒரே குதியில் குதித்து அவர்களைக் கரை சேர்க்கத் தயாராய்க் காத்துக் கொண்டிருப்பார்கள் வாலிபர்கள்.

எல்லோரும் சாப்பிட ஆரம்பித்துவிட்டார்கள். அப்போது ஒரு குரல்கேட்டது: "ஐயோ, மீனுக்குப் போடலையே" என்று. உடனே ஜானகி ஒரு பிடி சாதம் எடுத்து ஆற்றில் போட்டாள். அதே குரல், "என்ன தாராளம்! என்ன தாராளம்! மீனுக்கல்ல; சும்மா உட்கார்ந்திருக்காளே மீனம்மாள், அவளுக்கல்லவா போடச் சொன்னேன்" என்றது. எல்லோரும் கலகல வென்று சிரித்தார்கள். இந்தச் சிரிப்பின் ஒலியைக் கேட்டதும் ஆற்றில் போட்ட சாதத்தைத் தின்ன வந்த மீன்கள் பயந்து ஓடி விட்டன. அங்கே கூடியிருந்தவர்களெல்லாம் மீன்களைப் பொருட்படுத்தாமல், புன்சிரிப்பும் நாணமும் ஒருங்கே குடிகொண்ட மீனம்மாள்

முகத்தைப் பார்த்துப் பார்த்து வெகு நேரம் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தச் சிரிப்பு அடுத்த பதினெட்டாம் பெருக்குவரைக்கும் யார் மனசை விட்டும் அகலாது.



# பிரிந்த காதலன்

அறியாப் பருவத்தி லே - என்னை
அணைத்து மகிழ்ந்தா ரடி
பிரியவே மாட்டா ரடி - சதா
பின்னே திரிவா ரடி. 1

மானென்று சொல்வா ரடி - நல்ல
மலரென்று சொல்வா ரடி
தேனென்று சொல்வா ரடி - என்னைத்
தேடி வருவா ரடி. 2

ஏனென்று கேட்டாரில் லை-இப்போ(து)
ஏறிட்டும் பார்த்தா ரில்லை
யானென்ன செய்வே னடி - இதை
எவரிடம் சொல்வே னடி. 3



# கவி பாரதியார்

க

பாரதியாரின் இயற்பெயர் சுப்பிரமண்யம். பாரதி என்பது, பதினோராவது வயதில் புலவர்களால் அவருக்குக் கொடுக்கப்பட்ட பட்டம். அந்த இளம்பருவத்திலேயே செய்யுள் இயற்றும் சக்தி அவருக்கு ஏற்பட்டுவிட்டது.

பாரதியாரின் தகப்பனார், எட்டையபுரம் சமஸ்தானத்தில் வித்துவானாயிருந்த சின்னசாமி ஐயர் என்பவர். 'இவர், கலாசாலை உதவியின்றியே ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருந்தார். தமிழில் பண்டிதர். மேல்நாட்டுக் கணித முறைகளிலும் நிபுணர்' கலாசாலை உதவியிருந்தால் தம் மகன் தம்மையும்விடச் சான்றோன் ஆகலாம் என்று எண்ணியோ என்னவோ, பாரதியாரைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார். பாரதியாரும், பல்லைக் கடித்துக் கொண்டு, ஏதோ கொஞ்சகாலம் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தார். 'பள்ளிப் படிப்பினில் சிறிதும் மனம் பற்றிடவில்லை.' கவிதா லோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த மனசுக்கு, பள்ளிக்கூடப் படிப்பு எப்படி ஏற்கும்? கடைசி

யில் படிப்பை விட்டுவிட்டார். இந்தப் பள்ளிக்கூட அனுபவங்களை யெல்லாம் திரட்டி, இரண்டே வரிகளில் பின் வருமாறு பாடியிருக்கிறார் :

> செலவு தந்தைக்கோ ராயிரம் சென்றது
> தீதெனக்குப்பல் லாயிரம் சேர்ந்தன.

பள்ளிக்கூடத்தை விட்டபின், இயற்கை அன்னையிடத்தும், அறிவு சிறக்கும் நூல்களைப் படித்தும், அக்காலத்துப் பெரிய மகான்களுடன் பழகியும், பாரதியார் கற்ற கல்வியும் கேள்வியும் அதிவிசேஷமானது. அனுபவ வாயிலாக அநேக உண்மைகளைக் கண்டார். உணர்ந்தார். உள்ளம் உருகிப் பாடினார். உள்ளம் உவந்தும் பாடினார். சில சமயங்களில் உள்ளம் நைந்தும், கொதித்தும் பாடினார். அவர் இந்த உலகத்தில் உயிர் வாழ்ந்தது நாற்பது வருஷந்தான். ஆனால், அவருடைய கவிகளோ, நாற்பது அல்ல, நானூறு அல்ல, நாலாயிரம் வருஷம் தமிழ் மக்கள் மனசிலும் நாவிலும் வாழப்போகின்றன.

* * *

கொஞ்ச காலமாகத் தமிழன்னை எங்கேயோ ஓடி ஒளிந்துகொண்டாள். அவளுடைய அரண்மனை கவனிப்பாரற்றுக் கிடந்தது. அரண்மனையோ, சரியான அஸ்திவாரத்தின் மேல் வயிரக்கற்களினால் கட்டப்பட்டது. சுகமாக வசிப்பதற்கு வேண்டிய வசதிகளெல்லாம் செய்யப்பட்டிருக்கிறது. சமையலறை முதல்

சங்கீத மண்டபம் வரை எல்லா இடங்களும் வெகு அழகாகக் கட்டப் பட்டிருக்கின்றன. ஆனால், வெகுநாளாகக் கவனிப்பாரற்றுக் கிடந்ததனால் இந்த நிலைமைக்கு வந்துவிட்டது. எல்லாக் கதவுகளும் சாளரங்களும் மூடப்பட்டிருந்ததால், உள்ளே இருள் குடிகொண்டு விட்டது. இருளுக்குச் சகாக்களாக, மூலைக்கு மூலை நூலாம்படையும், வௌவால்களும் தொங்கிக் கொண்டிருந்தன.

இந்த அரண்மனையைப் பாரதியார் பார்த்தார். அவருக்குப் பார்க்கச் சகிக்கவில்லை. "அடாடா! எப்பேர்ப்பட்ட அரண்மனை! எப்படிச் சீர்கேடுற்றிருக்கிறது!" என்று எண்ணினார். உடனே, முதல் வேலையாக, வாசற் கதவுகளையும் சாளரங்களையும் அகலத் திறந்து வைத்தார். வெளிச்சம் உள்ளே பாய்ந்தது. இருள் அகன்றது. வௌவால் கூட்டம் எடுத்தது ஓட்டம். நூலாம்படையையெல்லாம் 'ஒட்டடை' அடிக்கச் சொன்னார். சுவரெல்லாம் வெள்ளையடிக்கப்பட்டது. கதவுகளுக்கும் சாளரங்களுக்கும் வர்ணம் பூசப்பட்டது. வௌவால்கள் தொங்கிக் கொண்டிருந்த இடங்களில் லஸ்தர் குளோப்புகள் தொங்கவிடப் பட்டன சுவர்களில் பாரதியார் கையாலேயே எழுதிய சித்திரங்கள் தொங்கவிடப்பட்டன. அந்தப் படங்களைப் பார்க்கப் பார்க்கப் பரம சந்தோஷமும் ஆச்சரியமும் ஏற்படுகிறது. பாரதியாரின்

உள்ளத்தின் வேகத்தையும் ஆழத்தையும் அவற்றில் கண்டு சந்தோஷப் படுகிறோம்.

இதையெல்லாம் காட்டிலும் மேலான காரியம் ஒன்றையும் பாரதியார் செய்தார். அதாவது அரண்மனைச் சங்கீத மண்டபத்தின் மத்தியில் கலைவாணியின் கற்சிலை ஒன்றை வைத்தார். அதன் பக்கத்தில் ஒரு கைவிளக்கையும் வைத்தார். கைவிளக்கு சதா கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. அதன் ஒளியில், கலாஞானமும் தெய்விகத் தன்மையும் விளங்கும் கலைமகளின் திருமுகம் பிரகாசித்துக் கொண்டிருந்தது. இவ்வளவும் செய்துவிட்டு, எங்கேயோ ஒளிந்து கொண்டிருந்த தமிழன்னையைத் தேடிக் கொணர்ந்தார். இன்னமும் அவள் அரண்மனையில் வீற்றிருக்கிறாள். எப்போதும் சிரித்த முகம். அடிக்கடி மழலைக் கிளிமொழியில் நல்ல நல்ல வசனங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறாள். அடிக்கடி பாடுகிறாள்; ஆடுகிறாள்; துள்ளி விளையாடுகிறாள். மொத்தத்தில் ஆனந்தமயமாக இருக்கிறாள்.

இதுதான் பாரதியார் தமிழுக்கும் தமிழர்களுக்கும் செய்த பேருபகாரம்; அரும்பெருந் தொண்டு. இதைத்தான் அவர் தமிழுக்குக் கொடுத்துதவிய 'புத்துயிர்' என்கிறோம். இதையேதான் தமிழிலக்கியத்தில்இப்பொழுது கொஞ்சகாலமாக ஏற்பட்டு வரும் மறுமலர்ச்சிக்கு 'மூல வித்து' என்றும் சொல்லுகிறோம். இந்த மறுமலர் வாடி வதங்கிப் போய்விடாத

படி அதற்குத் தண்ணீரோ அல்லது கண்ணீரோ விட்டுக் காக்கத் தமிழர்கள் கடமைப்பட்டுள்ளார்கள். இந்தக் கடமையைச் செய்வதில் இன்பமே உண்டு. பாரதியார் பாடல்களைப் பாடுவதிலும், அவற்றின் மூலம் நம்முடைய பழைய இலக்கியங்களை உணர்ந்து அனுபவிப்பதிலும் இன்பமல்லாமல் வேறென்ன இருக்கக்கூடும்?

* * *

'எளிய வாழ்வும் உயரிய கருத்தும்' உடையவர்கள் என்று மேல்நாட்டார் நம்மைப் புகழ்கிறார்கள். எளிய வாழ்வு என்றால் அநாகரிக வாழ்வு என்று அர்த்தமல்ல; மேலான வாழ்வு என்று கொள்ள வேண்டும். இதேபோல், மேலான கவிஞர்களெல்லாம் எளிய நடையைக் கையாளுகிறார்கள் என்றால், அந்த நடை என்னவோ வெகு சுலபமானது, யாரும் எழுதிவிடலாம் என்று எண்ணுவது தப்பு. அப்படி எண்ணிக்கொண்டு, உணர்ச்சி பாவமும் அதற்கேற்ற மனோபக்குவமும் இல்லாத சிலர், கவிதைகள் எழுத முயன்று சித்தி பெற முடியாமல் விழிப்பதைப் பார்க்கிறோம். பாரதியாருக்கு எளிய நடை சாத்தியமாக இருந்திருக்கிறது. அவருக்கும், இந்த நடை வெகுநாளைய மனப்பழக்கம், கைப்பழக்கம் காரணமாகத்தான் வந்திருக்க வேண்டும். எழுதுகோலை எடுத்த மாத்திரத்தில் எளிமை நயம் ஏற்பட்டுவிடாது. இன்னும், பாரதியாரைப்

போன்ற கவிகளுக்கு, எளிய நடையில்தான் உணர்ச்சி பாவங்களை வெளியிட முடியும். அதுதான் அவர்களுக்கு இயற்கை. கரடு முரடாக எழுதுவது ஏட்டுச் சுரைக்காய்களுக்கு இயற்கை. வசனத்திலும், அதைவிட, கவிதையிலும், இயல்பான, நேரான நடையைப்பாரதியார் எப்படிக் கையாண்டிருக்கிறார் பாருங்கள்.

"இந்த உலகமே பொய்' என்று நமது தேசத்தில் ஒரு சாஸ்திரம் வழங்கி வருகிறது. சன்னியாசிகள் இதை ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கட்டும். அதைப்பற்றி, இந்த நிமிஷம் எனக்கு வருத்தமில்லை. குடும்பத்தில் இருப்போருக்கு அந்த வார்த்தை பொருந்துமா? நடு வீட்டில் உச்சரிக்கலாமா? அவச் சொல்லல்லவா? நமக்குத் தந்தை வைத்து விட்டுப்போன வீடும் வயலும் பொய்யா? தங்கச் சிலை போல நிற்கிறாள் மனைவி. நமது துயரத்துக்கெல்லாம் கண்ணீர் விட்டுக் கரைந்தாள். நமது மகிழ்ச்சியின் போதெல்லாம் உடல் பூரித்தாள். நமது குழந்தைகளை வளர்த்தாள். அவள் பொய்யா? குழந்தைகளும் பொய் தானா? பெற்றவரிடம் கேட்கிறேன்: குழந்தைகள் பொய்யா? நமது வீட்டில் வைத்துக் கும்பிடும் குலதெய்வம் பொய்யா?"

இதே உண்மைகளைக் கவிதையில் எப்படி வெளியிடுகிறார் என்றும் பாருங்கள்:

நிற்பதுவே, நடப்பதுவே,
பறப்பதுவே நீங்களெல்லாம்
சொற்ப னந்தானோ? - பல
தோற்றம யக்கங்களோ?
கற்பதுவே, கேட்பதுவே,
கருதுவதே நீங்களெல்லாம்
அற்ப மாயைகளோ? - உம்முள்
ஆழ்ந்த பொருளில்லையோ?

இந்த மாதிரித் தெளிவும், எளிமையும், அழகும் கொண்ட கவிதைகள் எத்தனையோ பாரதியார் பாடியிருக்கிறார். அத்தனைக் கவிதைகளையும் கற்றுணர இந்த வாழ்நாள் காணாது என்றால் அது மிகையல்ல. ஆனால், பானைச் சோற்றுக்கு ஒரு பருக்கை பதம் என்றபடி, அவருடைய கவிதைகள் சிலவற்றைப் பார்த்தால் போதும், அவருடைய கவிதா மேன்மை தெரிந்துவிடும்.

அவருடைய கவிதைகளெல்லாம் மூன்று வித உணர்ச்சிப் பெருக்கினால் வெளியிடப்பட்டவை என்று சொல்லலாம். அவருக்குத் தமிழினிடத்தில் உள்ள பக்தி காரணமாக, தமிழின் பெருமையைப் பற்றியும் தமிழ் இலக்கியத்தைப் பற்றியும் பாடல்கள் பல பாடியிருக்கிறார். தீவிர தேசபக்தி காரணமாக, தேசீயப் பாடல்கள் பல இயற்றியுள்ளார். தெய்வபக்திப் பெருக்கால், சமய உண்மை பொதிந்துள்ள அநேக பாடல்கள் பாடியிருக்கிறார். அவருக்குச் சமயவெறியோ மதப்பித்தோ கிடையாது. பரந்த நோக்கம் கொண்டவர். முருகன், சிவ

பெருமான், கண்ணன் முதலிய தெய்வங்களைப் பாடியிருக்கிறார். மகமதுநபி, ஏசுநாதர் முதலிய அவதார புருஷர்களைப் பற்றியும் பாடியிருக்கிறார். ஆனால், 'சமயம் கடந்த மோன சமரசத்தில்' தான் அவருக்குப் பற்று அதிகம். எல்லாம் ஒன்று என்ற உண்மையை உணர்ந்தவர். தாம் பாடிய புதிய ஆத்திசூடியின் காப்புச் செய்யுளில் அதை வெகு அழகாக வெளியிட்டிருக்கிறார் :

...பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே ; அதன் இயல் ஒளியுறும் அறிவாம்.
அதன் நிலை கண்டார் அல்லலை அகற்றினர் ;
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம் !

இதுவரைக்கும் பாரதியாரின் அருமை பெருமைகளைப் பற்றி என்னாலியன்ற அளவு வசனத்தில் சொல்ல முயன்றேன். வசனம் ரசமற்றது. மனோதர்மத்துக்கே இடமில்லாதது. இதன் மூலம் ஒரு கவியின் பெருமையைப் பற்றி எவ்வளவு எடுத்துச் சொல்லினும் என்ன பயன் ? இளைத்துத்தான் இருக்கும். கவியின் புகழைக் கவிதையின் மூலந்தான் பரிபூரணமாக வெளியிடலாம். அப்படி வெளியிட நான் வீணில் முயலவேண்டிய அவசியமில்லை. நாஞ்சில் நாட்டுக் கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளை ஏற்கனவே பாரதியாரின் புகழைப் பாடியிருக்கிறார். ஒரு பட்டிக்காட்டான் பாரதி

யின் கவிதையில் ஈடுபட்டு உணர்ந்த அனுபவத்தை இன்னொரு பட்டிக்காட்டானுக்கு எப்படிச் சொல்லுகிறான் பாருங்கள் :

பாட்டுக் கொருபுலவன் பாரதியடா - அவன்
பாட்டைப்பண் ணோடொருவன் பாடினானடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா - அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா.

குயிலும் கிளியும்பாட்டில் கூவுமேயடா - மயில்
குதித்து குதித்துநட மாடுமேயடா
வெயிலும் மழையுமதில் தோன்றுமேயடா - மலர்
விரிந்து விரிந்துமணம் வீசுமேயடா.

உள்ளந் தெளியுமொரு பாட்டிலேயடா - மிக்க
ஊக்கம் பிறக்குமொரு பாட்டிலேயடா
கள்ளின்வெறிகொளுமோர்பாட்டிலேயடா-ஊற்றாய்க்
கண்ணீர் சொரிந்திடுமோர் பாட்டிலேயடா.

உ

## பாரதி தினம்

உயிரோடு இருக்கிற வரைக்கும் ஒருவருடைய இறந்த நாளைக் கொண்டாட முடியாது. பிறந்த நாளைத்தான் கொண்டாடலாம். உயிர் நீத்தபின் இறந்த நாளைக் கொண்டாடுவது நமக்குள் வழக்கமாய் இருக்கிறது. காலஞ் சென்றவர்கள் சம்பந்தப்பட்ட மட்டும், அவர்களுடைய பிறந்த நாளைக்காட்டிலும் இறந்த நாளே சிறந்த நாள். இறப்பதென்பது அந்தச் சமயத்துக்கு உற்றார் உறவினர்களுக்கு வருத்தத்தைக் கொடுத்தாலும், உண்மையில் அது தான் வாழ்க்கையிலேயே மிகச் சந்தோஷ

மான சம்பவம். பிறப்பது துன்பம்; இறப்பதே இன்பம் என்று வேதாந்தம் வேறு போதிக்கிறது. வேதாந்தம் ஒருபுறம் இருக்கட்டும். ஒரு மகானுடைய பிறந்த தினம் அநேகமாக ஒருவருக்கும் ஞாபகம் இருப்பதில்லை. ஏனென்றால், அவர் சாதாரணக் குழந்தையாகத்தான் பிறந்தார். மகானாகப் பிறக்கவில்லை. ஆனால், அவர் மகான் என்று பேர் பெற்ற பிற்பாடுதான் இறந்தார். ஆகையினால் அவர் இறந்த நாள் அநேகமாக எல்லோருக்கும் ஞாபகம் இருக்கும். அதனால்தான் பெரியவர்களுடைய இறந்த நாளைக் கொண்டாடுவது நம் நாட்டு வழக்கமாக இருக்கிறது போலும்.

பாரதியார் பிறக்கும்போது நம்மையெல்லாம் போல் சாதாரணக் குழந்தையாகத்தான் பிறந்தார். பாரதியார் 'பிறந்திருக்கிறார்' என்பது தமிழ் நாட்டில் அநேகருக்கு ரொம்ப நாளைக்குத் தெரிந்திருக்காது. ஏன், அவர் பிறந்து வளர்ந்து, பள்ளிப் படிப்பில் மனம் பற்றாது, தேச சஞ்சாரம் செய்தும், திருக்குறள், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், கம்பராமாயணம், சித்தர்பாடல்கள், கிளிக்கண்ணி, நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, முதலிய கவிதா நூல்களைப் படித்துணர்ந்து பல பாடல்கள் பாடிய பின்னும், பாரதி என்று ஒரு கவிஞர் தமிழ் நாட்டில் இருக்கிறார் என்று பலருக்குத் தெரியாது. அவருடைய கவிதைகளைப் படித்து

அவருக்குப் புகழ்மாலை பாடியதெல்லாம், அவர் இறந்த பிற்பாடுதான். அவர் வாழ் நாளிலேயே அவர் இறந்த அன்றுதான் அவருடைய பேரும் புகழும் உச்ச நிலையை அடைந்திருக்கும். அந்த நாள் அநேகர் மனசில் பதிந்திருக்கும். அவருடன் நெருங்கிப் பழகிய புண்ணியாத்மாக்களுக்கு, உயிருள்ளளவும் அந்த நாளைப் பற்றிய ஞாபகம் மனதை விட்டு அகலவே செய்யாது. நமக்கும் அந்த ஞாபகம் அகலக் கூடாது என்பதற்காகத் தான் பாரதி தினம் என்று அவர் இறந்த நாளைக் கொண்டாடுகிறோம்.

இப்பொழுது பாரதியாருடைய பாட்டியார் இருந்தால் என்ன சொல்வார்? "அடாடா! இன்னிக்கு நம்ம சுப்ரமண்யம் இல்லாமற் போனானே! இருந்தால், இந்தக் கொண்டாட்டங்களையெல்லாம் என்னமா அனுபவிப்பான்? உம்-அவன் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்" என்று. பாட்டியாருடன் மனமொத்து பாரதியாருடைய மரணத்தைக் குறித்து அனுதாபம் காட்டுவது நம்மால் முடியாத காரியம். நம்முடைய கடமை என்னவென்றால், இந்தச் சந்தர்ப்பத்தில் அவருடைய கவிதைகளை ஞாபகப் படுத்திக்கொள்ளவேண்டும் என்பதுதான். இந்தக் கடமையைச் செய்வதிலோ, இல்லாத இன்பம் உண்டு.

* * *

உண்மையான இலக்கியம், கவிதையானாலும் சரி, வெறும் வசனமானாலும் சரி,

மூன்று முக்கிய பண்புகளை எடுத்துக் காட்ட வேண்டும். ஒன்று, இலக்கியாசிரியருடைய நாட்டுக்குரிய தனிப்பண்பு. இரண்டாவது, அந்த நாட்டினரின் தனிப்பண்பு. மூன்றாவது, அந்த நாட்டில் வழங்கும் மொழியின் தனிப் பண்பு. இம்மூன்று தனிப் பண்புகளும் எவ்வளவுக் கெவ்வளவு நன்றாக வெளியிடப் படுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு அந்த இலக்கியம் மேம்பட்டதாகும்.

இம்மூன்று தனிப் பண்புகளும் உண்மை இலக்கியத்தில் தாமே வந்து அமையும். கவிஞராய் உள்ளவர் தாம் உணர்ந்ததையும், அனுபவத்தில் கண்டதையும் பாடி விட்டால் போதும். மேலே சொல்லப்பட்ட மூன்று பண்புகளும் கவிதையில் வந்து தீர வேண்டியதுதான். இன்னும், இம்மூன்று பண்புகளையும் தனித் தனியே பிரித்துப் பார்க்கவும் வேண்டாம். ஒரே கவிதையில் மூன்றும் வெளிவந்திருப்பதையும் பார்க்கலாம். நாட்டைப் பற்றிச் சொல்லும்போது நாட்டினரைப் பற்றிச் சொல்ல வேண்டியதுதான். மக்களை வைத்துத் தான் நாட்டுக்கு மதிப்பு. நாட்டையும் நாட்டு மக்களையும் வர்ணிக்கும்போது, மக்கள் பேசும் பாஷையின் தனிப்பண்பு சோபிக்காமல் போகுமா? முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, இம்மூன்று பண்புகளிலும், இலக்கியம் சம்பந்தப்பட்ட மட்டில் பாஷையின் தனிப் பண்பே மிக முக்கியமானது.

தமிழ்நாட்டில் திருவள்ளுவர், மூத்தொள்ளாயிர ஆசிரியர், கம்பர், பாரதம் பாடிய பெருந்தேவனார், கலிங்கத்துப்பரணி ஆசிரியர் முதலிய கவிஞர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். கடவுள்கிருபையால், அவர்களுடைய நூல்களில்சில பகுதிகளேனும் நம்முடைய கைக்குக் கிடைத்திருக்கின்றன. இந் நூல்களைப் படிக்கப் படிக்க முற்காலத்தில் நம்முடைய நாடும், மக்கட் சமுதாயமும், தமிழ் மொழியும் எந் நிலைமையில் இருந்தன என்பது ஒருவாறு தெரிய வருகிறது. இந்த நூல்களில், மேற்சொன்ன மூன்று தனிப் பண்புகளும் எப்படி வெளியிடப் பட்டிருக்கின்றன என்பதை அறிந்து அனுபவிப்பது ரொம்பவும் கஷ்டம். அதற்கு, எவ்வளவோ ஆராய்ச்சி அறிவும், இலக்கிய உணர்ச்சியும், சீரிய மனோதர்மமும் வேண்டும். இத்துணை அறிவும் அனுபவமும் ஒரு சிலருக்குத்தான் இருக்க முடியும்.

ஆனால், பாரதியார் கவிதை சம்பந்தப்பட்ட மட்டும், நம்முடைய நிலைமை வேறுவிதமாக இருக்கிறது. பாரதியார் நம்மைச் சேர்ந்தவர். நம்முடைய காலத்திலேயே இருந்தவர். நாம் கண் முன்னால் பார்க்கிற நாட்டு வளத்தையும் இயற்கைக் காட்சிகளையும் அழகாக வர்ணித்திருக்கிறார். நம்முடைய நிலைமையையே சித்திரித்திருக்கிறார். நம்முடைய உணர்ச்சி பாவங்களையே கொட்டியிருக்கிறார். வீட்டிலும், வீதியிலும், விளையாட்டு மைதானத்திலும்

பேசும் நம் பேச்சு மொழியையே தம் கவிதை யில் கையாண்டிருக்கிறார். நாம் கவனிக்க வேண்டியதெல்லாம், நமக்கு நன்றாகத் தெரிந்த விஷயத்தையே எப்படிக் கவிதையில் கையாண் டிருக்கிறார் என்பதுதான். இதையே இன்னும் முற்றிலும் உணர்ந்தபாடாக இல்லை. அப்படி யிருக்க, நம்முடைய அனுபவத்துக்குள் வராத விஷயங்களை எடுத்துக் கையாண்ட பண்டைக் காலக் கவிகளின் நூல்களைப் படித்து அனுப விப்பது என்பது எங்ஙனம் சாத்தியமாகும்? சொந்தத் தாத்தாவைப் பற்றித் தெரியாத கல் லூரி மாணவன், கிறிஸ்து பிறப்பதற்கு முன் னால் ஐரோப்பாவில் ஆட்சி புரிந்து வந்த சார்லி மெய்ன் சக்கரவர்த்தியின் பிறந்த நாள், அவர் சிம்மாசனம் ஏறிய நாள், போரில் வெற்றி பெற்ற நாள், தோல்வியுற்ற நாள், இறந்த நாள் முதலிய தேதி விவரங்களை மனப்பாடம் பண்ணிக் கரைத்துக் குடிக்கும் கணக்குத்தான் இது. முதலில் தாத்தாவைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்; பிற்பாடுதான் மற்ற தெல்லாம்.

பாரதியார் நமக்குத் தாத்தாமாதிரி. நமக் குச் சொந்தமான கவி, நம்முடைய நாட்டுக்கவி மட்டுமல்ல, நம்முடைய வீட்டுக்கவி என்றே சொல்லலாம். அப்படி அவருக்கும் நமக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது. அவர் நமக்கு என்ன செய்திருக்கிறார்? தங்கச் சட்டம் போட்ட ஒரு சாளரத்தைத் திறந்து வைத்திருக்

கிறார்: நாம் என்ன செய்ய வேண்டும்? சாளரத்தின் வெள்ளிக் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு, திருக்குறள், முத்தொள்ளாயிரம், கம்ப ராமாயணம், கலிங்கத்துப்பரணி முதலிய கவிதை யுலகக் காட்சிகளைப் பார்த்து மகிழ வேண்டும்.

*    *    *

சிறு பையனாக இருந்தபோது, சொந்த ஊரில் கிராமப் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தேன். பள்ளிக்கூடம் போய் வரும் நேரம் தவிர மற்றப் பொழுதெல்லாம் விளையாட்டுத்தான். ஆற்று மணலில், பலீன் சடுகுடு, கிளியந்தட்டு எல்லாம் விளையாடுவோம். விளையாடிவிட்டு நதியில் இறங்கிக் குளிப்போம். வெள்ளம் பெருக்கெடுத்து ஓடினால், ஆற்றைக் 'குட்டப்புழுதி' யாக்கிவிடுவோம். இதெல்லாம் அந்தக் காலம். இப்பொழுதோ, நதியின் பிரவாகத்தைப் பார்க்கவே கொடுத்து வைக்கவில்லை. கொடுத்து வைத்ததெல்லாம் இந்த அரையங்குலக் குழாய்த் தண்ணீர்தான். அன்றைக் கொருநாள், சொந்த ஊரில் மழை பெய்திருப்பதாகவும், ஆற்றில் ஜலம் கரைபுரண்டு ஓடுவதாகவும் பத்திரிகையில் போட்டிருந்தது. உடனே இன்ப நினைவுகள் ஞாபகத்துக்கு வந்தன. சிறு பிராயத்தில் ஆற்று மணலிலும், நீரிலும் விளையாடின காட்சிகள் அப்படியே மனக்கண்முன் வந்து நின்றன. அன்றைக்குத் தான் முதல் முதல் சொந்த ஊரைப் பற்றிப்

பெருமை யடித்துக்கொண்டேன். சொந்த ஊரின் மகிமையை அன்றுதான் உணர்ந்தேன்.

பாரதியார் தேச சஞ்சாரம் செய்தார் என்று சொன்னேனல்லவா? வங்காளத்திலேயே கொஞ்ச நாள் தங்கி யிருந்தார். வங்காளிகளோ, சொந்த நாட்டை, அதாவது வங்காளத்தை, பெற்ற தாயினும் மேலாகக் கருதுபவர்கள். அப்படிப் பட்டவர்கள் மத்தியில் இருந்த பாரதியாருக்கு ஏற்கனவே உள்ள தாய் நாட்டு அன்பு பன்மடங்கு அதிகமாகி இருக்கும். அப்படியே தமிழ்நாட்டைப் பற்றிப் பகற்கனவுகள் கண்டிருப்பார். மறுபடியும், தமிழ்நாட்டுக்கு வந்ததும், பகற்கனவுகள் நனவுகளாகக் காட்சி அளிப்பது இயற்கைதானே? இதில் பாரதியாருக்கு எவ்வளவு உற்சாகம் இருந்திருக்கும்? இந்த உற்சாகத்திலிருந்து பிறந்ததுதான்—

செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே

என்ற பாட்டு. தமிழ் நாட்டைப்பற்றிக் கும்மி மெட்டில் ஒரு பாட்டு எழுதுவோ மென்று உட்கார்ந்தால், மறுபடியும் மறுபடியும் "செந்தமிழ்....பாயுது காதினிலே" என்ற அடிகள் தான் மனசுக்கு வருகின்றன. தமிழ் நாட்டைப் பற்றி வேறு விதமாகப் பாடவே முடியாதோ என்ற மலைப்பு ஏற்படுகிறது. திரும்பத் திரும்ப அந்த இரண்டு அடிகளைப் பாடிக்கொண்டிருந்

தால் போதும் என்றிருக்கிறது. 'பிள்ளைப் பிராயத்தில்' பப்ரமண்டு வில்லை வாங்கிச் சாப்பிடுவதுண்டு. சில பையன்கள் 'நறுக் நறுக்' என்று கடித்து வில்லைகளை நிமிஷத்துக்கு நாற்பது மேனிக்குத் தின்று விடுவார்கள். இன்னும் சில பையன்கள், வில்லையை வாயில் போட்டுக் கால்மணி நேரம் கழித்து நாக்கை நீட்டுவார்கள்; நாக்கு நுனியில் வில்லையின் அந்தியகால நிலைமையைப் பார்க்கலாம். இந்த இனத்தைச் சேர்ந்தவன்தான் நானும். 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்ற பாட்டைப் பாடும்போதெல்லாம் எனக்கு மேலே சொல்லப்பட்ட அனுபவந்தான் ஞாபகத்துக்கு வருகிறது.

எனக்கு நன்றாய் ஞாபகம் இருக்கிறது. நான் நாலாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். வாத்தியார் பூகோளப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். நான் துணிந்து, "இந்தியாப் படம் போட்டுச் சொல்லித் தந்தால் நீங்கள் சொல்வதெல்லாம் நன்றாய் விளங்கும், ஸார்" என்று சொல்லிவிட்டேன். வாத்தியார், நரசிம்மாவதாரம் எடுத்து, பின்வரும் வார்த்தைகளைக் கக்கினார்: "இந்தப் பள்ளிக்கூடத்தில் கொடுக்கிற சம்பளத்திற்குப் படம் வேறு கேடா?" என்று.

பாரதியார் குழந்தைகளுக்கு (நமக்குந் தான்) பூகோளப் பாடம் எப்படி நடத்துகிறார்

பாருங்கள். படம் போட்டா? இல்லை. ஆனால், இந்திய தேசத்தையே கண் முன்னால் கொண்டுவந்து நிறுத்தி விடுகிறார்:

வடக்கில் இமயமலை பாப்பா - தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா
கிடக்கும் பெரியகடல் கண்டாய் - இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா.

கோபத்தின்மூலம் அன்பைக் காட்ட முடியுமா? குழந்தை ஏதாவது துஷ்டத்தனம் செய்வான். தாயார் குழந்தையைக் கூப்பிட்டு விட்டு, கன்னத்தில் ஒரு அடி வைப்பாள். இன்னொரு குழந்தை துஷ்டத்தனம் செய்தால் அதைக் கோபித்துக் கொள்ளுவாளா? அடிப்பாளா? மாட்டாள். ஏன்? பாத்தியதை இல்லாததனாலா? அடிப்பதற்கு வேண்டிய அளவு அன்பு இல்லாததனால்தான். தன் குழந்தையை அடித்ததற்கு அன்புதான் காரணம் என்பது மறு நிமிஷம் தெரிந்துவிடும். குழந்தை அழும். அதை வாரி எடுத்து மடியில் போட்டுக்கொண்டு கன்னத்தில் அடித்ததை முத்தமிட்டு அழிக்க முயலுவாள். கட்டி அணைத்து முத்தமிடுவதும் தாய்தான், கன்னத்தில் அடிப்பதும் தாய் தான். இதே ரீதியில், பாரதியார் அன்பு காரணமாக எப்படி நம்மையெல்லாம் கோபித்துக் கொள்ளுகிறார் பாருங்கள்:

நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்!
கொஞ்சமோ பிரிவினைகள் - ஒரு
கோடியென் ருல்அது பெரிதாமோ?
ஐந்துதலைப் பாம்பென்பான் - அப்பன்,
ஆறுதலை என்றுமகன் சொல்லிவிட்டால்,
நெஞ்சு பிரிந்திடுவார் - பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்.

ஒரு தாய்க்கு அவளுடைய குழந்தையின் மேல் எவ்வளவு அன்பு இருக்கிறது. அந்த அன்பை அவள் எப்படி வெளியிடுகிருள் என்பதைக் கவிஞர்கள் அடிக்கடி கையாளும் அற்புத விஷயங்கள். தாய்ப்பண்பைக் கவிதையில் வெளியிடுவதற்கு, கவிஞர் தாயாகவே ஆகிவிட வேண்டும். கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துக்கொண்டு பாரதியார் தாயன்பை எப்படிச் சொரிகிருர் பாருங்கள்:


பிள்ளைக் கனியமுதே - கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே
அள்ளி அணைத்திடவே - என்முன்னே
ஆடிவருந்தேனே!

மார்பில் அணிவதற்கே - உன்னைப்போல்
வைரமணிகளுண்டோ
சீர்பெற்று வாழ்வதற்கே - உன்னைப்போல்
செல்வம் பிறிதுமுண்டோ!

தாய்ப் பண்பை வெளியிடும்போது, தமிழின் தனிப் பண்பு எப்படி வெளிவருகிறது! 'பிள்ளைக் கனி அமுதே,' 'பேசும் பொற்சித்

திரமே,' 'ஆடி வரும்தேனே' - இவை தமிழன்னை மார்பிலணிவதற்கு ஏற்ற 'வைர மணிகள்' தான்.

**சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே - அதைத்**
**தொழுது படித்திடடி பாப்பா.**



# சுந்தரியாள்

சுந்தரி அதிரூப சுந்தரிதான். அவளுக்கு 'வயசோ பன்னிரண்டு, வாயிதழ் கற்கண்டு.' தினம் தினம் ஆற்றுக்குக் குளிக்க வந்துவிடுவாள். குளிக்க வரும்போதெல்லாம் குடத்தையும் எடுத்துக்கொண்டு வருவாள். அந்தக் குடத்தினல் அவள் இடுப்புக்கு அழகு ஏற்பட்டதா? அல்லது, அவள் இடுப்பினல் அந்தக் குடத்துக்கு அழகு ஏற்பட்டதா? இது விஷயம் எனக்கு இன்னும் சந்தேகந்தான்.

வீட்டிலிருந்து, இடுப்பில் குடத்துடன், மெட்டி குலுங்க நடந்து வருவாள். அதோ அந்தப் புளியமரத்தின் பக்கம் வந்ததும், மெட்டி குலுங்கும் நாதம் நின்றுவிடும். ஏனென்று திரும்பிப் பார்த்தால், புளியங் கொழுந்தையும் பூவையும் உன்னி உன்னிப் பறித்துக் கொண்டிருப்பாள். அந்தக் காட்சி இன்பக் காட்சிதான். மான் தலையைத் தூக்கி இளந்தளிர்களைத் தின்னும் காட்சி ஞாபகத்துக்கு வந்துவிடும். ஆனல், இந்த ஞாபகத்தை இன்னொரு காட்சி மறக்கடித்து விடும். புளியங் கொழுந்தையும் பூவையும் உன்னி உன்னிப் பறிப்பாள் என்று சொன்னேனல்லவா? அப்

படிப் பறிக்கும்பொழுது அவளுடைய கைக் காப்புகள், 'இதுதான் சமயம்' என்று விறு விறு என்று கீழே இறங்கி, அவளுடைய கன காம்புஜங்களை நன்றாய் அணைத்துக் கொள்ளும்.

கொழுந்தையும் பூவையும் குடத்துக்குள் போட்டுக் கொண்டாள். மறுபடியும் மெட்டி குலுங்க ஆரம்பித்தது. ஆற்றங்கரைக்கு வந்ததும் அழகாகக் குனிந்து ஒரு பிடி மண் எடுத்துக் குடத்தில் போட்டுக்கொண்டாள். குனியும் போது, முதுகில் தொங்கிக்கொண்டிருந்த பின்னல்சடை கழுத்தைச் சுற்றி மார்பில் வந்து விழுந்துகொண்டது. அது கொஞ்ச நேரந்தான் மார்பில் அப்படியே கிடக்கட்டுமே! கிடந்தால் என்ன குறைந்து விடுமோ? சுந்தரி அதை முதுகுப்புறம் தள்ளிவிட்டாள். அது இரண்டு ஆட்டம் ஆடிவிட்டு முதுகோடு முதுகாய் ஒட்டிக் கொண்டது. அதற்கு விதித்த விதி அவ்வளவு தான்.

மறுபடியும் மெட்டி சப்திக்க ஆரம்பித்தது. ........இப்பொழுது மெட்டியின் நாதம் தண்ணீருக்குள் அமுங்கி விட்டது. அப்படியே சுந்தரி தண்ணீரில் உட்கார்ந்தாள். குடத்திலிருந்து மஞ்சள், சீக்காய், வாசனைப்பொடி, (-வாசனைப் பொடி என்று உனக்கு எப்படித் தெரிந்தது என்று கேட்காதீர்கள். வாசனைப் பொடியாய்த் தான் இருக்க வேண்டும். இல்லை, அது ஒரு மாயப்பொடியாக இருக்க வேண்டும்-) புளியங் கொழுந்து, பூ எல்லாவற்றையும் எடுத்து பக்

10540
0.31:6x78
...RSITY EXTENSION...

கத்தில் கிடந்த துணி துவைக்கும் கல்லில் வைத்தாள்.

குடத்தை விளக்க ஆரம்பித்தாள். விளக்கினுள், விளக்கினுள், வெகுநேரம் விளக்கினுள். குடம் தேய்ந்து போய்விட்டால் பரவாயில்லை; அவள் கை தேய்ந்து விடுமோ என்று எனக்குப் பயம். கொஞ்சநேரம் விளக்கியபின், தண்ணீரில் அலம்பிவிட்டுக் குடத்தைக் கொஞ்ச நேரம் பார்த்தாள். பித்தளைக்குடம் தங்கக்குடம் ஆகி விட்டது. ஆனுல், இதில் சுந்தரி திருப்தியடைந்துவிடவில்லை. மறுபடியும் விளக்க ஆரம்பித்தாள். விளக்கிவிட்டுத் தண்ணீரில் ஒரு சுற்றுச் சுற்றி நன்ருக அலம்பினுள். இப்பொழுது குடம் அவள் நிறத்துக்கே வந்து விட்டது. இதற்குமேல் குடம் நிறங்கொடுக்காது என்று எண்ணிவிட்டாள் போலும். அப்படியே குளிக்கப் போய்விட்டாள். பத்தரை மாற்றுத் தங்கத்துக்கும் மேலான அவள் மேனியை வாசனைப்பொடி போட்டு 'விளக்க ஆரம்பித்து விட்டாள்.

குளித்து முடிந்ததும், குடத்தை எடுத்துக் கொண்டு நடு ஆற்றுக்குப் போய், நல்ல தண்ணீராகக் குடத்தில் மொண்டுகொண்டு வீட்டுக்குப் புறப்பட்டு விட்டாள். இவ்வளவு நேரமும் நான் கொஞ்ச தூரத்துக்கு அப்பாலிருந்து தான் எத்தனையோ தரம் உடம்பைத் தேய்த்துக் குளித்துக் கொண்டிருந்தேன். அவள்

என்னை ஏறிட்டுப் பார்க்க வேண்டுமே? கிடையாது. குடத்தைப் பார்த்த பார்வையில் பதினுயிரத்தில் ஒரு பங்கு என்னைப் பார்த்திருந்தால் போதும், எவ்வளவோ சந்தோஷப் பட்டிருப்பேன். ஆனால், அந்தக் கடவுள்தான் சுந்தரிக்கு அழகான முகத்தைக் கொடுத்ததுவுமல்லாமல், ஒரு பராமுகத்தையும் கொடுத்து விட்டாரே!

குடம் நிறையத் தண்ணீரை எடுத்துக் கொண்டு, மெல்ல அடிமேலடி வைத்துக் கையை வீசிவீசி நடந்து சென்றாள். அவள் பின்னாலேயே (கொஞ்ச தூரத்தில்தான்) வந்த நான், அவள் அந்த மூக்குத் திரும்பிப்போகிற வரைக்கும் அவளையே பார்த்துக் கொண்டிருப்பேன். மூக்குத் திரும்பும்போது ஒரு தரம் 'என்னைச் சற்றே திரும்பிப் பாராளோ' என்றிருக்கும். ஆனால், அவளா திரும்பிப் பார்ப்பவள்! உள்ளங்காலில் முள் தைத்தால்கூட அவள் திரும்பிப் பார்க்கமாட்டாளே! சுந்தரி, குடம் நிறையத் தண்ணீருடன் வீடுபோய்ச் சேருவாள். மனம் நிறைய அவளைப் பற்றிய எண்ணத்துடன் வீடு வந்து சேருவேன் நான்.

இப்படி எத்தனையோ நாட்கள். ஒவ்வொரு நாளும், அந்தப் புளியமரத்தடியில் கொஞ்ச நேரம் தாமதித்துக் கொழுந்தையும் பூவையும் எட்டிப் பறிப்பாள். ஆற்றங்கரைக்கு வந்ததும் அதே இடத்தில் ஒரு தரம் குனிந்து ஒரு பிடி

மண் எடுத்துக் குடத்தில் போட்டுக் கொள்ளு வாள். தண்ணீரில் உட்கார்ந்து கொண்டு குடத்தை விளக்குவாள். குளிப்பாள். அன்ன நடை நடந்து வீடு செல்லுவாள். குனிந்த தலை நிமிருவது கிடையாது. இப்படி எத்தனையோ நாட்கள்.

ஒரு நாள் அவள் வழக்கம்போல் ஆற்றுக் குக் குளிக்க வரவில்லை. மறுநாளும் வரவில்லை. அதற்கு அடுத்த நாளும் வரவில்லை. காரணம் என்ன என்று விசாரித்தேன். சுந்தரி இனி மேல் வெளியில் வர மாட்டாள் என்ற சமாசா ரம் தெரியவந்தது. இனி அவளைப் பார்க்க முடியாது. அதிலிருந்து, நானும், சமைந்த பெண்மாதிரி வீட்டிலேயே குளிக்க ஆரம்பித்து விட்டேன்.

* * *

இரண்டு வருஷம் இப்படிக் கழிந்தது. பிற் பாடு கலியாணம் நடந்தது. யாருக்கு? சுந்த ரிக்கு. மாப்பிள்ளை யார்? நான் தான். இதில் உங்களுக்கு ஆச்சரியமும் அசூயையும் இருக்க லாம். எனக்கு ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஒரே ஆனந்தந்தான். கலியாணம் ஆகிப் பத்துப் பதினைந்து நாளைக்குள் ஒரு வீடு பார்த்துத் தனிக் குடித்தனம் பண்ண ஆரம்பித்து விட் டோம்.

ஒருநாள் காலையில், ஒன்பது மணி இருக் கும். நான் மேடையிலிருந்து ஏதோ புஸ்தகம்

வாசித்துக் கொண்டிருந்தேன். கீழே, 'டங்' என்று குடத்துக்குள் மஞ்சள் விழும் சத்தம் கேட்டது. அதற்கப்புறம், கதவை இழுத்துச் சாத்தும் சத்தம். அப்படியே ஜன்னலால் எட்டிப் பார்த்தேன். சுந்தரி குடமும் கையு மாகப் புறப்பட்டு விட்டாள். எனக்குப் பழைய காட்சிகளை இன்னும் ஒருமுறை பார்க்க வேண் டும் என்று ஆசை. கீழே இறங்கி, தெருவுக்கு வந்து, அவள் ஆற்றுக்குப் போவதைப் பார்த் துக்கொண்டே நின்றேன். குனிந்த தலை நிமி ராமல் போய்க்கொண்டே இருந்தாள். அந்தப் புளிய மரத்தை ஏறிட்டும் பார்க்கவில்லை. மண் எடுக்கக் குனியவும் இல்லை. பிற்பாடு அவள் ஆற்றுக்குள் இறங்கிவிட்டாள். தலை மறைந்து விட்டது. நானும் வீட்டுக்கு வந்துவிட்டேன்.

கால்மணி நேரங்கூட ஆயிருக்காது. அதற் குள் சுந்தரி குளித்துவிட்டுக் குடம் நிறையத் தண்ணீர் எடுத்துக் கொண்டு திரும்பி வந்துவிட் டாள். எனக்கு ஒரே ஆச்சரியமாகப் போய் விட்டது. குடத்தை இறக்கி வைத்ததுதான் தாமதம்; அவளிடம் கேட்டேன் :

"என்ன இவ்வளவு சீக்கிரம் திரும்பி விட்டாய் ?"

"குடத்தை விளக்கி விட்டு உடம்பை நன்றாகத் தேய்த்துக் குளித்து விட்டுத்தான் திரும்பி வந்திருக்கிறேன் ."

"முன்னே யெல்லாம் வெகு நேரம் குடத்தை விளக்கிக் கொண்டிருப்பாயே என்று தான் கேட்டேன்!"

"அப்பொழுதெல்லாம், குடத்தை விளக்க விளக்க, உங்களுடைய முகம் அதில் நன்றாகத் தெரியும். இப்பொழுதோ, நீங்கள் வீட்டிலிருக்கிறீர்கள். அதனால்தான் சீக்கிரம் குளித்து விட்டு ஓடிவந்து விட்டேன்!"



# ஸ்ரீ கிருஷ்ணஷ்டமி

இரா வேளை. எங்கும் இருள். வீட்டிலும் இருள், வான வெளியிலும் இருள். இருளிலா இடம் இவ்வையகத்துள் இல்லை என்று சொல் லும்படியாக இருள். மக்கள் மனத்திலும் பய மென்னும் இருள். எந்த வேளையில் என்ன நேரிடுமோ என்ற பயம். வெளி உலகத்தில் ஒரு பயங்கர அமைதி. மக்கள் மனசில் மட்டி லும் அமைதி என்பது மருந்துக்கும் கிடை யாது. ஒரே சஞ்சலம். ஆனால், ஆந்தைக்குக் கொண்டாட்டம். சூதுக்கார நரிக்கும் கொண் டாட்டம். ஊரைச் சூறையாடிக் கொள்ளையடிக் கும் கள்ளர்களுக்கும் கொண்டாட்டம். சுடு காட்டில் களிக்கூத்தாடும் பேய் பிசாசுகளுக் கும் கொண்டாட்டம்.

வீட்டுக்குள் இருப்பவர்கள்பாடோ ரொம்ப வும் சங்கடமாக இருக்கிறது. ஒன்றும் அறி யாத குழந்தைகள் தூங்குகின்றன. ஒரு குழந்தை கனவு கண்டு தூக்கத்தில் 'அம்மா அம்மா' என்று உளறுகிறது. மற்றொரு குழந்தை, தூக்கத்தில் 'தடார்' என்று

கையைத் தூக்கித் தரையில் போடுகிறது. கால்களை அடித்துக் கொள்ளுகிறது. எல்லாம் தூக்கத்தில்தான். ஆனல், இந்தச் சத்தமெல்லாம் தாயாரைப் பீதியடையச் செய்கின்றன. அவள் நெஞ்சம் பதைபதைக்கிறது. பயத்தில், கணவனது முகத்தை நோக்குகிருள். அவனே 'பயப்படாதே' என்று கையைக் காட்டுகிருன். உதடுகள் அசைகின்றனவே ஒழிய, வார்த்தை வெளிவரவில்லை. பயம் தொண்டையை அடைத்துக் கொண்டது. அர்த்த ராத்திரி வேளை. திடீரென்று ஒரு ஆந்தை கூவிற்று. மனைவி, "ஐயோ!" என்று அலறிப் புடைத்துக் கொண்டு கணவனைப் போய்க் கட்டிக் கொண்டாள். அடுத்த விநாடி வயல்க்காட்டு நரி ஒன்று ஊளையிட்டது. அவ்வளவுதான். தம்பதிகள் கட்டிப் பிணைத்தது இறுகிற்று. இரு நெஞ்சமும் அடித்துக் கொண்டதை இருவரும் கேட்டனர். 'எப்பொழுது விடியும், எப்பொழுது விடியும்' என்றுதான் நெஞ்சம் அடித்துக் கொண்டது.

இன்னும் எவ்வளவு நேரம் பதியும் பாரியையும் பயத்தைக் கட்டி அணைத்துக் கொண்டிருக்க வேண்டுமோ? உயிர்ப் பாரம் தாங்க முடியவில்லையே! கடவுளே, பயத்தினின்றும் விடுவித்து அருள மார்க்கமில்லையா?

மார்க்கமுண்டு; இருளைப் படைத்தவனுக்கு அருளைப் படைப்பதா பெரிய காரியம்? பூபாள ராகத்தில்,

பொழுது விடிந்தது பொற்கோழி கூவிற்று
காகம் கரைந்தது காலையு மாயிற்று
செங்கதிர் தோன்றிற்று தேவர்கள் போந்தனர்
அருணன் உதித்தனன் அன்பர்கள் வந்தனர்
சூரியன் தோன்றினன் தொண்டர்கள் சூழ்ந்தனர்

என்றும்,

பொழுது புலர்ந்தது ; யாம்செய்த தவத்தால்
புன்மை இருட்கணம் போயின யாவும்

என்றும் பாடிக் களிப்புற்றனர் தம்பதிகள். குழந்தைகளை எழுப்பினர். மூடியிருந்த கண்கள் திறந்தன. தடாகத்தில் தாமரை மொட்டுகள் மலர்ந்தன. குழந்தைகள் கண்களைத் துடைத்து வெளிமுற்றத்தில் கொண்டு வந்து நிறுத்தி, தாயார் ஆனந்த பைரவியில் பாடுகிறாள் :

சூரியோ தயத்தைப் பாருங்கடி - அந்தச்
சோதியில் மனமும் சேருங்கடி.

இரவில் உலகெங்கணும் குடிகொண்டிருந்த இருள் எங்கே? மக்கள் உள்ளத்தில் குடிகொண்டிருந்த பயம் எங்கே? இப்பொழுது, உலகம் ஒளி மயமான தெப்படி? மக்கள் உள்ளத்தில் ஆனந்தம் தாண்டவமாடுவது எப்படி? எல்லாவற்றுக்கும் மூல காரணம் சூரியோதயந் தான் என்று சொல்லவும் வேண்டுமா?

* * *

ஒரு காலத்தில் உலகம் பய மயமாயிருந்தது. ஒரே குழப்பம். உண்மை தலையெடுக்க நீதியில்லாமல் இருந்தது. பொய்ம்மை தலை

விரித்து ஆடியது. பொய்ம்மைக்கே ஆதிக்கமும் ஆட்சியும். நன்மை ஓடி ஒளிந்துகொண்டது. தீமைக்குக் கொண்டாட்டந்தான். மக்களும், முனிவர்களும், தேவர்களும் சித்திரவதைக் குட்பட்டார்கள். அரக்கர்களது ஆர்ப்பாட்டம் தலைதூக்கி நின்றது. அரக்கர்கள் இட்டது சட்டம். பிறருக்குக் கொடுமை இழைப்பதே அவர்களுக்குப் பொழுதுபோக்கு. யாகத்தைப் பாழாக்கினர். முனிவர்கள் தியானத்தைக் கலைத்தார்கள். நல்லவர்கள் வாழ நீதியில்லை. கற்பின் கதி அதோ கதி என்று சொல்லும்படியாக இருந்தது. முனிவர்களும் தேவர்களும் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியைத் தொழுதார்கள். அரக்கரை ஒழித்து உலகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று பிரார்த்தித்தார்கள்.

மகா விஷ்ணு, அஷ்டமி திதியும் ரோகிணி நட்சத்திரமும் கூடிய சுப தினமான கோகுலாஷ்டமி யன்று ஆயர்பாடியில் பாலகிருஷ்ணனாக வந்து கண்ணன் பிறந்த செய்தி நாடெங்கும் பரவிற்று. தேவலோகத்துக்கும் எட்டிற்று. எல்லோரும் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தனர். உலகம் உய்ந்தது என்று மக்கள் உவகை கொண்டனர். தவப்பயன் கிட்டிற்று என்று முனிவர்கள் மகிழ்ந்தனர். தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.

கண்ணன் பிறந்து, வளர்ந்து, ஆயர் பாடியில் பல லீலைகள் புரிந்து, கம்சனைக்

கொன்று, பின்னர் மகாபாரத யுத்தத்தில் பார்த்தசாரதியாக வந்து, பொய்ம்மையைப் போக்கி உண்மையை நிலைநாட்டி, கீதை யையும் உபதேசித்தான். உலகம் உய்யப் பிறந்தவனல்லவா கிருஷ்ணன்? அதனுல் தான் கிருஷ்ணன் பிறந்த சுப தினத்தை அக் காலத்திலும் இக்காலத்திலும் குதூகலத்துடன் எல்லோரும் கொண்டாடுகிறோம்.

இந்தக் கொண்டாட்டத்தில் முக்கியமான ஒரு விஷயத்தை அவசியம் குறிப்பிட வேண் டும். கோகுலாஷ்டமி யன்று வீடு தோறும் கோலமிட்டிருப்பதைப் பார்க்கலாம். ஒவ் வொரு விசேஷத்தின் போதும் நம்மவர்கள் கோலம் போடுகிறுர்கள். கோகுலாஷ்டமி யன்று கோலம் போட்டிருப்பதில் மட்டும் ஒரு விசேஷத்தைக் கவனிக்கலாம். அதாவது, தெரு வாசலிலிருந்து வீட்டுக்குள் கிருஷ்ண விக்கிரகம் வைத்திருக்கும் இடம் வரைக்கும், கோலச் சிற்றடிகள் போடப் பட்டிருக்கும். கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந் நாரா யணன் கிருஷ்ணுவதாரம் எடுத்து, ராத்திரியே ஒவ்வொருவர் வீட்டுக்கும் பாதமலர் பூமியில் பதிய நடந்துவந்து விடுகிறுர் என்பது ஐதிகம். எப்படிப்பட்ட ஐதிகம்! கலை அழகும், கதை நயமும், பக்திப் பெருக்கும் ஒருங்கே கலந்து சோபிக்கும் அற்புதமான ஒரு ஐதிகம். கிருஷ்ணன் பிறந்ததனுல் மக்களுக்குண்டான

ஆனந்தத்தைப் பின் எப்படிக் கொண்டு வருகிறது ?

இந்த ஐதிகத்தை முற்றிலும் உணர்ந்து அனுபவிக்கக் கூடியவர்கள் குழந்தைகளும் ஜீவன் முத்தர்களுந்தான். இவர்களுக்குத் தான் கடவுள் தன்மை உண்டு. இவர்கள் தான் அனுபவிக்கப் பிறந்தவர்கள். இவர்களைப் போல் அனுபவிக்க வேண்டும் என்பதே மக்களுக்கு வாழ்க்கை லட்சியம். அதுவே மானிடப் பிறவியின் பயன்.

கண்ணன் பிறந்தான் - மணி
வண்ணன் பிறந்தான் - இன்று
கண்ணன் பிறந்தான் - கமலக்
கண்ணன் பிறந்தான்.

உண்மை பிறந்தது
உள்ளம் மகிழ்ந்தது
வண்மை சிறந்தது
வையம் உய்ந்தது (கண்ணன்)

நன்மை விளைந்தது
நலனுந் திகழ்ந்தது
புன்மை ஒழிந்தது
புண்யம் பிறந்தது (கண்ணன்)

அல்லல்கள் யாவும்
அகன்றன பாரீர்
தொல்லைகள் யாவும்
தொலைந்தன வாரீர் (கண்ணன்)



# பாவமும் புண்ணியமும்

ஒவ்வொரு ஊரிலும் நாய்களுக்குக் குறைவில்லை. ராத்திரி வேளைகளில் அவைகளுக்குள் யுத்தம் ஏற்பட்டு விட்டால், அவ்வளவுதான், ஊரில் ஒருவரும் தூங்க முடியாது. அத்தனையும் சேர்ந்து, விடாமல் குரைத்துக்கொண்டிருக்கும். இந்தச் சமயத்தில்தான் ஜீவ காருண்யமுள்ள சிலர் - இல்லை பலர் - அந்த ஊர் முனிசிபாலிடியைச் சபிப்பார்கள்: "இந்த நாய்களுக்கெல்லாம் சாக்காலம் கிடையாதா? இவைகளைக் கொன்றால் என்ன கொள்ளை? நாயடிப்பவனுக்கு நாலணைக் கொடுத்தால் நாளொன்றுக்கு நாற்பது நாய்களைக் கொன்று தீர்த்து விடுவானே! இதற்குமா இந்த முனிசிபாலிடிக்கு 'வக்கு' இல்லை? வருஷா வருஷம் கொட்டி அழுகிற வரிப்பணத்தை யெல்லாம் என்ன செய்கிறார்கள்?" என்று, தூக்கம் கலைந்து எழுந்தவர்களெல்லாம் பேசிக் கொள்ளுவார்கள். அடுத்த நாள், முனிசிபாலிட்டிக்கு ஒரு மனு எழுதி அனுப்புவார்கள். அதற்கடுத்த நாள், தடியும் கையுமாய் நாயடிப்பவர்கள் இரண்டு மூன்று பேர் வந்து, அகப்பட்ட நாய்களை யெல்லாம் கொன்றுவிடுவார்கள். இவர்

களுடைய கண்ணில் படாது சில நாய்கள் தப்பித்துக் கொள்ளும். இவர்களிடமிருந்து எப்படித்தான் அவை தப்பிக்கின்றனவோ? ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. எப்படியோ, ஒவ்வொரு ஊரிலும், இந்த முனிசிபாலிட்டி என்ன தான் செய்யட்டும், சில நாய்கள் சாகாமல் மிஞ்சி விடுகின்றன.

இப்படி மிஞ்சிய நாய்களின் வாழ்வைக் கவனித்தால், இவை ஏன் உயிரோடு இருக்கின்றன என்று, உண்மையிலேயே ஜீவகாருண்யம் உள்ளவர்களுக்குத் தோன்றும். சாப்பாட்டுக்கோ வழி கிடையாது. குப்பைத் தொட்டியில் எப்பொழுது எச்சலிலை வந்து விழும் என்று காத்துக் கொண்டிருக்கும். விழுந்ததும், ஒரே பாய்ச்சலில் குப்பைத்தொட்டிக்குள் குதிக்கும். குதித்து இலைக் குவியலைக் கிளறிப் பார்க்கும். இலையில் ஏதாவது மிச்சம் இருந்தால்தானே இதற்குக் கிடைக்கும்? இதை யெல்லாம் பார்த்து விட்டுத்தான் நம்மவர்கள் அடிக்கடி 'நாயினும் கேடு கெட்ட வாழ்வு' என்று சொல்லித் தங்களையே நொந்து கொள்ளுகிறார்கள் போலும்!

ஆனால், எல்லா நாய்களுக்கும் இதே கதி தான் என்று சொல்லுவதற்கில்லை. சில நாய்கள், போன ஜன்மத்தில் செய்த புண்ணியத்தின் பயனாக, நல்ல உயர்ந்த ஜாதியில் வந்து பிறக்கும். அதை ஒரு துரைசாணி அம்மாள்

கிறையப் பணம் கொடுத்து வாங்கிக் கொண்டு போவாள். சொந்தப் பிள்ளைக்கும் மேலாக அதை வளர்ப்பாள். அதற்கு 'ஜான்' அல்லது 'ஜேம்ஸ்' என்று ஒரு அரசரின் பெயரை நாமகரணம் சூட்டி இனிமையான குரலில் அன்பாக, அழைப்பாள். அதைக் கேட்டால் "அடாடா! இந்த நாயாய்ப் பிறந்தோமில்லையே" என்றுகூட நமக்குத் தோன்றிவிடும்.

ஜான் படுப்பதற்குப் பட்டு மெத்தைதான். உலாவக் கொண்டுபோவதற்கு ஒரு வேலைக்காரன். நாய்க்குச் சோப்புப் போட்டுக் குளிப்பாட்ட ஒரு வேலைக்காரன். குளிப்பாட்டியதும், உடம்பிலுள்ள ஈரத்தைத் துடைப்பதற்காக, துண்டும் கையுமாய் இன்னொரு வேலைக்காரன் நின்று கொண்டிருப்பான். அவன் உடனே அதைத் துப்புரவாகத் துடைத்துவிட வேண்டும். 'அருகு நுனி பனி' போல, ஒரு ரோமத்தில் ஒரு சொட்டுத் தண்ணீர் இருந்ததோ அவ்வளவுதான்: அடுத்த நாள் தினசரிப் பத்திரிகையில், 'நாய் துடைப்பதற்கு ஆள் தேவை' என்ற விளம்பரத்தைப் பார்க்கலாம். நாய்க்கு ஜல தோஷம் பிடித்துக் கொண்டால் யார் பார்ப்பது? டாக்டர் வந்து குணப்படுத்தி விட்டார் என்று வைத்துக் கொண்டாலும், அதுவரைக்கும் நாயை வெளியில் கூட்டிக் கொண்டு போக முடியாதே! துரைசானி அம்மாள் வெளியில் எங்கு போனாலும் நாய் கூடவே வரவேண்டுமே! துரை வராவிட்டா

லும் பரவாயில்லை. துரையை மடியில் வைத் துக் கொள்ள முடியுமா? நாயைத்தானே வைத் துக் கொள்ளலாம். ஆனல், இதெல்லாம் நாய் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது என்பதனல் தான். இதே துரைசானி அம்மாள், தெருத் தெருவாய் அலைந்து திரியும் சாதாரண நாய்களை ஏறிட்டும் பார்க்கமாட்டாள். சாதாரண நாயை மடியில் வைத்துக் கொண்டால் அழகாக இருக் குமா? அந்த மடிக்குக் கௌரவமா யிருக்குமா? பிறர் மதிப்பார்களா? நியூ பவுண்ட்லாந்திலி ருந்து நானூறு ரூபாய் கொடுத்து வரவழைத் தேன் என்று பெருமை யடித்துக்கொள்ள முடியுமா?

ஆனல், அபூர்வமாகச் சிலர், ஜீவகாருண்ய மேலீட்டால், தெருவில் அலைந்து திரியும் நாய் களை எடுத்து வளர்க்கிறார்கள். இவர்களுக்கு நாய் ரொம்ப அழகாக இருக்க வேண்டும். உயர்ந்த ஜாதியைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்பதில்லை. உண்மையான அன் பும் அனுதாபமும் ஏற்பட்ட பின், அழகுக்கும் உயர்வு தாழ்வுக்கும் இடமேது? எல்லாம் அழகு தான். எல்லாம் உயர்வுதான். இப்படி வளர்க் கப்பட்ட ஒரு அனதை நாயின் ஜீவிய சரித் திரத்தைப் பற்றி இப்போது சொல்லப் போகிறேன்.

உ

மீனட்சிபுரம் என்ற ஊரில் ஒரு நாய் இருந் தது. அது அனதை. யாருக்கும் சொந்த

யில்லை. வேளா வேளைக்குச் சாப்பாடு இல்லாமல் அதன் வயிறு ஒட்டிப் போயிருந்தது. அதனுடைய வயிற்றை இரண்டு விரல்களாலே பொடி எடுக்கிற மாதிரி பிடித்து விடலாம்; அப்படி அந்த நாய் மெலிந்திருந்தது. காலையில் எட்டு ஒன்பது மணி வரைக்கும் தெருப் புழுதியில் கிடக்கும். மத்தியானம் வெயில் அதிகமாக அதிகமாக, நகர்ந்து நகர்ந்து நிழலுக்காகத் தெரு ஓரத்துக்கு வந்துவிடும். பன்னிரண்டு மணிக்குமேல் தெருவில் நிழலுக்கு எங்கே போக? அப்படியே சாக்கடையில் போய்ப் படுத்துக் கொள்ளும். வெயில் நேரத்துக்குச் சாக்கடைதான் நாய்க்குக் கோடைக் கானலும், உதகமண்டலமும். சாயங்காலமும் ராத்திரியும் தெருவில் நட்ட நடு மையத்தில் போய்ப் படுத்துக் கொள்ளும். வண்டி, கார் ஒன்றையும் நிகராகவே எண்ணுவது கிடையாது. வண்டி, கார் எல்லாம் விலகிப் போக வேண்டியதுதான். நாய் நெளித்துக் கூடக் கொடுக்காது. இதுவரைக்கும் அது கார் ஏறிச் சாகாமல் இருந்தது அதிசயந்தான். சில சமயங்களில் எச்சில் இலைக்கு அலைய ஆரம்பித்து விடும். ஏதாவது கிடைத்தால் உண்டு. இல்லை, பட்டினிதான். எச்சில் இலை பொறுக்குவது ஒன்றுதான் அதற்குத் தெரியும் என்று எண்ண வேண்டாம். மனுஷனைப் போல, பிச்சை எடுத்து வயிறு வளர்க்கவும் தனக்குத்

தெரியும் என்பதை ஒரு நாள் அது காட்டி விட்டது.

வழக்கம்போல ஒரு நாள் விடியற்காலம் நடுத்தெருவில் படுத்துக்கொண்டிருந்தது. பக்கத்துக் கடையில் ஒரு பையன் பட்சணம் வாங்கி மடியில் கட்டிக்கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாய்க் கொறித்துக்கொண்டிருந்தான். நாய் அவனைப் பார்த்து விட்டது. உடனே எழுந்திருந்து அவன் பக்கத்தில் போய் நின்று கொண்டு வாலை ஆட்டிற்று. பையன் பட்சணத்தில் கொஞ்சம் போட்டுவிட்டு, வீட்டைப் பார்த்து நடையைக் கட்டினான்.

போட்டதைக் கண்ணைமூடி விழிப்பதற்குள், சாப்பிட்டுவிட்டு, நாய் பையனைப் பின்தொடர்ந்தது. இன்னும் கொஞ்சம் போட்டுவிட்டு மேலே நடந்தான். மறுபடியும் போட்டதை ஒரு நொடியில் தின்றுவிட்டு ஒரே ஓட்டத்தில் பையனுக்கு முன்னால் போய் நின்றுவிட்டது. பையன் "வந்து விட்டையா?" என்று கேட்டான். "ஆமாம்" என்பதுபோல நாய் வாலை ஆட்டிற்று. மடியிலிருந்து பட்சணத்தை எடுத்துப் பையன் வாயில் போட்டுக்கொண்டபோது அது பார்த்த பார்வை அவனுக்கு ரொம்ப வேடிக்கையாக இருந்தது. மடியில் கையைப் போட்டவுடன் தனக்குத்தான் போடப் போகிறான் என்று கையையே பார்க்கும். கை உயர உயர நாயும் தலையை உயர்த்தி உயர்த்திப்

பார்க்கும். பையன் வாயில் போட்டுக் கொண்டதும், நாய் வாலை ஆட்டிக் கொண்டு தலையை இந்தப் புறமும் அந்தப் புறமும் அசைக்கும். இது, "நீ மாத்திரம் சாப்பிடுகிறாயே. எனக்கில்லையா?" என்று கேட்பது போலிருந்தது. பையன், "இந்தா! தின்னு" என்று கொஞ்சம் போட்டான். அதற்குப் போட்டு முடியுமா? மறுபடியும் பையனிடம் ஓடிவந்து விட்டது. பையன் எத்தனையோ முறை, "இனிமேல் கிடையாது, போ" என்று சொல்லியும் கேட்காமல் அது பின் தொடர்ந்தே வந்துகொண்டிருந்தது.

கடைசியில், பையன் இருந்ததை யெல்லாம் போட்டுவிட்டு, மடியைத் தட்டிக் காண்பித்து விட்டான். அதற்குப் பிறபாடும் அது அவனைப் பின் தொடர்ந்தது. விரட்டிப் பயனில்லை என்று பிறகு சும்மா இருந்துவிட்டான். பையன் வீட்டு நடை ஏறியதும், "சீ! போகலையா கழுதை?" என்று கையை ஓங்கி வீசி விரட்டிப் பார்த்தான். இவன் சொல்லுவதை அது காது கொடுத்துக் கேட்டால்தானே? அவனுடன் வீட்டுக்குள்ளேயே நுழைந்து விட்டது. "ஊர்க்காட்டு நாயை வீட்டுக்குள்ளே ஏண்டா கூட்டிக்கொண்டு வந்தாய்?" என்று அப்பா அடிப்பார்கள் என்ற பயம் ஒரு புறம். நாயின்மேல் ஏற்பட்டுவிட்ட அனுதாபம் ஒரு புறம். நாயோ, என்ன சொன்னாலும் போகமாட்டேன் என்று சாதிக்கிறது. அவனுடன்

'உறவு கொண்டாடவே' ஆரம்பித்து விட்டது. என்ன செய்ய? வேறு வழியில்லை. நாய்க்காவது அறிவு இருக்க வேண்டும் - இது வேறொருவர் வீடாச்சே, அழையாத வீட்டுக்குள் நுழையலாமா என்று. அதுவோ, வெட்கம், மானம், ரோசம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு வாசற்படி ஏறினதுமல்லாமல், வீட்டுக்குள் பையன் எங்கெல்லாம் போனானோ, அங்கேயெல்லாம் கூடவே போயிற்று.

பையன் ஒவ்வொரு அறையாய்ப் பார்த்துக் கொண்டு போகும்போது, ஒரு அறையிலே ஒரு மூலையில் நுங்குக் குலையொன்று இருப்பதைப் பார்த்து விட்டான். ஆனந்தம் தாங்கவில்லை. சரி, இதை வெட்டித் தின்றுவிட வேண்டியது தான் என்று தீர்மானித்துவிட்டான். உடனே அடுப்பங்கரையிலிருந்து அரிவாளை எடுத்துக் கொண்டு வந்து, வாசல் திண்ணையில் வைத்து, நுங்கை வெட்ட ஆரம்பித்தான்.

நாய், இப்பொழுதுதான் தனக்கு அவன் மேலுள்ள பிரியத்தை யெல்லாம் காட்டிவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டது போல, அவன் பக்கத்தில் நெருங்கி உட்கார்ந்து கொண்டது. அவனுக்குக் கை கூசிற்று. அதைத் 'தள்ளிப் போ, தள்ளிப் போ' என்று சொல்லியும் தள்ளியும் பார்த்தான். பிள்ளையார் மாதிரி உட்கார்ந்து கொண்டது. பையன் நுங்கை ஒரு வெட்டு வெட்டினான். கையில்

கொஞ்சம் போட்டுக் கொண்டான். நுங்கும் கொஞ்சம் வெட்டுப்பட்டது என்னமோ வாஸ் தவந்தான். இன்னொரு வெட்டு வெட்டினான். வெட்டியதுதான் தாமதம், நாய் "காள் காள்" என்று கத்த ஆரம்பித்து விட்டது. உடனே, அரிவாளை வைத்துவிட்டு, என்ன என்று பார்த் தான். நாய் வாலின் நுனி வெட்டுப்பட்டுக் கீழே கிடந்தது. நாய் ஒரே சத்தம் போட்டுக் கொண்டு தெருவுக்குப் போய், அங்கேயிருந்து ஒரே ஓட்டமாக ஓடிப்போய் விட்டது. பையன் அதன் பின்னோடேயே ஓடிப் பார்த் தான். முடியவில்லை.

வெகு தூரத்துக்கப்பால் நாயினுடைய கதறல் கேட்டது. கொஞ்சங் கொஞ்சமாய் அந்தச் சத்தம் குறைந்து ஐந்து நிமிஷத்துக் கெல்லாம் சத்தமே கேட்கவில்லை. பையனுக்கு ரொம்ப வருத்தம். கண் கலங்கிவிட்டது. வீட் டுக்கு வந்ததும், அறுபட்டுக் கிடந்த வால் நுனி யிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். அப்பொழுது பையனுக்குக் கண்ணீரே வந்துவிட்டது. அடுத்த நாள் ஊர் முழுதும் தேடிப் பார்த்தான். நாய் கண்ணுக் குத் தென்படவில்லை. அது அந்த ஊரிலேயே இருந்தாலல்லவா அவன் கண்ணில் படப் போகிறது?

ந.

முந்திய நாள் வலி பொறுக்க மாட்டாமல் கூச்சல் போட்டுக் கொண்டு நாய் வெகு

நேரம் ஓடிக்கொண்டேயிருந்தது. அதற்கு வேறென்ன தெரியும்? வைத்தியரிடம் போய் மருந்து வாங்கிப் போட்டுக் கொள்ளத் தெரியுமா? அதற்குத் தெரிந்தது ஓட்டந்தான். கடைசியில் களைப்புற்று ஓரிடத்தில் படுத்து விட்டது. நாக்கை ஒரு பக்கமாகத் தொங்க விட்டுக் கொண்டது. இந்த நிலைமையில், பாவம், அதன் வால் நுனியிலிருந்த புண்ணில் ஈ மொய்க்க ஆரம்பித்து விட்டது. வாலை ஆட்டி ஈயை ஓட்டிற்று. வாலாட்டம் நிற்க வேண்டியதுதான் தாமதம், ஈக்கள் மறுபடியும் வந்து மொய்க்க ஆரம்பித்துவிடும். நாய்க்கு வலி ஒரு பக்கம், எரிச்சல் ஒரு பக்கம், கோபம் ஒரு பக்கம். கோபத்தில், அந்த ஈக்களையெல்லாம் பிடித்துவிட வேண்டும் என்றிருக்கும். அப்படியே வால் பக்கம் தலையைத் திருப்பி வாயால் அந்த ஈக்களைப் பிடித்துத் தின்னப் பார்க்கும். மேல்வரிசைப் பல்லும் கீழ்வரிசைப் பல்லும் 'டக் டக்' என்று அடிபட்டுக் கொள்ளுவதுதான் மிச்சம். வாய்க்கு ஒரு ஈ அகப்படாது. ஏமாற்றத்தில் ஆத்திரமும் ஆங்காரமும் அதிகமாகி உடம்பை நன்றாக வளைத்துக் கொண்டு வால் நுனியைக் கௌவிப் பிடிக்கப் பெரு முயற்சி செய்யும். அறுபட்ட வால் நுனி வாய்க்கெட்டாது. இந்த வீண் முயற்சியின் பயனாக, உலகம் தன்னைத் தானே சுற்றிக் கொள்ளுவது போல, நாயும் சுற்றிச் சுற்றி வந்தது. இப்படி வெகு நேரம் சுற்றியதில்

மயங்கிக் கீழே விழுந்து விட்டது. மயக்கம் தெளிந்து எழுந்ததும், அதற்குப் பசியும் தாகமும் பிடுங்கித் தின்றன. பசியின் பலத்தாலும், தாகத்தின் தைரியத்தாலும், ஆடி அசைந்து கொண்டு, கொஞ்ச தூரம் நடந்தது. ஆனால், திடீரென்று பலஹீனத்தால் சேர்ந்து கீழே விழுந்து விட்டது.

சென்ற நாலைந்து நாளாக அது இரண்டு மூன்று ஊர்களைக் கடந்துவிட்டது. வீரராகவபுரம், சிந்துபூந்துறை, இப்பொழுது தச்சநல்லூர். தச்சநல்லூரில், அதற்குத் தாயாதிகள் ஒருவரும் இல்லை. அங்கே வந்ததற்குக் காரணம் வலி, வேதனை, ஈக்கூட்டம் எல்லாம் சேர்ந்து அதை விரட்டிக் கொண்டு வந்து விட்டதுதான்.

தச்சநல்லூரில் ஒரு வீட்டுக்கு முன்னால் நாய் களைப்புற்றுக் கிடந்தது. தற்செயலாக அந்த வீட்டிலிருந்து ஒரு பெண் அடுத்த வீட்டுக்குப் போவதற்காக வெளியே வந்தாள். வழியில் நாய் படுத்திருப்பதைப் பார்த்து முதலில் பயந்து விட்டாள். பக்கத்தில் போய்ப் பார்த்ததும், நாயின் நிலைமை அவளுக்குத் தெரிய வந்தது. நாய் அசைவற்றுக் கிடந்தது. கண்ணில் மட்டும் அதற்கு உயிர் இருக்கிறது என்பது தெரிந்தது. கண்ணிலோ, சோகம் ததும்பிக் கொண்டிருந்தது. விழிகள் இலேசாக அசைந்தன. அது, "அம்மா! உனக்கு

ஈவிரக்கம் இல்லையா?" என்று கேட்பதுபோல் இருந்தது. பெண்ணுக்கு மனம் இளகியது என்று சொல்லவும் வேண்டுமா?

அவள் பெயர் தங்கம். குணத்துக்கேற்ற பெயர்தான். தங்கம் தன்னுடைய அழகிய கைகளை வீசி, நாயின் வாலில் மொய்த்துக் கொண்டிருந்த ஈக்களை ஓட்டினுள். அப்போது அவளுக்கு இன்னொரு நல்ல எண்ணம் தோன்றிற்று. வீட்டுக்குள் ஓடிப்போய், ஒரு தட்டில் பால் கொண்டு வந்து நாய்க்கு முன் வைத்தாள். தாகம் சிறிது அடங்கியதும் நாய் மெள்ள எழுந்தது. தங்கம் அதை 'ச்சு' 'ச்சு' என்று சொல்லிக் கையால் சொடக்குப் போட்டுக் கூப்பிட்டாள். எத்தனையோ நாள் பழக்கம் இருந்ததுபோல நாயும் அவள் பின்னேடேயே போயிற்று. தங்கம், நாயை வீட்டுக்குள் கூட்டிக் கொண்டுபோய், அதற்குச் சோறு போட்டாள். நாய் வயிறு முட்டத் தின்றது. தின்றபின் அதன் முகத்தில் ஒரு களைகூட ஏற்பட்டு விட்டது. இருந்தாலும், உண்ட மயக்கத்தில் அப்படியே தூக்கம் வந்துவிட்டது.

நாய் தூங்கும்போது தங்கம் ஒரு காரியம் செய்தாள். அதன் வாலிலுள்ள புண்ணுக்கு மருந்து போட்டுக் கட்டி விட்டாள். நாய் தூக்கம் கலைந்து எழுந்ததும் ஓடி விளையாட ஆரம்பித்து விட்டது. புண்ணில் வலி தெரியவில்லை. ஈயும் மொய்க்கவில்லை. தினந்தினம் தங்கம்

இந்தச் சிகிச்சையைச் செய்துவந்தாள். நாள டைவில் புண் நன்றாகக் குணமாகி விட்டது. ஆனால், வால் மொட்டையாகத்தான் இருந்தது. வால் வளர்வதென்பது அடுத்த ஜன்மத்தில் தானே!

வீட்டிலிருந்தாலும் சரி, வெளியே எங்கு போனாலும் சரி, நாய் தங்கத்தை விட்டுப் பிரி வதே கிடையாது. தங்கத்துக்கும், நாயில்லா மல் வீட்டிலும் இருப்புக் கொள்ளாது; வெளி யிலும் போக மனம் இருக்காது. இப்படி இரண்டுங் கெட்டதாக இருக்கும் அவள் நிலைமை. சினேகிதிப் பெண்களுக்குத் தங்கம் வீட்டில் இருக்கிறாள் என்பதற்கு அறிகுறி நாய் தான். நாய் இருந்தால் தங்கம் இருப்பாள் என்பது அவ்வளவு நிச்சயம். தங்கம் பக்கத்து வீட்டுக்குப் போவதா யிருந்தால், 'நல்லன்' (தங்கம் வைத்த பெயர்) என்று கூப்பிடுவாள். நாயும் கூடவே புறப்பட்டு விடும். அங்கே தங்க மும் மற்றப் பெண்களும் தாயம் விளையாடுவதை யெல்லாம் அது பார்த்துக்கொண்டே இருக் கும். தன்னுடைய எஜமானி ஜயித்துவிட வேண்டும் என்ற ஆசைகூட அதற்கு இருக்கும். ஒரு நாள் அதற்குத் திடீரென்று குஷி கிளம் பித் துள்ளிக் குதிக்க ஆரம்பித்து விட்டது. அந்தச் சமயம் பார்த்து, ஆட்டத்தில் தங்கம் ஜயித்திருந்தாள். உடனே மற்றப் பெண்க ளெல்லாம் "பாருங்கடி! தங்கம் ஜயித்து விட் டது அவள் நாய்க்குக் கூடச் சந்தோஷம்

தாங்கவில்லை" என்று சொல்லிச் சிரித்தார்கள். இப்படியாகத் தங்கத்தின் பராமரிப்பில் நல்லன் சௌகரியமாக வளர்ந்து வந்தது.

௭

இரண்டு மூன்று வருஷங்கள் கழிந்தன. தங்கத்துக்குக் கல்யாணம் நிச்சயமாகி, நாளும் குறிப்பிட்டாகி விட்டது. நெருங்கிய பந்துக்களெல்லாம் வந்து விட்டார்கள். வீடு நிறைந்திருந்தது. ஒரே இரைச்சல். குழந்தைகள் ஒரு பக்கத்திலே கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தன. வயசான குழந்தைகள் ஒரு பக்கம் 'சளபுளா' என்று பேசிக் கொண்டிருந்தார்கள். இந்தச் சமயத்திலும் தங்கம் நாயை விட்டுப் பிரிந்தாளில்லை. அவளுடன் அதுவும் 'கூடமாட' அங்குமிங்கும் போய்க் கொண்டிருந்தது.

கல்யாணத்துக்கு முந்தின நாள், நிச்சய தாம்பூலச் சடங்குக்காகப் பெண்ணை அலங்காரம் பண்ணி ஒரு ரத்னக் கம்பளத்தின்மேல் உட்கார வைத்திருந்தார்கள். நல்லன் ஓடி வந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டது. வாலிபப் பெண்களெல்லாம் ஒரே யடியாய்ச் சிரித்தார்கள். வயதான பெண்களெல்லாம், "வாரியல் கொண்டைக்குப் பட்டுக் குஞ்சம் வேறு கேடா! சீ! கழுதை, போகலையா?" என்று நாயை விரட்டினார்கள். ஒரு பெரிய மனுஷனுக்குக் கோபமே வந்து விட்டது. "இது என்ன இது! கல்யாண வீடா, லட்சண

மாய்க் காணுமே, நாயை வீட்டுக்குள்ளேயே விடக் கூடாது. கல்யாண காலத்திலாவது வெளியே விரட்டிவிடக் கூடாதா? இது தெரியாமல் என்ன கல்யாணம் வேண்டிக் கிடக்கு! நாளைக்கும் நாய் போய் இப்படிப் பெண் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டால் அழகாகத்தான் இருக்கும்!" என்று கர்ஜித்தார்.

கடைசியில் எல்லோரும் சேர்ந்து பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள் - கல்யாணத்தன்று நாயைப் பக்கத்து வீட்டிலே ஒரு அறையில் போட்டு அடைத்துவிட வேண்டியதுதான் என்று. பெண்களாகக் கூடியிருந்த இடத்தில் பேசிய ரகசியந்தான் உலகெங்கும் ஒலி பரப்பப்பட்டு விடுமே! இந்தச் சமாசாரம் எப்படியோ தங்கம் காதுக்கு எட்டி விட்டது. நல்லவேளை, நல்லன் காதுக்கு மட்டிலும் இது எட்டவில்லை. எட்டியிருந்தால், அது உயிரையே விட்டிருக்கும். தங்கம் தெரியாத்தனமாய், "அது உங்களை என்ன பண்ணுகிறது? அது பாட்டுக்கு என்னுடன் இருக்கட்டுமே!" என்று சொல்லி விட்டாள். அவ்வளவுதான். ஆம்பூர் அத்தைக்கு ஆத்திரம் பொங்கி விட்டது.

"தங்கம்! சொன்னால் கேளுடி. பெரியதனம் பண்ணுதே. முன்னே பின்னே கல்யாணம் பண்ணியிருந்தாலல்லவோ நாங்கள் எதற்காகச் சொல்லுகிறோம் என்று தெரியும்? நாய்,

ஒரு நாளைக்குக் கூட இல்லாவிட்டால் என்ன? குடிமோசம் போயிடுமோ? கல்யாண மெல்லாம் ஆனபிற்பாடு நாயைக் கட்டிக்கொண்டு அழேன். யார் வேண்டா மென்றார்கள்? நாளைக்கு மணவறையில் ஒரு பக்கம் நாயும் இன்னொரு பக்கம் மாப்பிள்ளையும் உட்கார்ந் திருந்தால் பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார் கள்? இது தெரியவில்லையே! இன்னமா நீ சின்னவள்? நாளைக்குக் கல்யாணமாகப் போகி றது. இதெல்லாம் உனக்கே தெரியவேண் டாமா? இன்னொருவர் சொல்லும்படியாகவா வைத்துக் கொள்ளுவது?" என்று அத்தை அறிவுறுத்தினாள். இந்தச் சமயத்தில் ஒரு தாத்தா, "சரி, சரி. ரொம்பவும் அவள் மன சைப் புண்படுத்தாதீர்கள். அவள் போக்கின் படியே விடுங்கள். அவள் என்ன குழந் தையா?" என்று சொல்லி, தங்கத்தின் கலங் கின கண்கள் கண்ணீர் பெருக்கி விடாதபடி தடுத்தார். கடைசியில், தங்கம், வேண்டா வெறுப்பாய்க் கல்யாணத்தன்று நல்லனை வீட் டுக் குள்ளேயே ஒரு அறையில் போட்டு அடைத்து விடுவதற்குச் சம்மதித்தாள்.

௫

கல்யாணம், மறுவீடு எல்லாம் சிறப்பாக நடந்தேறின. மீனாட்சிபுரத்தில் மாப்பிள்ளை வீட்டுக்குத் தங்கம் வந்து அரைமணி நேரம் கூட ஆகவில்லை. மாப்பிள்ளை (சங்கரலிங்கம்)

நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறான். தங்கம் அடுத்த கட்டில் கதவோரமாய் நிற்கிறாள். மாப்பிள்ளையின் களை பொருந்திய முகத்தைப் பார்த்துச் சந்தோஷமும் பூரிப்பும் கொள்ளுகிறாள். ஊடே, ஒரு கவலைக்கும் அவள் மனசில் இடம் இருந்தது - நல்லன் இன்னும் வந்து சேரவில்லையே என்று. இந்தச் சமயத்தில் சங்கரலிங்கம் பேச ஆரம்பித்தான்.

"எல்லாச் சாமானும் வந்து சேர்ந்ததா?"

"ஆமாம்; எண்ணிப் பார்த்தாச்சு, எல்லாம் சரியாயிருக்கிறது."

"அப்படியா? ஒன்று பாக்கி போலிருக்கிறதே!"

"என்னது?"

"இன்னும் தெரியவில்லையா? அது முக்கியமான சீதனப் பொருள்."

"உங்களுக்குப் பிரியமில்லை என்றால் வேண்டாம்."

"பிரியமில்லை என்று யார் சொன்னது?"

"சொல்ல வேறு வேண்டுமா? கேலியாகப் பேசுகிறதிலேயே தெரியவில்லையா?"

"உண்மையிலேயே சொல்லுகிறேன். அதைத் தான் நான் மேலான சீதனப் பொருளாகக் கருதுகிறேன். எது உனக்கு ரொம்பப் பிரியமோ அதுதான் எனக்கும் பிரியமானது. நிஜமாகவே கேட்கிறேன். நாய் எங்கே?"

"பின்னாலே வருகிறது. மாயாண்டி கூட்டிக்கொண்டு வருகிறான். இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துவிடும்."

"கல்யாணத்துக்கு முன்னால் உன்னைப் பற்றிச் சொன்னவர்களெல்லாம் நல்லனைப் பற்றியும் சொன்னார்கள். ஆனால், கல்யாணத்தின் போது அதைக் காணவே காணோமே!"

"அதைத்தான் எல்லாருமாகச் சேர்ந்து அறைக்குள் அடைத்துப் போட்டு விட்டார்களே" என்று தங்கம் சொல்லி வாயை மூடியிருப்பாள். நல்லன் வந்து விட்டது. தங்கத்தின் மேல் எகிறி எகிறிக் குதித்தது. மறுபடியும் தங்கத்தைப் பார்த்துவிட்டோம் என்பதில் அதற்கு எவ்வளவு சந்தோஷம் இருக்கும்? தங்கத்தைப் பார்த்து வாலை ஆட்டிக்கொண்டேயிருந்தது. கொஞ்ச நேரத்துக்கு நாயையே பார்த்துக் கொண்டிருந்த தங்கம், தற்செயலாய்ச் சங்கரலிங்கம் பக்கம் திரும்பினாள். நாற்காலியில் இருந்தபடியே சங்கரலிங்கம் கண்கள் கலங்கி, அவற்றினின்றும் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

தங்கத்துக்குக் கதி கலங்கி விட்டது. "என்ன! என்ன!" என்று சங்கரலிங்கம் பக்கத்தில் போனாள்.

சங்கரலிங்கம் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மௌனமாகவே இருந்தான்.

தங்கம் மறுபடியும் "உடம்புக்கு என்ன செய்கிறது?" என்று மிகுந்த கவலையுடன் கேட்டாள்.

"உடம்புக்கு ஒன்றும் இல்லை. மனந் தான் காரணம். நாயின் அறுபட்ட வால் ஆடு வதைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். பழைய ஞாபகம் ஒன்று வந்துவிட்டது. அப் படியே என்னை அறியாமலேயே கண்ணீர் பெருகிவிட்டது" என்று சொன்னன்.

"அதென்ன ஞாபகம்?" என்று தங்கம் கேட்க, சிறுவயதில் நுங்கு வெட்டப்போய் நாயின் வாலை வெட்டியது, நாய் கூப்பாடு போட்டுக் கொண்டு ஓடியது, தான் அதைத் தேடி அலைந்தது, அது கண்ணில் படாததால் கவலைப்பட்டது முதலிய சகல விவரங்களையும் விரிவாகச் சொன்னன். தங்கம், தான் எப்படி நாயை வளர்க்க நேர்ந்தது என்ற வரலாற்றை யும் சொன்னள். இரண்டு வரலாறுகளையும் சேர்த்துப் பார்க்கும்போது, தம்பதிகளுக்கு உண்மை தெரிய வந்தது. அது காரணமாக, இரண்டு பேருக்கும் நாயின்மேல் இன்னும் அதிகமாகப் பாசம் ஏற்பட்டு விட்டது. இது மட்டுமா? தம்பதிகளுக்குள்ளும் அன்னியோன் யமும் அன்பும் திடீரென்று அதிகமாகிவிட்டது.

௬

அன்பு அதிகமாகி விட்டால் ஆயுசு குறைந்துவிடும் போலிருக்கிறது! இரண்டொரு

வருஷங்களில் நாய் இறந்து விட்டது. சங்கர லிங்கம், தோட்டத்தில் வால் நுனியைப் புதைத்து வைத்த இடத்திலேயே நாயை அடக்கம் செய்தான். பிற்பாடு அந்த இடத்தில் ஒரு கருங்கல்லை நாட்டி அதன்மேல்,




என்று செதுக்கி வைக்கவும் செய்தான்.

தம்பதிகளுக்குச் சதா நல்லன் ஞாபகந்தான். போன தீபாவளியன்று கூட நல்லனைப் பற்றியே தம்பதிகள் பேசிக் கொண்டிருந்தார்கள். பக்கத்து வீடுகளில் பையன்கள் வெடிபோட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்போது, "நல்லன் இருந்தால், வெடிச் சத்தத்தைக் கேட்டுவிட்டுப் பதறி அடித்துக் கொண்டுபோய்ச் சாமான் வைக்கும் அறையில் பானைகளுக்கிடையில் பதுங்கிக் கொள்ளுமே" என்று தங்கம் சொன்னாள்.

இலையில் தீபாவளிப் பட்சணங்களெல்லாம் தங்கம் கொண்டு வந்து வைத்தாள். அவற்றை

யெல்லாம் பார்த்து விட்டு, "நல்லன் இதை யெல்லாம் எவ்வளவு பிரியமாகச் சாப்பிடும்!" என்று சங்கரலிங்கம் சொன்னான்.

தம்பதிகளுக்கு ஒரு குழந்தை பிறந்தால் இந்த ஞாபகம் கொஞ்சம் குறையலாம். குழந்தை காரணமாகவே ஒருவேளை ஞாபகம் இன்னும் அதிகமாகி விடுமோ என்னமோ! யார் கண்டது?



13

# எல்லாம் அவன் செயல்

சங்கரனும் சேகரனும் மனமொத்த நண்பர்கள். ஒரு விஷயத்தில் மட்டும் அவர்கள் மனமொத்துப் போகவில்லை.

சங்கரனுக்கு எப்படியோ அஹிம்சைக் கொள்கை மனசில் பதிந்து விட்டது. அஹிம்சையில் அவனுக்குத் தீவிர நம்பிக்கையும் ஏற்பட்டு விட்டது. ஏதோ அவனால் இயன்ற அளவு அஹிம்சா விரதத்தைக் கடைப்பிடித்து வந்தான். பாம்பு, தேள் இவைகளைக்கூடக் கொல்ல அவனுக்கு மனசு வராது. சுடுகிற பாலில் தவறி ஒரு ஈ விழுந்து செத்துப் போய் விட்டால், 'பால் பாழாய்ப் போச்சே' என்று வருத்தப்படமாட்டான்; 'பாவம்! ஒரு ஈ செத்துப் போய்விட்டதே' என்று ரொம்பவும் வருத்தப்படுவான். 'பாலை மூடி வைத்திருந்தால் ஈ விழுந்து செத்துப் போயிருக்குமா?' என்று வீட்டிலிருப்பவர்கள் மேல் கோபிப்பான்.

சேகரன் இப்படியல்ல. அவனுக்கும் ஏதோ ஜீவகாருண்யச் சிந்தை இருக்கத்தான்

செய்தது: மதப் பற்று, கடவுள் நம்பிக்கை எல்லாம் அவனுக்கும் உண்டு. ஆனால், அஹிம்சா தர்மத்தில், சங்கரன் அளவு தீவிர நம்பிக்கை சேகரனுக்குக் கிடையாது.

ஒரு நாள் இந்த நண்பர்களுக்குள் ஜீவ காருண்யம் சம்பந்தமாக ஒரு பெரிய வாக்கு வாதம் ஏற்பட்டு விட்டது.

இரண்டு பேரும் வீதி வழியாக நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவ்வழியே அவசர அவசரமாக நடந்து போய்க் கொண்டிருந்த ஒரு மனுஷன் காலில் எறும்பொன்று மிதிபட்டுத் துடியாய்த் துடித்தது. சங்கரனும், அவன் பின்னால் வந்த சேகரனும, அந்த எறும்பைப் பார்த்தார்கள். மனுஷன் காலில் நறுக்கென்று மிதிபட்ட எறும்புக்கு என்ன வைத்தியம் செய்து என்ன பயன்? எறும்பு வெகு சீக்கிரம் செத்துப் போய்விட்டது. சங்கரன் மனம் நெருப்பி லிட்ட புழுப்போல் துடித்தது.

"அந்த மனுஷனுக்கு மூளை இருந்தால் தானே! வீதியில் நடக்கும்போது கீழே பார்த்துப் போனால் என்ன? வீணாக ஒரு உயிரைக் கொன்று விட்டானே, கொலைபாதகன்!"

"நீ இப்படிப் பேசுவதுதான் எனக்குப் பிடிக்கவே இல்லை. அவன் வேணுமென்றா அந்த எறும்பைக் கொன்றான்? வேணு மென்று ஒரு எறும்பைக் கொல்லுவதில் அந்த

மனுஷனுக்கு என்ன லாபம்? அதில் அவனுக்கு என்ன இன்பம் இருக்கக் கூடும்?" என்று சேகரன் கேட்டான்.

"வேணுமென்று வேறு கொல்லவேண்டுமோ? கீழே பார்த்துப் போனால் எறும்பை மிதிக்காமல் விலகிப் போயிருக்கலாமே."

"வீதியில் போகும்போது ஊரும் எறும்பைக் கொல்லாமல் இருக்கவேண்டுமே என்பது தான் மனுஷ லட்சியமோ?"

"ஆம். அதுதான் ஒவ்வொரு மனிதனுடைய லட்சியமாக இருக்க வேண்டும்."

"சரி, நீ சொல்லுகிறபடி எறும்பைக் கொல்லாமல் இருப்பதே மனுஷ லட்சியம் என்று வைத்துக் கொள்வோம். நம்மை அறியாமலேயே எறும்பைக் கொன்று விட்டால் என்ன செய்வது?"

"நம்மை அறியாமலேயே எப்படி ஒரு ஜீவனைக் கொல்ல முடியும்? சர்வ ஜாக்ரதையாக இருந்தால் எதையும் கொல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது."

"எவ்வளவு சர்வ ஜாக்ரதையாக இருந்தாலும், எல்லாம் நம் கைக்குள்ளேயா இருக்கிறது? தினந் தினம் நம்மை அறியாமல் எத்தனையோ ஜீவராசிகளைக் கொன்றுகொண்டு தான் இருக்கிறோம்."

"அதெல்லாம் ஒன்றுமில்லை. நீ உன் மனோதர்மப்படி என்னவெல்லாமோ சொல்லு கிருய். அஹிம்சா தர்மப்படி நீ சொல்லுவ தெல்லாம் சரியல்ல."

"இப்படி யெல்லாம் பேசுவதற்கு உனக்கு யார் சொல்லிக் கொடுத்தார்கள்?"

"இதெல்லாம் ஒருவர் சொல்லிக்கொடுக்க வேண்டுமா என்ன? எல்லாந்தான் புஸ்தகத் தில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறதே!"

"எந்தப் புஸ்தகத்தில்?"

"ஜீவகாருண்யத்தைப் பற்றிய புஸ்தகங் களில். நேற்று ராத்திரிக்கூட ஒரு புஸ்தகம் படித்துக் கொண்டிருந்தேன். அதில் இதை யெல்லாம் பற்றி விவரமாகச் சொல்லப்பட்டி ருக்கிறது."

"என்ன சொல்லியிருக்கிறது?"

"நம்மை அறியாமலே ஒரு கொசுவைக் கூடக் கொல்லக் கூடாது என்று."

"அப்படிச் சொல்லியிருக்கவே செய்யாது. அதில் வேறென்னவாவது சொல்லி யிருக்கும். அதற்கு நீ இந்த மாதிரி அர்த்தம் பண்ணி யிருப்பாய்."

"சரி; என் வார்த்தையில் நம்பிக்கை இல்லை யென்ருல் நீயே வந்து பார். நேற்று ராத்திரி மூடி வைத்த புஸ்தகம் இன்னும் அப்ப டியேதான் இருக்கிறது.'

"சரி, போவோம் வா" என்றான் சேகரன்.

இரண்டு நண்பர்களும் சங்கரன் வீட்டுக்குப் போனார்கள். அங்கே மேஜையின்மேல் ஒரு புஸ்தகம் இருந்தது. அதைச் சுட்டிக் காட்டி, சங்கரன், "அந்தப் புஸ்தகந்தான். நீயே எடுத்துப் பார். முப்பதாம் பக்கத்தில் கடைசி வரி. வாசி" என்றான்.

சேகரன் புஸ்தகத்தைக் கையிலெடுத்து, பக்கங்களைப் புரட்டி, முப்பதாம் பக்கத்தைத் திருப்பினான். திருப்பவும் அவன் லேசாகச் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய்?" என்று சங்கரன் கேட்டான்.

"இல்லை, ஒன்றுமில்லை. நீ சொன்னபடியே தான் எழுதியிருக்கிறது. ஆனால், இதன்படி எப்படி நடக்க முடியும் என்பதை நினைக்க நினைக்கச் சிரிப்பு வருகிறது."

"அதற்குச் சிரிப்பு வருவானேன்?"

"என்ன செய்ய? இதற்கு அழவா சொல்லுகிறாய்? சிரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஒரு கேள்வி கேட்கிறேன். வாஸ்தவமாகவே நீ, இதில் எழுதியிருக்கிறபடி நடக்கலாம் என்று சொல்லுகிறாய்?"

" ஆமாம். சந்தேகம் என்ன?"

"நான் முடியாது என்கிறேன். உன்னாலும் முடியாது. உன்னைப் படைத்த பிரமனாலும் முடியாது."

"என்னால் முடியும்; நான் நிரூபித்துக் காட்டுகிறேன்."

"உனக்கு அந்தத் தொந்தரவு வேண்டாம். உன்னால் முடியாது என்பதை நானே நிரூபிக்கிறேன். இந்தா, புஸ்தகத்தைக் கையில் பிடி. அந்த வாக்கியத்தைப் பார், போதும், வாசிக்க வேண்டாம்."

சங்கரன் புஸ்தகத்தை வாங்கிப் பார்த்தான். அப்படியே புஸ்தகத்தைக் கைநழுவ விட்டுவிட்டான்!

அந்த வாக்கியத்தின் மேலேயே ஒரு கொசு நசுங்கிச் செத்துக் கிடந்தது.

புஸ்தகத்தைப் படித்து முடித்ததும் ஜாக்கிரதையாக மூடவேண்டாமோ!



## 14. மதுராயி

கொண்டையிலே பூமணக்க
குங்குமப் பொட்டுமின்ன
அண்டையிலே வந்ததுமே
ஆவேசம் கொள்ளுதடி

ஆவேசம் கொள்ளுதடி
ஆத்திரமும் பொங்குதடி



பூவாசம தூககுதடி
புதுமோகம் தாக்குதடி. 2


வண்டிகு திரையுண்டு
வண்டிக்குத் திரையுமுண்டு
பெண் துணைக்கு நீயுமுண்டு
பெட்டிப டுக்கையுண்டு. 3

சுாணமும் கட்டியாச்சு
கட்டுக்கட்டாய்ப் புல்லுமாச்சு
நாளுமல் வண்டியிலே
நாசூக்காய் ஏறிடடி. 4

மதுரைக்குப் போயிடுவோம்
மறுநாளே வந்திடுவோம்
மதுராயி கொண்டையிலே
மருக்கொழுந்து ஏறிடுமாம். 5

கட்டம்போட்ட சேலைஒண்ணு
கட்டாயம் வாங்கித்தாரேன்
கட்டிச்சாய வேட்டி இந்தக்
கட்டைக்குப் போதுமடி. 6

ரவிக்கைக்குத் துணியெடுத்து
ராணிபோல போட்டுக்கடி
சவுக்கமரச் சோலையிலே
சல்லாப மாயிருப்போம். 7



# விநாயக சதுர்த்தி

ஒரு காலத்தில், தேவர்கள் என்ன காரியம் செய்தாலும் அதற்கு ஏதாவது ஒரு இடையூறு வந்து குறுக்கிட்டது. தொடங்கின கருமங்கள் ஒன்றும் முற்றுப்பெருமல் தடைப்பட்டு நின்றன. தேவர்கள்தான் வெறும் கோழைகளாயிற்றே! எல்லோரும் ஒன்றுகூடி, சிவபெருமானிடம் போய் முறையிட்டார்கள். அவரோ எப்பொழுதடா தேவர்களுக்கு இடையூறு நேரிடும், நாம் உதவி செய்யலாம் என்று காத்துக் கொண்டிருப்பார். தேவர்கள் வந்து தங்களுடைய காரியங்களுக்கு விக்கினம் ஏற்படாமல் காத்தருள வேண்டும் என்று பிரார்த்தித்ததும், சிவனர் மனம் கனிந்து, திருமுகத்திலிருந்து ஒரு சோதி தோன்றச் செய்ய, அதனின்றும் விக்கினேசுவரர் உதித்தார்.

சோதிமயமான குழந்தையை எடுத்து எப்படி இடுப்பில் வைத்துக்கொள்ள முடியும்? உமாதேவி பாடு ரொம்பவும் சங்கடமாகப் போய்விட்டது. உடனே உமாதேவி, தன்னுடைய குழந்தைக்கு, 'திருமேனி ஒளி இழந்து,

யானைத் தலையும் கொம்புகளும், தேவ கரங்களும், பூத சரீரமும் பொருந்துவதாக' என்று திருவுளம் கொண்டாள். சிவபெருமான் விநாயகரைத் தமது கணங்களுக்கெல்லாம் தலைவராக்கினார். ஆவணி மாதம், பூர்வபட்சம், சதுர்த்தி திதியில் விநாயகர் சிந்துரன் என்னும் அரக்கனை வதம் செய்யும் பொருட்டு, கஜானன மூர்த்தியாக அவதரித்தார்.

கொஞ்ச காலம் சென்றது. எவ்வளவு காலம் என்று கணக்கிட ஒருவராலும் முடியாது. சுப்பிரமண்யர் பிறந்தார். இவர் ஒரே சுறுசுறுப்பு. விநாயகரோ இடம் பெயருவதே கிடையாது. பெயருவதா யிருந்தால் தொந்தியையு மல்லவா உடன் தூக்கிச் செல்லவேண்டும்? போதாததற்குத் தும்பிக்கை வேறு. நடக்கும்போது அது ஒரு பெரும் தடையாக இருக்கும். இதை யெல்லாம் உத்தேசித்து, விநாயகர், அந்தக் காலத்திலேயே கல்லுப்பிள்ளையார் மாதிரியே இருந்தார். இந்த ரகசியம், பாவம், முருகனுக்குத் தெரியாது. முருகன் அடிக்கடி விநாயகரை விளையாடக்கூப்பிடுவார். பிள்ளையார் விளையாட வரமாட்டேன் என்று சாதித்துவிடுவார். முருகன் அழுதுகொண்டு அம்மாவிடம் போய்ச் சொல்லுவார். பார்வதி தேவி, சற்றே புன்புறுவல் செய்து விட்டு, "அண்ணனைப் போய் தொந்தரவு பண்ணதே. அவன் உன்னோடெல்லாம் விளையாட வரமாட்டான். அவன் கொழுக்கட்டையோடு மட்டுந்

தான் விளையாடுவான். நீ மயிலுடனும் கோழியுடனும் போய் விளையாடு" என்று சொல்லுவாள்.

இப்படியிருக்கும் காலத்திலே, ஒரு நாள் சிவபெருமான் ஆனவர், கையிலே ஒரு மாம் பழம் ஏந்திக் கைலாயத்தில் வீற்றிருந்தார். அதை அவருடைய புதல்வர் இருவரும் பார்த்து விட்டனர். இருவர் நாவிலும் ஜலம் ஊற ஆரம்பித்து விட்டது. இரண்டு பேரும் 'மாம் பழம் எனக்கு, எனக்குத்தான்' என்று அடித்துக் கொண்டார்கள். பார்த்தார் பரமசிவன். யாது செய்வதென்று தோன்றாமல் சிறிது நேரம் விழித்தார். சற்றே தலையைச் சொரிந்து கொண்டார். சட்டென்று அவருக்கு ஒரு யோசனை தட்டுப்பட்டது. அதை அப்படியே புதல்வர்களுக்குத் தெரிவித்தார்: "உங்கள் இரண்டு பேரில் யார் உலகத்தைச் சுற்றிவிட்டு முதலில் வருகிறார்களோ அவர்களுக்கு இந்தப் பழம்" என்றார் சிவபெருமான். சொல்லி வாய் மூடுமுன், முருகன், கோலமா மயிலேறி உலகத்தைச் சுற்றிவரப் புறப்பட்டு விட்டார். சப்பணம் கூட்டி உட்கார்ந்திருந்த விநாயகர், வெகு சிரமப்பட்டு ஒவ்வொரு காலாக வெளியில் எடுத்து, கொஞ்ச நேரம் காலைத் தடவிக் கொடுத்துவிட்டு மெள்ள எழுந்து நின்றார். அப்பா! இதற்குள் முருகன் அமெரிக்காவுக்குப் போய்விட்டார். எழுந்திருந்த விநாயகர் இடுப்பில் இரு கையும், தொந்தியில் இரு

கையும் வைத்துக்கொண்டு அடிமேல் அடி வைத்து நடந்து சிவபெருமானை ஒரு தரம் சுற்றி வந்தார். வந்ததும், மாம்பழத்துக்கு ஐந்து கரங்களையும் நீட்டினார். நீட்டி ஒரு வினாடிகூட இருக்காது; உலகத்தைச் சுற்றிவந்த முருகன் ஓடிவந்து ஈராறு கரங்களையும் நீட்டினார். சிவ பெருமான் புன்முறுவல் பூத்து, தன்னைச் சுற்றி வருவதும், உலகத்தைச் சுற்றி வருவதும் ஒன்றே என்று சொல்லி பந்தயத்தில் ஜெயித்த விநாயகருக்குப் பழத்தைக் கொடுத்துவிட்டார்.

உலகத்தைச் சுற்றிவந்த இந்தக் கதை உலகத்திலேயே மிகச் சிறந்த சிறு கதைகளில் ஒன்று.

உலகத்திலேயே சிறந்த பெருங் கதை மகா பாரதம். மகாபாரதக் கதையை ஏட்டில் எழுதினால் காணாது, என்றும் நிலைத்திருக்கும் படி மேரு மலையின் மேலேயே பொறித்துவிட வேண்டும் என்று உத்தேசித்தார், வியாசர். உத்தேசித்து விட்டால் போதுமா? காரியம் கைகூட வேண்டாமா? வியாசர், விநாயகர் உதவியை வேண்டிக் கொண்டார். விநாயகர் பிரசன்னமாகி, எழுத்தாணியைக் கையில் பிடித்தார். பிடித்துக் கொண்டு சொல்லுவார்: "எழுத்தாணி நிற்காமல் நீர் சொல்லிக் கொண்டு வரவேண்டும்" என்று. வியாசரும் சொல்ல ஆரம்பித்தார். வியாசர் என்ன சாமான்யப் பேர்வழியா? தங்குதடை இல்லா

மல் சரமாரியாகப் பொழிகிறார். விநாயகமூர்த்தியும் எழுதிக் கொண்டே வருகிறார். திடீரென்று, பாருங்கள், எழுத்தாணி ஒடிந்து போய் விட்டது. விக்கினேஸ்வரர் அல்லவா? நற்காரியங்களுக்கு விக்கினம் வராமல் காத்தருள்பவர் அல்லவா? தமது தந்தங்களில் ஒன்றை ஒடித்து எழுத்தாணியாகக் கொண்டு எழுதி பாரதக் கதையை மேரு மலையில் தீட்டி முடித்தார். அதுதான் விநாயகர் இன்னும் ஒற்றைக்கொம்பனாக விளங்குகிறார். கையில் வைத்திருக்கிறாரே, ஒரு ஒடிந்த கொம்பு, அது ஏதோ சாதாரணக் கொம்பு என்று எண்ண வேண்டாம். மகாபாரதக் கதையைப் பாறையில் பொறித்த கொம்பாக்கும்!

பாரதக் கதை போன்ற ஒரு காவியத்துக்கு இதைவிடச் சிறந்ததொரு புகழுரை இருக்க முடியுமா?

ஒரு காலத்தில் கயமுகன் கயமுகன் என்று ஒரு அசுரன் இருந்தான். அவன் ஒரு பொல்லாத பயல். தேவர்களை யெல்லாம் போரில் வென்று தனக்கு அடிமையாக்கிக் கொண்டான். அது மட்டுமா? தேவர்களை மும்முறை தலையில் குட்டிக்கொள்ளச் சொன்னான். காதுகளைக் கைகளால் மாறிப் பிடித்துக் கொண்டு தோப்புக்கரணம் போடச் சொன்னான். வெகு காலத்துக்குத் தேவர்கள் தோப்புக்கரணம் போட்டுக் கொண்டிருந்தார்கள். எவ்வளவு

நாளைக்குப் போட்டுக் கொண்டிருக்க முடியும்? வழக்கம்போல் சிவபெருமானிடம் போய் முறையிட்டார்கள். சிவபெருமான் விநாயகரைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்லி அனுப்பினார். விநாயகர் போய் கயமுகனை முறியடித்தார். கயமுகன் பூமியில் விழுந்து பெருச்சாளி உருவம் கொண்டு மறுபடியும் போர் செய்யத் தொடங்கினான். விநாயகர் அவனை வென்று, பெருச்சாளியை வாகனமாக்கிக் கொண்டார். அன்று முதல் தேவர்களும் பூலோக பக்தர்களும் விநாயக மூர்த்தியின் முன் நின்று மனமாரத் தலையில் குட்டிக் கொண்டும் தோப்புக்கரணம் போட்டுக் கொண்டும் இருக்கிறார்கள்.

இந்த விநாயக புராண வரலாற்றில் ஒரு விஷயம் விட்டு விட்டது. அதாவது, விநாயகர் ஒரு தீவிர பிரம்மசாரி என்பதுதான். சிவபெருமானும், பார்வதியும் அவருக்கு எங்கே யெல்லாமோ பெண் பார்த்தார்கள். விநாயகருக்கு ஒரு பெண்ணும் பிடிக்கவில்லை. பார்வதி பார்த்தாள். விநாயகரைக் கூப்பிட்டு விட்டு, "என்னடா இப்படிப் பிடிவாதம் பண்ணுகிறாய்? எவ்வளவு நாளைக்குடா இப்படி நீ பிரம்மசாரியாய் இருப்பாய்? பாருடா உன் தம்பியை. அன்னமும் மஞ்ஞையும்போல் இரண்டு பெண்களைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு குஷாலாயிருக்கிறான்" என்றாள். அதற்கு விநாயகர், "உன் மாதிரி ஒரு பெண் பார்த்துக்கொடு,

கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன்" என்றார். இதைக் கேட்ட பார்வதி, "என்னைப்போல ஒரு பெண்ணை என்றால் பார்க்க முடியாதப்பா. நீயேதான் பார்த்துக் கொள்ள வேண்டும். குளத்தங்கரையிலும், ஆற்றங்கரையிலுமுள்ள அரசமரத்தடியில் போய் உட்கார்ந்திரு. தண்ணீர் எடுக்க எத்தனையோ பெண்கள் வருவார்கள். தேர்ந்தெடுத்துக் கொள்" என்று சொல்லி விட்டாள். அன்னை சொற்படியே விநாயகர் அரச மரத்தடியில் வந்து உட்கார்ந்து கொண்டார். போகிற வருகிற பெண்களையெல்லாம் பார்க்கிறார். அரச மரத்தையும் தன்னையும் சுற்றிச் சுற்றிவரும் பெண்களையெல்லாம் கடைக்கண் போட்டுப் பார்க்கிறார். இன்னும் அவருக்குப் பிடித்த பெண் அகப்படவில்லை. இனிமேல் ஒருவேளை அகப்பட்டாலும் அகப்படலாம். விநாயகப் பெருமானது ஐங்கர அணைப்பு எந்தப் பெண்ணுக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ!



# வீணை தனம்மாள்

(1868 - 1938)

இருபது இருபத்தைந்து வருஷங்களிருக்கும். ஒரு நாள் வெள்ளிக்கிழமை. சூரியாஸ்தமன வேளை. சென்னைப் பட்டணத்தில் ஒரு ஒடுக்கமான முடுக்கு. அதில் ஒரு சின்ன வீடு. வீட்டுக்குள் வாசலுக்கு நேரே பாயில் ஒரு ஸ்திரீ வீணையும் கையுமாய் உட்கார்ந்திருந்தார். இல்லை, வீற்றிருந்தார் என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால், இந்த மாதிரிக் காட்சிகள் நமக்கெல்லாம் வீணையேந்தி வெண் தாமரையில் வீற்றிருக்கும் வாணியையே ஞாபகப் படுத்துகின்றன. அந்த ஸ்திரீ வீணா நாதத்துக் கொப்பான இனிய குரலுடன் ஒரு பாட்டுப் பாடி அதையே வீணையிலும் வாசித்து அங்கே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தவர்களைப் பரவசப்படுத்தி வந்தார்.

அப்பெண்மணி தம்மை மறந்து பாவம் சொட்டப் பாடி வீணாகானம் செய்துகொண்டிருந்தபோது திடீரென்று அவர் முகத்தில் கோபக்குறி தோன்றிற்று. அங்கே இருந்த

வர்கள் எல்லோரும் என்ன விஷயம் என்று தெரியாமல் திகைத்தார்கள். உடனே கோபம் பின்வருமாறு வெளியிடப்பட்டது: "அட, ஞான சூன்யங்களா! அபஸ்வரங்களா!" என்று. எல்லோரும் தங்களைத்தான் திட்டுகிறாரோ என்று பயந்து கொண்டிருந்தார்கள். அப்போது, தெருவழியே ஒருவன் செருப்பைத் தேய்த்துத் தேய்த்து நடந்து போய்க்கொண்டிருந்தான். அப்படி அவன் நடந்ததனால் உண்டான 'அபஸ்வரம்' சங்கீதத்தில் லயிக்க விட்டிருந்த அந்த அம்மாளுடைய மனசை அறுத்திருக்கும் என்பதில் சந்தேகம் என்ன? இப்படி 'அட, ஞானசூன்யங்களா! அபஸ்வரங்களா!' என்ற பதங்களை யார் பிரயோகித்திருக்கக் கூடும் என்று தென்னாட்டுச் சங்கீத உலகப் பரிச்சயம் உள்ள வயோதிகர்களிடம் கேட்டால், உடனே சொல்லி விடுவார்கள்: "வீணை தனம்மாள் தான், வேறு யாராயிருக்கக் கூடும்? வேறு யாரால் இப்படி பாவ பூர்வமாக ஏச முடியும்?" என்று சொல்வார்கள்.

தனம்மாள் ஏசுவதுகூட, சங்கீத பரிபாஷையிலேயே இருந்தது. காரணம், அவர் வாழ்க்கையை அப்படி சங்கீதத்துக்கு அர்ப்பணம் செய்திருந்தார். ஏன், வாழ்நாள் முழுவதையும் அவர் ஸ்வர சுத்த லயமாகக் கழித்து வந்தார் என்றே சொல்லலாம். எதை வேண்டுமானாலும் அவர் பொறுத்துக் கொள்ளுவார்.

ஆனல், ஒரு அபஸ்வரத்தைக்கூட அவரால் பொறுக்க முடியாது.

முன்காலத்தில் நம்மவர்களில் பலர் ரொம்பவும் குறைவாகப் பேசி வந்தார்களாம். ஏனென்றால், குறைவாகப் பேசினல் பொய்யும் குறைவாக இருக்குமல்லவா? அப்படிச் சத்தியத்தைக் காப்பாற்றி வந்தார்கள். அதே போல, தனம்மாளும், ஸ்வர சுத்தத்தைக் காப்பாற்றி வந்தார். சங்கீதத்தில் ஸுஸ்வரம் உண்மை, அபஸ்வரம் பொய் என்பதை நன்கு உணர்ந்தவர் தனம்மாள் ஒருவர்தான் என்ருல் அது மிகையல்ல.

இன்னும், தனம்மாளுக்கு, சங்கீதத்தில் அபஸ்வரம் மட்டுமல்ல, 'அதிகப் பிரசங்கித்தனமும்' பிடிப்பதில்லை. அதிகப் பிரசங்கித்தனம் என்ற பதம், அனுவசியமான, அளவுக்கு மிஞ்சிய பிருக்காக்கள், ரவைகள், சங்கதிகள், வாண வேடிக்கைகள், ஸ்வரப் போர்கள், தாளக் குஸ்திகள் முதலியவைகளைக் குறிக்கிறது. இவைகளெல்லாம் அர்த்தமற்றவை, பாவமற்றவை. உண்மையான சங்கீதத்துக்கு இந்த 'அனுவசியங்கள்' பங்கம் விளைவிக்கின்றன என்பது அவருடைய அபிப்பிராயம். கழுத்தை நெருக்கும் கல்லட்டியலும், சுவாசத்தையே அடைத்துவிடும் புல்லாக்கும், இடுப்பை முறிக்கும் ஒட்டியாணமும், கரண்டையைப் பேர்க்கும் பாதசரமும் எவ்வளவு அழகாகத்

தான் இருக்கட்டும், அவைகளை அணிந்து கொள்வது எவ்வளவு சுகக்கேடு? இவைகளை யெல்லாம் வேண்டாமென்று வெறுத்துத் தள்ளியவர் தனம்மாள். ஆகையால், அவருடைய சங்கீதத்தில் எளிமை நயம் ஒரு சிறந்த அம்சமாக விளங்குகிறது.

இயற்கைக்கும், கர்நாடக சங்கீதத்துக்கும் விரோதமான அம்சங்கள் அவரிடத்தில் மருந்துக்கும் கிடையாது. கர்நாடக சங்கீதத்துக்கென்று ஏற்பட்ட கமகத்தைத்தான் அவர் அதிகமாகக் கையாளுவார். அவருடைய சங்கீதம் ஒரே கமக மயமாக இருக்கும். அவருடைய சங்கீதத்தைக் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுது, அலை ஏறி இறங்குகிற தோணியில் போவது போன்ற உணர்ச்சி ஏற்படும்.

கமகத்துக்குச் சாதகமாக அவர் பாடினாலும் சரி, வீணை வாசித்தாலும் சரி, எல்லாம் சௌக்க காலத்திலேயே இருக்கும். கலிகாலத்தில் எல்லோருக்கும் வேகத்தில்தான் மோகம் அதிகமாக இருக்கிறது. சங்கீத லோகத்தில் கூட, அனேகர் மோட்டாரிலும் ஆகாய விமானத்திலும் ஏறிக்கொண்டு அதிவேகமாகச் சஞ்சரிக்கிறார்கள். தனம்மாள் இது விஷயத்தில் கொஞ்சம் கர்நாடகந்தான். பழைய சம்பிரதாயப்படி பல்லக்கில்தான் ஏறிச் செல்வார். பல்லக்கில் போகும் அழகே ஒரு தனியழகல்லவா? அதுமட்டுமா? பல்லக்கில் போகும் பொழுது, சாலையின் இருபுறமும் உள்ள ஒவ்

வொரு காட்சியையும் நன்ருக அனுபவித்துப் பார்த்துக்கொண்டு போகலாம். அதேபோல, சௌக்க காலத்தில் தனம்மாள் பாடும்போதும் வாசிக்கும்போதும், ஒவ்வொரு ஸ்வரத்திலும் நின்று, அதை அவரும் நாமும் நன்கு அனுபவித்தபின், நிதானமாக இன்னொரு ஸ்வரத்துக்குப் போவார். இது காரணமாக, ஸ்வர வித்தியாசத்தை நன்ருக உணர்ந்து சங்கீதத்தைப் பரிபூரணமாக அனுபவிக்க முடிகிறது. ஆனல், ஸ்வரம் விட்டு ஸ்வரம் தாண்டுவதோ பாய்வதோ அவரிடம் கிடையாது. ஸ்வரத்துக்கு ஸ்வரம் கமகத்தின் வழியாக நழுவி விடுகிறது என்பதுதான் தனம்மாளின் தனிநடை. அதில் உள்ள இன்பமும் ஒரு தனிதான்.

ராக பாவம் இன்னொரு முக்கியமான அம்சம். இது விஷயத்தில் தனம்மாளுக்கு ஒரு தனிப்பட்ட அபிப்பிராயமுண்டு. அதாவது, ராகத்தை வெகு நேரம் ஆலாபனை செய்யக் கூடாது, செய்யவும் முடியாது என்பதுதான். தனம்மாள் எந்த ராகத்தையும் மூன்று நிமிஷம், மிஞ்சினல் ஐந்து நிமிஷத்துக்கு மேல் வாசிப்பதே கிடையாது. அதற்கு மேல் ஒரு ராகத்தில் வின்னியாசம் பண்ண இடமில்லை என்பது அவருடைய அபிப்பிராயம். அந்த மூன்று நிமிஷமும், ராகத்தின் களையும், ஜீவ ஸ்வரங்களும் தெளிவாகக் கையாளப்படும். ரக்தி ராகங்களுக்கே மூன்று நிமிஷம் என்ருல், அபூர்வ ராகங்களைப் பற்றிச் சொல்லவே

வேண்டாம். அவைகளுக்குக் கொடுத்து வைத்தது அரை நிமிஷந்தான். ஆனால், தற்காலத்தில் அனேகர் அபூர்வ ராகங்களையே பல்லவி ராகமாகப் பாடுகிறார்கள்! இது என்னமோ தனம்மாளுக்கு விளங்குவதே யில்லை. இந்த ஆச்சரியத்தை ஒரு சமயம் பின்வருமாறு தெரிவித்தார்:

'இந்தக் காலத்தில் தான் மணிரங்கைக் கூடப் பல்லவி ராகமாகப் பாடுறாங்களே!'

இந்த வாக்கியம் தனம்மாளின் அபிப்பிராயத்தை நன்கு வெளிப்படுத்துகிறது. சங்கீத இலக்கியத்தில் சேர்க்க வேண்டிய வாக்கியங்களில் இதுவும் ஒன்று.

இன்னொரு விசேஷம், அவர் 'எடுத்ததும்' இன்ன ராகம் என்று தெரிந்துவிடும். சுருட்டி ராகம் பாடினால், சுருட்டி ராகத்துக்குரிய ஜீவஸ்வரங்களை மட்டுந்தான் தொடுவார். அப்பொழுது, சுருட்டி ராகமே ஒரு உருவெடுத்து வந்ததுபோலத் தோன்றும். அதாவது, கண்ணால் பார்ப்பதுபோன்ற ஒரு தெளிவு ஏற்படும். இன்னும், தற்கால நாகரிகத்துக்கும் புது 'மோஸ்த'ருக்கும் ஏற்றபடி இந்துஸ்தானியைக் கலந்து பாடுவதென்பது அவரிடம் கிடையவே கிடையாது. பழைய கர்நாடக வழிதான். ஆனால் அது, புத்தப் புதிதாக இருக்கும், எங்கும் கேளாத மாதிரியில் இருக்கும். உண்மையான கலைகளெல்லாம் அப்படித்தானே!

இப்படியாக, தனம்மாள் சங்கீதத்தில் எத்தனையோ மேலான அம்சங்கள் நிறைந்திருந்தன. ஆனால், இவைகளுக்கெல்லாம் மேலான ஒரு அம்சம் உண்டு. அதுதான் மற்ற அம்சங்களுக்கெல்லாம் அடிப்படை என்று சொல்ல வேண்டும். அதாவது, அந்த அம்மாள் சங்கீதம் பாவபூர்ணமான சங்கீதம் என்பது தான். இதயத்திலிருந்து அந்த சங்கீதம் வருகிறது. ஆகையால், அது கேட்போர் இதயத்துக்குப் போய்ச் சேருகிறது. குரலையும் விரலையும் பழக்குவதோடு நின்றுவிடாமல், மனசையே பழக்கி வந்திருக்கிறார் அவர். உள்ளத்தில் உணர்ந்தனவெல்லாம் தங்குதடையின்றி அப்படி அப்படியே நாத ரூபம் எடுத்து நமக்குக் காட்சி அளிக்கின்றன. ஒவ்வொரு ஸ்வரமும், ஒவ்வொரு அட்சரமும் உள்ளத்திலிருந்து வருவதால், அவை புதிது புதிதாக இருக்கின்றன, அன்று அலர்ந்த மலர்போல.

சங்கதிகள் என்று எடுத்துக்கொண்டால், அவர் போடும் சங்கதிகள் மணி மணியாய் இருக்கும். 'ராம நீ சமானம் எவரு?' என்ற பல்லவியைச் சிலர் எடுத்து விட்டால், அநுபல்லவியை ஆரம்பிக்க அரை நூற்றாண்டாவது ஆகும்: பல்லவியில் அத்தனை சங்கதிகள் போடுவார்கள். எல்லாம் அர்த்தமற்றதாக இருக்கும். சங்கதிகளுக்குக் காரணம், தொண்டையில் பிருக்காவும் ரவையும் பேசுகிறது என்பதுதான்

அதே பல்லவியில் தனம்மாள் இரண்டு மூன்று சங்கதிகள்தான் போடுவார். அந்தச் சங்கதிகள் அர்த்தத்தையும் பாவத்தையும் விளக்குவனவா யிருக்கும். பாவத்தை விளக்குவதற்காகத்தான் சங்கதிகள் ஏற்பட்டவை என்ற உண்மையைத் தனம்மாள் சங்கீதத்தைக் கேட்கும்போது தான் நன்கு உணரலாம்.

தாயுமானவர், பட்டிணத்தார் பாடல்கள், தமிழ்ப்பதங்கள் முதலியவைகளை அவர் பாடும் போது, 'அடாடா! தமிழ்மொழி அமிழ்தினும் இனியது என்பதை இப்பொழுதல்லவா உணரு கிறோம்' என்ற எண்ணம் ஏற்படும். 'எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும்' என்ற வரியை எத்தனை விதமாகப் பாடலாமோ, வீணை யில் வாசிக்கலாமோ, அத்தனை விதமாகப் பாடியும் வாசித்தும் காட்டுவார் - இல்லை - விளக்குவார். இதல்லவோ சரியான வியாக்கி யானம்? பொழிப்புரையும், பதவுரையும், இலக் கணக் குறிப்பும் எத்துணை அசம்பாவிதம்! ஒரு பாட்டை விளக்குவதற்கு ஒரே ஒரு வழி உண்டு. அதை பாவபூர்ணமாகப் பாட வேண்டும் என்பதுதான்.

இன்னும், தனம்மாள் வார்த்தைகளை உச் சரிப்பதே ஒரு அழகு. அட்சர அட்சரமாகச் சங்கீதத்தில் குழைத்துச் சொல்லுவார். அப் படிச் சொல்லும்போது அந்த வார்த்தையின் மதிப்பு எவ்வளவோ உயர்ந்துவிடும். சாகித்திய

வித்துவான் ஒரு வார்த்தைக்கு ஒரு அந்தஸ்து கொடுத்திருப்பார். அதற்கு மேலான அந்தஸ்தை தனம்மாள் அதற்குக் கொடுத்துவிடுவார். தனம்மாளைக் கேட்கக் கேட்க, சங்கீதத்தின் உயர்ந்த அம்சங்கள் மட்டுமல்ல, இலக்கியத்தின் - கவிதையின் - உயர்ந்த பண்புகளும் புலப்படும். உதாரணமாக, கவிதை சங்கீதானுபவத்திலிருந்து வெளிப்படுவதுதான் என்ற அரிய உண்மை தெரியவரும். மொத்தத்தில் அவருடைய சங்கீதம் பாகவதர்களுக்கும் பண்டிதர்களுக்குமே படிப்பினையாக இருந்தது என்று சொல்லலாம்.

வீணை தனம்மாள் என்று பெயர் இருப்பதாலேயே அவர் வீணைவாசிப்பதில்தான் கைதேர்ந்தவர் என்று ஆகிறது. ஆனால், அவர் பாடுவது அதனினும் மேல் என்றே சொல்ல வேண்டும். வாத்தியத்தில் சிறந்தது வீணை என்று சொல்லுவார்கள். ஆனால் வீணையிலும் சிறந்தது வாய்ப்பாட்டு. வாய்ப்பாட்டைக் கவனித்தால், வீணை ஊமைதான். இதைத் தனம்மாள் நன்கு அறிந்திருந்தார். தமது கடைசிக் காலத்திலும்கூட அவர், பாடாமல் வீணை வாசித்ததே கிடையாது. ஒரு தரம் அட்சரத்தை வாயினால் பாடியபின், அதையே வீணையில் வாசித்துக் காண்பிப்பார். சில சமயங்களில் வாயினால் பாடிய சங்கதியை வீணையில் வாசிப்பது கிடையாது. உதாரணமாக, 'மூத்த மாமியோ பொல்லாப் பாதக நீலி

என்ற வரியை எடுத்துக்கொள்வோம். இதை ஒரு தரம் பாடிவிடுவார். பிற்பாடு 'மூத்த மாமியோ' என்று பாடிவிட்டு, 'பொல்லா' என்ற பதத்தை வீணையில் வாசிப்பார். அப்பொழுது அந்த வீணை 'பொல்லா' என்ற வார்த்தையை பாவபூர்ணமாக உச்சரிப்பது போலிருக்கும். இப்படியாக அவர் ஊமை வாத்தியத்தைப் பேச வைத்துவிடுவார்.

அவர் கொடுத்திருக்கும் இசைத்தட்டுகளில் ஒன்று, தோடி ராகத்திலமைந்த 'அக்ரே' என்ற சுலோகம். அந்தச் சுலோகத்தை அவர் பாடவில்லை, வீணையில்தான் வாசித்திருக்கிறார். அந்தத் தட்டில் தோடி ராகம் என்று போட்டிருந்தாலே போதும். ஆனால், வேண்டுமென்றே சுலோகத்தின் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால், அவர் அந்தச் சுலோகத்தின் ஒவ்வொரு அட்சரத்தையும் மனசில் உணர்ந்து வாசித்திருக்கிறார். இந்த மாதிரி, வாத்தியத்திலும் வார்த்தை சுத்தம் இருக்க வேண்டுமென்று எண்ணி வாசித்திருப்பது ஓர் அற்புதமாகத்தான் தோன்றுகிறது. இது வரைக்கும் சங்கீத உலகத்தில் யாராவது இவ்விஷயத்தைச் சிந்தித்திருப்பார்களோ என்றுகூட நினைக்க முடியவில்லை. இந்த ஒரு விஷயம் போதும், தனம்மாளுக்குச் சங்கீத உலகத்தில் முதன்மை ஸ்தானம் கொடுக்க வேண்டுமென்பதற்கு. வாத்தியக்

காரர்களெல்லாம் மேலே சொன்னபடி வாசிக்காவிட்டாலும், இந்த மேலான தத்துவத்தை உணர்ந்தாலே போதும், நம்முடைய வாத்திய சங்கீதம் எவ்வளவோ உயர்ந்த நிலைமைக்கு முன்னேறிவிடும்.

தனம்மாள் சங்கீதத்தில் ஒரே ஒரு குறை உண்டு. அதாவது, அவர் பாடுவதும் வாசிப்பதும் வெகு தூரத்துக்குக் கேட்காது என்பது தான். ரகசியத்தைக் கூப்பாடு போட்டுப் பேச முடியுமா? அப்படிப் பேசினால் அது ரகசியமாகுமா?

இப்போது தனம்மாள் இறந்து விட்டார்.

வீணை இருக்கிறது. அதன்மேல் நடனம் புரிந்த விரலைக் காணோம். வீணையில் நாதம் இருக்கிறது. ஞானம் எங்கே? சகலகலாவல்லியான வாணியிடம் அடைக்கலம் ஆய்விட்டது.



# கடிதங்கள்-1

........அவர்களுக்கு

நமஸ்காரம். தங்களுடைய கடிதம் கண்டு பரம சந்தோஷம் கொண்டேன். அந்தக் கடிதம் இன்னும் ஒருநாள் கழித்து வந்திருந்தால், நான் இன்னொரு கடிதம் போட்டிருப்பேன். இன்றைக்குப் போடுவோமா, நாளைக்குப் போடுவோமா என்று யோசித்துக் கொண்டிருந்தபோது தங்களுடைய கடிதம் வந்து சேர்ந்தது.

சங்கீதத் துறையில் இறங்கி, 'அந்நீரிடைத் திளைத்து விளையாடும் விமரிசையை'ப்பற்றி இரண்டொரு வார்த்தைகள்: குளத்தங்கரையில், அரச மரத்தடியிலிருக்கும் படித்துறைக்கு இளம் பெண்கள், இடுப்புக்கு ஏற்றதொரு ஆபரணமோ என்று எண்ணும்படியாகக் குடத்தை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். முதலில் கொஞ்சநேரம் வெறுமனே நீச்சல் அடிக்கிறார்கள். பிற்பாடு குடத்தைக் கவிழ்த்தி மார்போடு சேர்த்துவைத்துக்கொண்டு இன்னும் அழகாக நீச்சலடிக்கிறார்கள். தண்ணீரில் மிதந்துகொண்டு நீச்சல் அடிப்பதற்குக் குடம்

அவர்களுக்கு ரொம்பவும் உதவியாயிருக்கிறது. அதேபோல, பாடுவதற்கு, சுருதி ரொம்பவும் உதவியாயிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயந்தான். சுருதி யென்றால், தம் புரா சுருதியைத்தான் குறிப்பிடுகிறேன்; ஆர் மோனியத்தையல்ல. சென்ற ஏழெட்டு நாட் களாக நான் சுருதியுடன் பாடும் 'பிரவர்த்தி' யில் இறங்கி இருக்கிறேன். இதற்கு ஒத்தாசை யாய் இருப்பவர் ஒரு குட்டி பாகவதர். பாடு வதில் அவர் ஒரு 'புலி' இல்லை என்றாலும், நல்ல ஞானஸ்தர். நல்ல சங்கீதத்தைக் கேட்டு ரஸிப்பதற்கு வேண்டிய ஞானம் உண்டு. தனம் மாள் சங்கீதம் என்றால் அவருக்கு உயிர். மேலும், ஜெயம்மாள், பால சரஸ்வதி..இவர்க ளுடைய சங்கீதத்தில் அவருக்கு ஒரே கிறுக்கு. இவர்களுடைய சங்கீதத்தையும் அவர் வேண் டிய அளவு கேட்டிருக்கிறார். இங்கே அவர் சில பெண்களுக்கு வாய்ப்பாட்டும் வீணையும் சொல்லி வைக்கிறார். அவரிடத்தில் சாஸ்திர ரீதியான சங்கீதம் கற்றுக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் எனக்கில்லை இப்போது. சுருதி சேர்க்கவும், மீட்டவும், மீட்டிக் கொண்டே பாடவும் பழக்கப்படுத்திக் கொண் டாலே போதும் இப்போதைக்கு. என் சங்கீ தத்தில் எத்தனையோ குறைபாடுகள் உண்டு. அவைகளில் முக்கியமானது, சுருதி வைத்துக் கொண்டு பாடாதது. இந்தக் குறையை நிவர்த்தி பண்ணிக் கொண்டால் நல்லதே

என்றுதான் நான் துணிந்து இந்தப் பிரவர்த்தியில் ஈடுபட்டிருக்கிறேன். ஈடுபட்ட காரியம் கைகூடுமோ என்னமோ, என்பது பற்றிக் கவலையில்லை. காரணம், 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்று ஒரு முதுமொழி கூறுகின்றது.

இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால், ராத்திரி சுமார் எட்டரை மணி இருக்கும், குட்டி பாகவதர் வந்தார். தம்புராவைத் தூக்கி மடியில் போட்டுக்கொண்டு பிரடையை முறுக்க ஆரம்பித்தார். முறுக்க முறுக்க, தந்தியின் நாதம் காதுக்கும் மனசுக்கும் இன்பகரமாக இருந்தது. இன்னும் முறுக்கினால் தேவலை என்றும் பட்டது. ஆனால், அப்போது ஒரு பயமும் ஏற்பட்டது - அதாவது, தந்தி எங்கே அறுந்துவிடுமோ என்று. இந்த மாதிரி ஒரு பயம் உங்கள் விஷயத்தில் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. உங்கள்பாட்டுக்கு ஒவ்வொரு கடிதத்திலும் என்னைப் பற்றியும் என்னுடைய எழுத்துத் திறமையைப்பற்றியும் அபாரமாகப் புகழ்ந்து வருகிறீர்கள். அன்பு ததும்பும் மொழிகளை அப்படியே அள்ளிஅள்ளிக் கொட்டுகிறீர்கள் என்பேனானால், அது எவ்வகையிலும் மிகையல்ல. அன்பாகிய தந்தியைப் பிரடைபோட்டு முறுக்கின வண்ணம் இருக்கிறீர்கள். அதுவும், போன கடிதத்தில் உச்ச சுருதிக்கு முறுக்கி விட்டு விட்டீர்கள். இந்த சுருதிக்கு என்னால் பாடமுடியுமா என்பதை, அன்பு காரணமாக,

கொஞ்சங்கூட யோசித்ததாகத் தெரியவில்லை இப்பொழுதெல்லாம், அன்பாகிய தந்தி அறுந்துவிடுமோ என்ற பயம் ஏற்படுகிறது. ஆகையால், என்னைப் புகழுவதில் தாங்கள் கொஞ்சம் மிதமாக இருந்தால் தேவலை என்று கூட எனக்குத் தோன்றுகிறது.

நான் ஒரு அரிய கலைஞன் என்பதை........ ஒப்புக்கொள்ளவேண்டும் என்று உங்களுக்கென்ன அவ்வளவு ஆத்திரம் என்பதை எண்ண எண்ண, இப்படியும் ஒரு மனுஷர் உண்டா என்று ஆச்சரியப்படவேண்டி யிருக்கிறது. ஆனல், இது சம்பந்தமாக என் மனசில் ஊறியிருக்கும் ஒரு உண்மையை உங்களுக்குச் சொன்னல்தான் என் மனசு ஆறும்........ அவருக்கு என்னைப் பற்றி உங்களுக்குத் தெரிந்த அளவு தெரியாது. உங்களுடன் பேசுவதுபோல் அவரிடம் ஒரு நாள் கூடப் பேசினது கிடையாது. பேச்செல்லாம் வேறு தினுசாகத்தான் இருக்கும். விஷயங்களும் வேருகத்தான் இருக்கும்.............கலை, கவி முதலிய விஷயங்களைப் பற்றியெல்லாம் பேச்சு எடுப்பதே கிடையாது. அப்படியிருக்க, எனக்கிருக்கும் சொற்ப கலாபிமானமும் கவிதா பக்தியும் எப்படி வெளியாகும்?

...............எதிலும் நான் அனுவசியமாக இச்சையோ ஆசையோ வைப்பது கிடையாது. சரியான அஸ்திவாரமில்லாமல் ஆசைக்கோட்

டைகள் கட்டுவது கிடையாது. நான் ஒரு பேராசைக்காரனல்ல. 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற பொன்மொழியை எவ்வளவு தூரம் நடைமுறையில் கொண்டுவர முடியுமோ அவ்வளவு தூரம் கொண்டுவர முயன்றிருக்கிறேன்; முயன்றும் வருகிறேன். இப்படியெல்லாம் மனதைச் சரியாக வைத்துக் கொண்டிருக்கும் என்னையே ஏமாற்றத்துக்கு உள்ளாக்க வேண்டுமானல், பார்த்துக் கொள்ளுங்களேன்! அதிகம் சொல்வானேன்? தம்புராவில் நாலரைக் கட்டை சுருதிக்கு ஒருவரை லயித்துப் பாடச் சொல்லிவிட்டு, கொஞ்ச நேரம் "சபாஷ்! பலே!" என்றெல்லாம் உற்சாகப்படுத்திவிட்டு, திடீரென்று தந்தியை வேணுமென்றே அறுத்து விட்ட மாதிரித்தான் இருக்கிறது இவருடைய சொல்லும், அதற்கு முற்றிலும் மாருன உணர்ச்சியும் செயலும். இன்னும் எவ்வளவோ சொல்லலாம். வேண்டாம். இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன் இப்போதைக்கு.

............சினிமாவுக்குக் கூட்டிக் கொண்டு போகாததற்கு ஒரு குழந்தை விழுந்து விழுந்து அழுததாம். உடனே அதனுடைய தகப்பனுர் சீனிச் சர்க்கரை மிட்டாய் வாங்கிக் குழந்தை கையில் கொடுத்துவிட்டு, 'அழாதே பாப்பா' என்ருராம். இது மாதிரித்தான் இருக்கிறது, இவர் செய்யும் சில காரியங்கள். ஆனல், எதற்கும் நான் அழவும் மாட்டேன்,

எதற்கும் நான் பிரமாதமாகச் சந்தோஷப்படவும் மாட்டேன்.... இதுகூடவா எனக்குத் தெரியாமல் போய்விடும்? நம்மை அனுவசியமாக வருத்தத்துக் குள்ளாக்குகிறவர்களைப் பார்த்துக் கோபப்படுவதற்குப் பதிலாக நன்ருய்ச் சிரித்துவிட்டால், எல்லாம் சரியாய்ப் போய்விடு மல்லவா? சிரிப்பதென்பது இலேசான காரியமல்லதான். இருந்தாலும், இந்தக் கலையைப் பழகிக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் இந்த உலகத்தில் நம்மால் சந்தோஷமாக வாழ்வைக் கழிக்க முடியுமா? உலக வாழ்வைச் சந்தோஷமாகக் கழிக்க வேண்டும் என்பதைக் காட்டிலும் மேலான ஒரு லட்சியம் இருக்கவா செய்கிறது? இருந்தாலும், ஒரு ஆங்கில ஆசிரியர் சொல்லியதுபோல, அனுபவமென்பது துன்பத்தைச் சகிப்பதனுல் உண்டாவது தானே?

தங்கள்,

14—3—1938 தெ. சி. தீத்தாரப்பன்.



18

# கதவைத் திறவாய்

ராத்திரி சுமார் இரண்டு மணி. பாடகலிங்கம் பிள்ளை நாடகத்துக்குப் போய்விட்டு வீட்டுக்கு வந்து, வாசற் கதவின் முன் நின்றுகொண்டிருக்கிறார்.

"இந்தா, உன்னைத்தானே! ஏவ்! எந்திரிச்சு வந்து கதவைத் திற வா, ஏவ்! காது கேக்கலெ? [தட் தட் தட்டென்று கதவுடன் முஷ்டி யுத்தம் செய்கிறார். பிரயோசனம் இல்லாதது கண்டு, எரிச்சலில் தனக்குத் தானே:] என்னடா இது! அப்படியா தூக்கம்! சே! எத்தனைத் தட்டுத் தட்டியாச்சு! எத்தனைச் சத்தம் போட்டாச்சு! ஏவ்! திறக்கையா இல்லையா?"

"யாரது?" [இரண்டு கட்டுக்கு அந்தப்புறம் இருந்து குரல் வருகிறது.]

"என்ன, நான் தான், கதவைத் திற."

"நான் தான்னு, யாரு?"

"நான் தான். நான் தான். நான் தான்!"

"நான் தானென்றால் என்னையா அர்த்தம்? யாரென்றுதான் சொல்லுங்களேன்?"

"உனக்கு யாரென்று தெரியவில்லையோ?"

"கதவுக்கு அந்தப்புறம் இருக்கிறவாளை வூட்டுக்குள்ளே யிருந்து யாரென்று கண்டு பிடிச்சிட முடியுமோ?"

"கதவைத் திறந்துவிட்டால் இன்னார்தா னென்று உடனே தெரிந்துவிடுகிறது."

"இன்னார்தானென்று தெரிந்து விட்டால் கதவை உடனே திறந்துவிடுவேன். ஆளைத் தான் அடையாளம் கண்டுபிடிக்க முடியலையே!"

"இந்தா, விளையாட்டுப் பண்ணுதே! எனக்கு ரொம்பக் கோபம் வந்திரும்! மரியா தையாய்க் கதவைத் திறந்திரு. இல்லே, நாளைக்கு உன்னை லேசில் விடமாட்டேன், பார்த்துக்கோ. கொண்ணு குழியை வெட்டி இறக்கிப் போடுவேன், பத்திரம்! கதவைத் திறக்கையா, இல்லையா? உனக்கென்ன வேணும்?"

"எனக்கு ஒண்ணும் வேண்டாம். நீங்க பாட்டுக்கு வாயைப் பொத்திக்கொண்டு சும்மா இருந்தாப் போதும். தெரியாத மனுஷாளிடம் பேச்சுக் கொடுத்தது பிசகுன்னு இப் போல்லா தெரியுது? கன்னபின்னன்னு பேசு தேகளே! பொம்புளை கிட்ட எப்படிப் பேச ணும்னு தெரியலையே? பேசாமல் வந்த வழி யைப் பார்த்துப் போங்கையா!"

"கோவிச்சுக்கிடாதம்மா! என் கண் ணுல்ல! உனக்கு நகை நட்டெல்லாம் வாங்கித்

தாரேன். கொஞ்சம் கதவைத் திற. நீ நல்லா யிருப்பே.''

"என்னையா? பீடம் தெரியாமல் சாமி யாடுறீக? கொஞ்சம் இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குதேகளே! நகைநட்டெல் லாம் வாங்கித் தரப்போறீகளா? பேஷ்! ரொம்ப நல்லாருக்கு! இந்த மாதிரிப் பேச்செல் லாம் இங்கே வச்சுக்கிடப்படாது. இதெல்லாம் வேறிடத்திலே வச்சுக்கிடணும், தெரிஞ்சிதா?''

"காமி சத்தியபாமா, கதவைத் திறவாய்! கதவைத் திறவாய்! கத........''

"சே! சே! பாட்டை நிறுத்துங்க. போதும் போதும். நல்லா, கண்ணை முழிச்சிப் பாருங்க. இது வீடாக்கும். நாடகக் கொட்டகையல்ல. நானும் நாடகக்காரியல்ல, அப்படிக் கண்டா நினைச்சுட்டேகளா?''

"ஆமா! அப்படித்தான்.''

"ஆமாவா, பொரிமாவா? நாடகத்துக்குப் போறவாளுக்கு உலகமே நாடகமாகத்தான் தோணும்....''

"அது மட்டுமா, உலகத்திலுள்ள பெண்க ளெல்லாம் நாடகக்காரிகளாகவும் தோணும். ஏனென்றால் பெண்கள், நடிப்புக்கு, அதாவது பாசாங்குக்குப் பேர் போனவர்களல்லவா?''

"இது வேறு கேடா நீங்க கெட்ட கேட்டுக்கு? உங்களிடத்தில் பாசாங்கு பண்ணி ஆக வேண்டிய தென்ன இருக்கு?"

"எனக்குத் தெரியாது. ஆனல், நீ பண்ணுவதெல்லாம் பாசாங்குதான்னு நல்லாத் தெரியுது. என்னேயே தெரியலேன்னு முழுப் பூசனிக்காயைச் சோத்தில் அமுக்குதியே!"

"ஓகோ! இவ்வளவும் பாசாங்குன்னு எண்ணிக் கிட்டிருக்கேக? அந்தப் பூச்சியெல்லாம் இங்கே பலிக்காது. போங்கையா போங்க, வந்த வழியைப் பார்த்து! சும்மாத் தொந்தரவு பண்ணதைங்க."

"இந்தா பாரு! அப்பதையே பிடிச்சு நிண்ணு நிண்ணு காலு வலிக்கி. கதவைத் தட்டித் தட்டிக் கை வலிக்கி. கடைசியாக ஒரே ஒரு கேள்வி: திறப்பயா? மாட்டையா?"

"மாட்டேன்."

"ஏவ்! கதவைத் திற. இனிமேல் நாடகத்துக்குப் போகலே. வீட்டுக்கு நேரங் கழிச்சு வரலே. சத்தியமாய்ச் சொல்றேன். கண்ணே சொல்றேன். கதவைத் திறந்திரு. [பதில் இல்லை] இந்தா உன்னைத்தானே! ஏ, குஞ்சரம்!"

[பேச்சு மூச்சுக் கிடையாது. நமக்கு விதித்த விதி இதுதானென்று பாடகலிங்கம் பிள்ளைவாள் வெளித் திண்ணையில் மேல் துண்டை விரித்துப் படுத்துக் கொண்டார்கள். படுத்ததுதான் தாமதம், ரோந்து சுற்றும்

போலீஸ்காரன் பிள்ளைவாள் முன் பிரசன்ன மாகிறுன்.]

"யாரையா அது, திண்ணையிலே படுத் திருக்கது?"

"நான்தான்."

"நான்தான்! அதென்ன நான்தான்?"

"இந்த வீட்டுக்காரர்தான்."

"இந்த வீட்டுக்காரா? அப்பன்ன இங்கே படுப்பானேன்?"

"இல்லை, கதவை ரொம்ப நேரம் தட்டிப் பார்த்தேன். திறக்கறதாக் காணும். அப்ப டியே துண்டை விரித்து இங்கேயே படுத் திட்டேன்."

"பொய் சொல்லாதேயும். உண்மை யைச் சொல்லும். கிடைச்சதைப் பையச் சுருட் டிக்கிட்டுப் போகலாம்னு வந்திருக்கேரா? அதென்ன தலைக்குக் கீழே சுருட்டி வச்சிருக் கேரு?"

"ஒண்ணுமில்லை. என் சட்டையைத்தான் சுருட்டி வச்சிருக்கேன்."

"அதை எடுமையா வெளியே, பார்ப்போம். [சுருட்டி வைத்த சட்டையை உதறிக் காட்டுகிறுர்.] அதென்னமோ ரூபாச் சத்தம் கேக்கே, பைக் குள்ள என்ன வச்சிருக்கேரு?"

"மணி பாக்ஸ்."

"எங்கே பார்ப்போம். [பிள்ளைவாள் எடுத்துக் காண்பிக்கிறார்.] இது யாருடையது?"

"என்னுடையதுதான்."

"எப்போ பிடிச்சு உம்முடையது?"

"அனாவசியமாகச் சந்தேகப்பட வேண்டாம். நீர் நினைக்கிறபடி நான் முடிச்சவிழ்க்கும் பேர்வழியல்ல. மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்கிற மாதிரி போலீஸ்காரர்களுக்குக் கண்ட பேரெல்லாம் கள்ளப் பயல்களாகத் தோணும். என் வார்த்தையை நம்பாட்டா, பக்கத்து வீட்டுக்காரர்களிடம் கேட்டுக்கொள்ளும். சந்தேகம் நிவர்த்தியாகி விடும்."

இந்தச் சந்தர்ப்பத்தில், நல்லவேளையாக, இவர்கள் இரண்டு பேரும் போட்ட சத்தத்தில் விழித்தெழுந்த பக்கத்து வீட்டுக்காரர்கள் இரண்டொருத்தர் என்னடா சமாசாரம் என்று பார்க்க வந்துவிட்டார்கள். அவர்கள் வந்து உண்மையைச்சொன்னதுந்தான் போலீஸ்காரனுக்கும் சந்தேகம் தெளிந்தது; பாடகலிங்கம் பிள்ளைக்கும் போன உயிர் திரும்பி வந்தது. இந்த அல்லோலகல்லோலத்தில் வீட்டுக்கு எஜமானியான குஞ்சரமும் எழுந்திருந்து வெளியே வந்து பார்த்தாள். உடனே, குனிந்த தலை நிமிராமல் பாடகலிங்கம் பிள்ளை வீட்டுக்குள் நுழைந்தார்.

அவரைப் பின்தொடர்ந்து வந்த குஞ்சரம் பரபரப்புடன், "என்ன சமாசாரம்? போலீஸ் காரன் வந்திருக்கானே? என்ன நடந்தது?" என்று கேட்டாள்.

"ஒண்ணுமில்லை. வெளித் திண்ணையிலே துண்டை விரிச்சுப் படுத்திருந்தேன். போலீஸ் காரன் என்னை வேறே யாரோன்னு எண்ணிக் கிட்டுக் குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பிச் சிட்டான். அவ்வளவுதான்."

"அவ்வளவுதானு? இவ்வளவு போதாதா? இதெல்லாம் என்னத்துக்கு? காலாகாலத்தில் வீட்டுக்கு வந்துவிட்டால் இந்த வம்பெல்லாம் உண்டா?"

"நான்தான் அப்பதையே வந்து எழவு கொண்டாடிட்டனே!"

"பின்ன ஏன் கதவைத் தட்டி என்னை எழுப்பலே? நான் எந்திருந்து வந்திருக்க மாட்டனு? இதுக்கு முன்னல் எத்தனை நாள் நான் நடுச்சாமத்திலே எந்திரிச்சுக் கத வைத் திறந்திருக்கேன்? உங்க வேலையே இப்படித்தான்."

"போதும்' உன்னுடைய விசாரிப்பெல் லாம்! வாயை மூடு, கழுதை!"

"புருஷன் அடிச்சானும், பிள்ளை கன் னத்தைப் போய்க் கடிச்சாளாம் இன்னுப்பலே

இருக்கே உங்க கதை. நான் என்ன செஞ்சேன்? எம்மேலே கோவப்படுதேகளே?"

"நீ ஒண்ணும் செய்யலே. உன்னுடைய வாய் சும்மாவா இருந்தது? அதிகப்பிரசங்கி. இப்போ வந்து, 'கதவைத் தட்டினுலென்ன? நான் எந்திரிக்கமாட்டனு? திறக்கமாட்டனு?' என்றெல்லாம் ரொம்ப நல்ல மாதிரி பேசறயே; ராத்திரிப் பூராவும் நாக்குமேலே பல்லேப்போட்டுப் பேசினயே, அதெல்லாம் அதுக்குள்ளயா மறந்திட்டே? அல்லது நான் அதையெல்லாம் மறந்திட்டேன்னு கண்டா நினைச்சுக்கிட்டாயா?

"எனக்கு நீங்க சொல்றது ஒண்ணும் விளங்கலேயே?"

"உனக்கு எப்படி விளங்கும்? நல்லா ரெண்டு சாத்தினுல் விளங்கும். நான் கதவைத் தட்டினது உனக்குத் தெரியாது?"

"யார் தட்டினு?"

"யாரா? நான்தான்."

"நிஜமா?"

"என்ன? நிஜமா தான்னு சொல்றேன் நம்பிக்கை யில்லேயோ?"

"நிஜமா நீங்க கதவைத் தட்டினேகளா?"

"சட், கழுதை! அப்படியே அறைஞ்சன்னு? அப்பதையே பிடிச்சுப் பாத்துக்கிட்டிருக்கேன், சும்மாச் சும்மா 'நிஜமா? நீங்களா'ன்னு கேட்டுக்கிட் டிருக்கையா?"

"பார்த்தேகளா? [குஞ்சரத்தின் ஆள்காட்டி விரல் அவளுடைய மூக்கின் மேல் ஏறிக்கொண்டது.] இவ்வளவுக்கும், திறக்கக் கதவுப்பக்கம் வந்தேன். கொஞ்சநேரம் யோசித்துவிட்டுக் கதவைத் திறக்காம மறுபடியும் போய் படுத்துத் தூங்கிட்டேன்."

"திறந்தாலென்ன கொள்ளை?"

"திறந்திருப்பேனே? இதுக்கு முன்னெல்லாம் திறக்கலையா? பாருங்க, அவ்வளவையும் சொப்பனம்னு எண்ணிப்புட்டேன். அதுதான் திரும்பப் போய்ப் படுத்துக்கிட்டேன்." (குஞ்சரத்தின் கைகள் ஒன்றையொன்று பிசைய ஆரம்பித்தன.)

"அட எழவே! என்ன செய்யலாம்! நம்ம தலை வதி! உன்னைக் கட்டி மாரடிக்கவேண்டியிருக்கு!" என்று முனகின பாடகலிங்கம் பிள்ளையின் வலது கை அவருடைய தலையில் மோதிக்கொண்டது.



# காகிதக் கப்பல்

வெகு நேரம் மழை பெய்து வெறித்தது. வீதியில் இரண்டு பக்கமும் வாராங்காலில் மழைத் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது.

வீட்டிலே ஒரு மூலையில், தினசரிப் பத்திரிகைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவைகளில் ஒன்றை எடுத்து, ஒரு காகிதத்தைக் கிழித்துக்கொண்டு ஓடினன் கணபதி.

மாமா ஏதோ புஸ்தகம் படித்துக்கொண்டிருந்தார். மாமா முகத்துக்கும் கையிலுள்ள புஸ்தகத்துக்கும் இடையே கணபதி அந்தக் காகிதத்தை நீட்டினன். மாமா, காகிதத்தைக் கையில் வாங்கி வாசித்துப் பார்த்தார். அதில், ரங்கூனுக்குப் போகும் கப்பல் ஒன்று நடுக் கடலில் கவிழ்ந்ததென்றும்; அதனல் உயிர்ச் சேதமும் பொருள் சேதமும் எவ்வளவோ ஏற்பட்டது என்றும் கண்டிருந்தது.

"இதுக் கென்னடா?"


"கப்பல் செய்து தா, மாமா,"

"பேஷ்! கப்பல் செய்ய நல்ல காகிதம் எடுத்துக் கொண்டு வந்தாய்" என்று சொல்

விச் சிரித்துக் கொண்டே, நாலைந்து கப்பல் செய்து கொடுத்தார். கணபதி ஒரே ஓட்டத்தில் வாராங்காலுக்கு ஓடி வந்தான்.

வாராங்காலில் மழைத்தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. ஒரு கப்பலை மெள்ள மிதக்க விட்டான். கொஞ்ச தூரத்துக்குக் கப்பல் ஆடி அசைந்துகொண்டு போயிற்று. கணபதிக்கு ஒரே ஆனந்தம். திடீரென்று அந்தக் கப்பல் கவிழ்ந்து மூழ்கிவிட்டது. 'கப்பல் மூழ்கிப் போச்சுடோ!' என்று கணபதி குதித்தான். இன்னொரு கப்பலை விட்டான். கொஞ்ச தூரம் மிதந்துபோயிற்று. பிற்பாடு அதுவும் கவிழ்ந்தது. கணபதி, 'குதிடா குதி' என்று குதித்தான்.

கப்பல் மிதந்தாலும் சந்தோஷந்தான், மூழ்கினாலும் சந்தோஷந்தான்.





20

# பாப்பாவும் மரப்பாச்சியும்

கனவிலும் பாப்பாவுக்கு மரப்பாச்சி ஞாபகந்தான்; நனவிலோ கேட்கவேண்டாம். அம்மா பாப்பாவைக் குளிப்பாட்டுவாள்; பாப்பா உடனே மரப்பாச்சியைக் குளிப்பாட்டி விடுவாள். அம்மா பாப்பாவுக்கு ஆகாரம் ஊட்டுவாள்; பாப்பாவும் மரப்பாச்சிக்கு ஊட்ட ஆரம்பித்து விடுவாள். இதென்ன பைத்தியக்காரத்தனம் என்று சிலர் எண்ணலாம். மரப்பாச்சியின் உயிர்த்தத்துவத்தைப் பற்றிப் பாப்பாவுக்கல்லவோ தெரியும்! மரப்

பாச்சிக்கு ஊட்டுவது மட்டுமா? அதற்குத் தலை பின்னி விடுவாள், குங்குமப் பொட்டிடுவாள், இன்னும் என்னவெல்லாமோ செய்வாள்.

ஒரு நாள், பாப்பா கொஞ்சநேரம் மரப் பாச்சியை மறந்து, பக்கத்து வீட்டுப் பெண்களுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். விளையாடிக் கொண்டிருந்தவள், களைப்பு மேலீட்டாலோ என்னமோ தெரியவில்லை, வீட்டுக்குள் போய் ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டாள். கொஞ்ச நேரம் அப்படியே சும்மா உட்கார்ந்திருந்தாள். விளையாடும் இடத்தில் பாப்பாவின் சத்தம் கேட்கவில்லையே என்று அம்மா அங்கே வந்து பார்த்தாள். பாப்பா முகம் வாடியிருந்தது.

"பாப்பா! உன்னை அந்தப் பெண்களெல்லாம் விளையாட்டில் சேர்க்கவில்லையா?" என்று அம்மா கேட்டாள். கேள்விக்குப் பதிலே இல்லை. அம்மா பாப்பா நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். கொஞ்சம் சூடாக இருந்தது. மார்பில் கையை வைத்துப் பார்த்தாள். அங்கேயும் சூடு இருந்தது. சரி, காய்ச்சல் அடிக்கிறதென்று படுக்கையை விரித்துப் 'படுத்துக் கொள்' என்றாள். பாப்பா படுக்கையில் படுத்துக்கொண்டாள். படுத்ததும், அம்மா ஒரு அடி எடுத்து வைத்திருப்பாள்; பாப்பா அழ ஆரம்பித்துவிட்டாள். அம்மா உடனே திரும்பி

வந்து, "அழாதே கண்ணே, மறந்துபோய் விட்டேன்" என்று சொல்லிவிட்டு, பாப்பா படுக்கைக்குப் பக்கத்தில் இன்னொரு சின்னப் படுக்கை போட்டு, அதில் மரப்பாச்சியைப் படுக்கப் போட்டாள். அழுகை நின்றுவிட்டது. அம்மா சமையல் அறைக்குள் போய் விட்டாள்.

ராத்திரி எட்டு எட்டரை மணி இருக்கும். வைத்தியர் வந்தார். குழந்தையின் கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு, "காய்ச்சல் அதிகமாக ஒன்றுமில்லை. நாளைக்குச் சரியாகப் போய் விடும். எதற்கும் கொஞ்சம் தேன் கொண்டு வாருங்கள்; இந்த மாத்திரையைக் கொடுத்து விட்டுப் போகிறேன்" என்று சொன்னார். தேன் கொண்டு வரப்பட்டது. அதில் மாத்திரையைக் கலந்து பாப்பாவுக்குக் கொடுத்தார். பாப்பாவும் மாத்திரையைத் தின்று விட்டாள். வைத்தியர் புறப்பட்டுப் போய் விட்டார்.

வைத்தியர் போனதுதான் தாமதம். பாப்பா அழ ஆரம்பித்து விட்டாள். அம்மாவும் பிறரும் எப்படியெல்லாமோ சமாதானம் செய்து பார்த்தார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. பாப்பா வெகு நேரம் தேம்பித் தேம்பி அழுதுகொண்டே இருந்தாள். விடியும் மட்டும் அழுது ஓய்ந்தாள். அதாவது, களைப்பு மிகுதியால் தன்னை அறியாமலேயே தூங்கி விட்டாள். கண்ணீரால் கரைக்க முடி

யாத ஒரு மனக் கவலையைத் தூக்கத்தில் மறந்துவிட்டாள். சிறு குழந்தைதானே! நம்மைப் போல் அவளால் கவலையை ஊறுகாய் போட்டு வைக்க முடியாதுதானே? இருந்தாலும், அந்தக் கவலை குழந்தையின் பரிசுத்த ஆன்மாவைச் சிறிது பாழாக்கி விட்டது என்பது என்னமோ வாஸ்தவம்தான்.

அந்த வைத்தியருக்கு இது தெரிய வேண்டாமா? பாப்பாவுக்குக் கை பார்த்து மாத்திரை கொடுத்தவர், அவள் பக்கத்தில் படுத்திருந்த அந்த மரப்பாச்சிக்கும் கை பார்த்து மருந்து கொடுக்கக் கூடாதா?

பாவம்! வைத்தியர் மேலும் குற்றமில்லை தான். குழந்தை மனசைப்பற்றி அவருக்கு என்ன தெரியும்?

# கோலமிடும் கை



கோலமிடும்
கையே
- குனிந்துதெரு
வாசல்நிதம்
கோலமிடும்
கையே. 1

ஞானமிகும் கையே
- நளினமுடன் வீணைதனில்
தானமிடும் கையே. 2
வளையாடும் கையே
- வந்துபின்னே கண்ணைப்பொத்தி
விளையாடும் கையே. 3
வாருமென்னும் கையே
- வரவழைத்தே ஒருமுத்தம்
தாருமென்னும் கையே. 4
மாலையிட்ட கையே
- மனமகிழ்ந்து கண்ணிலொற்றக்
காலைத்தொட்ட கையே. 5

# நவராத்திரி

நாடெங்கும் நவராத்திரி விமரிசையாய் நடக்கிறது. விதவிதமான பொம்மைகளுக்கு விதவிதமான அலங்காரம். உயிருள்ள பொம்மைகள் என்று சொல்லும்படி அழகுவாய்ந்த குழந்தைகளுக்கும் அலங்காரம். குழந்தைகளைக் கண்ணாடிப் பொம்மை போல் பாதுகாக்கும் பெண்களுக்கும் அலங்காரம். இவ்வளவும் ஆடவர்கள் கண்ணுக்கும் மனதுக்கும் அலங்காரம். வீடுதோறும் சந்தோஷத்துக்குக் குறைவேது?

நவராத்திரியின்போது ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்மன் கொலுவீற்றிருப்பதாக ஒரு ஐதிகம். சக்தி தேவியான பார்வதி, செல்வத் திருமகளான இலக்குமி, கல்விக்கரசியான சரசுவதி இம்மூன்று தேவிகளின் அம்சமும் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியினிடத்தில் ஒருங்கே அமைந்திருக்கிறது. இந்த ஒன்பது நாட்களும் கோயில்களிலும் வீடுகளிலும் ராஜேஸ்வரி தேவிக்குப் பூஜை நடக்கும்.

அவள் சன்னிதியில் நாதசுரக் கச்சேரி, பாட்டுக் கச்சேரி, பரதநாட்டியக் கச்சேரி, கதா காலட்சேபங்கள், பிரசங்கங்கள் முதலியன நடைபெறும். மண்பொம்மைகளுக்குப் பதில் கோவிலிலே கற்சிலைகள்.

ஆரம்பத்தில் நம்முடைய ஜனங்கள் ராஜ ராஜேஸ்வரியின் விக்கிரகத்தைமட்டும் அலங்காரம் செய்து பூஜைகள் நடத்தி வந்திருப்பார்கள். அப்பொழுது பக்திப் பெருக்கை மட்டும் வெளியிட்டு வந்தார்கள். நாளடைவில் கலைஞானத்தை வெளியிடலானார்கள். பராசக்தியின் விக்கிரகத்துடன் பலவேறு பொம்மைகளையும் அலங்காரமாகக் கொலுவில் வைத்தார்கள். ஒரு காலத்தில் நல்ல நல்ல பொம்மைகளாக வைத்திருப்பார்கள். இந்தப் பண்டிகை காரணமாகப் பொம்மைக் கலை எவ்வளவோ விருத்தியடைந்திருக்க வேண்டும். கல்லிலே அற்புதமாக விக்கிரகங்கள் செதுக்கிய நம்முடைய முன்னோர்களுக்கு, மண்ணிலும் மரத்திலும் பொம்மைகள் செய்வதா பெரிய காரியம்? ஆனால் இப்போது அந்த அரிய கலை க்ஷீணித்துவிட்ட காரணத்தினால், கலைப்பண்பு நிறைந்த மேலான பொம்மைகள் கிடைப்பதில்லை. அதற்காகப் பண்டிகையையே கொண்டாடாமல் இருந்து விடலாமா? ஏதோ இருப்பதற்குள் நல்ல பொம்மைகளாக வாங்கிவைத்துக் கொண்டாடினால், பொம்மைக்கலை மறு

படியும் அபிவிருத்தியடைந்து, பழைய நிலைமைக்கு வரலாம். ஆனால், சில வீடுகளில் ஏதாவது வைக்க வேண்டுமே யென்று ஜப்பானிலிருந்து கப்பல் கப்பலாக வந்து, சைனா பஜாரில் குவியல் குவியலாகக் கிடக்கும் இரண்டணா ரயில்களையும், ஒன்றரை அணா மோட்டார்களையும் கொலுவில் வைத்து விடுகிறார்கள். இன்னும் சில வீடுகளில் தகர 'டின்'களையே அலங்காரம் என்று எண்ணி வைத்து விடுகிறார்கள். கொலு வைப்பதில் இந்த மாதிரி மோகம் இருக்கவே கூடாது. இது பண்டிகையை அர்த்தமில்லாமல் ஆக்கி விடுகிறது. சம்பிரதாயத்துக்கு நேர் விரோதம். பொம்மைக் கலைக்கும் கேடு. சுத்த கர்நாடகபாணியில் தோடி ராகம் பாடிக்கொண்டு வரும் போதே அதில் * சிந்து பைரவியைக் கலப்பது போல் இருக்கிறது.

இந்தப் பண்டிகையில், பொம்மைக் கலையுடன் சங்கீதமும் சேர்ந்து விடுகிறது. வீட்டில் உள்ளவர்களும், பக்கத்து வீடுகளிலிருந்து வந்த எல்லோரும் தலைக்கு ஒரு பாட்டாவது பாடியாக வேண்டும். பாடச் சொன்னால் சில பெண்கள், 'அட்டியல் இருக்கமா யிருக்குதடி' என்றும், 'புதுப் புடவை கட்டிண்டிருக்கேன். ஒரே கசகசான்னு இருக்கு. இதிலே எப்படிடீ பாட?" என்றும், முதலில் சொல்லுவார்கள்.

* சிந்து பைரவி அசல் கர்நாடக ராகமல்ல.

உடனே ஒரு பாட்டி 'இந்த நாளில் பாடத் தெரிந்தவர்கள்தான் பாடுவது கிடையாதே. பாடத் தெரிந்தவர்கள் யாரேனும் பாடுங்கடி, என்று குத்தலாகச் சொல்லுவாள். கடைசியில் மாட்டவே மாட்டேன் என்று சொன்ன பெண்களே பாடி விடுவதும், எல்லாம் ஒரே கொண்டாட்டந்தான்.

இன்னும், நவராத்திரி நாட்களில் சாயங் கால வேளையிலே, மஞ்சள் வெயிலில், சித்திர வீதியில், நேர்த்தியான புடவைகளைக் கட்டிக் கொண்டு, வீட்டுக்கு வீடு இந்தப் பெண்டுகள் அழைக்கப் போவது இருக்கிறதே—அது உலகத்தில் வேறெங்கும் காண முடியாத கண் கொள்ளாக் காட்சி.



# பாரிஸ்டர் பார்வதி நாதன்

பூனமலை ஹைரோட் வழியாக வந்து கொண்டிருந்த தபால்காரன், பாரிஸ்டர் பார்வதி நாதன் பங்களாப் பக்கம் வந்தவுடனே, காகிதக் கட்டைப் பிரித்து, இரண்டு காகிதங்களைக் கையில் எடுத்துக் கொண்டு, மெதுவாகத் தெருவாசல் கதவைத் திறந்து கொண்டு, தோட்டத்துக்குள் நுழைந்தான். தோட்டத்தைத் தாண்டி பங்களா வாசலுக்குப் போனதும், செருப்பைக் கழற்றிவிட்டு, பாரிஸ்டர் இருந்த அறைக்குள் போனான். அப்பொழுது பாரிஸ்டர் நகத்தைக் கடித்துக் கொண்டும், அறையில் அங்கு மிங்கும் நடந்து கொண்டும் இருந்தார். தபால்காரன் "ஐயா, தபால்!" என்றதும் பாரிஸ்டர் திடுக்கிட்டுப் போனார். உடனே ஒரு மாதிரி சமாளித்துக் கொண்டு, ஒருவித பரபரப்புடன் கையை நீட்டித் தபால்காரனிடமிருந்து கடிதங்களை வாங்கினார். இரண்டையும் அவசர அவசரமாகப் பிரித்துப் பார்த்ததுதான் மிச்சம்; படித்துப் பார்க்காமலேயே எரிச்சலுடன் மேஜைமேல் எறிந்து விட்டார். உடனே, உலகத்தையே

வெறுப்பவர் போல் 'சே' என்று சொல்லி விட்டு நாற்காலியில் போய்ச் சாய்ந்தார். சாய்ந் ததும், தபால்காரன் நின்று கொண்டிருப் பதைப் பார்த்தார். "ஏ, இங்கே ஏன் நிற்கிறாய்? போ, வெளியே போ!" என்று சீறி விழுந்தார்.

அடுத்த நாள், பார்வதிநாதன் நாற்காலி யில் உட்கார்ந்துகொண்டு, ஒரு பெண்ணின் படத்தைக் கையில் பிடித்த வண்ணம் ஆழ்ந்த யோசனையில் இருந்தார். மனசில் துக்கம் நிறைந்திருந்தது என்பது அவர் முகத்தில் தெரிந்தது. அடங்கின குரலில் அப்படத்துடன் உருக்கமாக இரண்டொரு வார்த்தைகள் கூடப் பேசிவிட்டார். உடனே, அவர் கண்களில் நீர் பொங்கி வழிய ஆரம்பித்தது. அச்சமயம், அதே தபால்காரன் பயபக்தியுடன் மெள்ள நடந்து வந்து, ஒரு கடிதத்தைப் பார்வதி நாத னிடம் கொடுத்து விட்டுப் 'பிழைத்தோம், பிழைத்தோம்' என்று ஓடியே போய்விட்டான்.

பார்வதிநாதன் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார். மேகம் விலகியதும் சந்திரன் பூரண ஒளியுடன் பிரகாசிப்பதுபோல, சந்தோஷத்தி னால் அவர் முகம் பிரகாசித்தது. கடிதத் தைப் படிக்கப் படிக்க, அவருடைய முகத்தில் ஏற்பட்ட சோபை அதிகரித்துக் கொண்டே போயிற்று. கடிதத்தைப் படித்து முடித்ததும் முந்தின தினம் நடந்தது தற்செயலாக ஞாபகம் வரவே, ஒரு வேலைக்காரனை விட்டுத் தபால்

காரனை அழைத்து வரும்படி சொன்னார். கொஞ்ச நேரத்தில் தபால்காரன் பாரிஸ்டர் அறைக்குள்ளே வந்தான். கையில் வைத்திருந்த ஒரு ரூபாயைப் பார்வதிநாதன் தபால் காரன் கையில் கொடுத்தார்.

தபால்காரனுக்கு விஷயம் ஒன்றும் விளங்கவில்லை. 'அன்றைக்கு அப்படிச் சீறி விழுந்தார்; இன்றைக்கு இப்படி ஒரு ரூபாயை வீசி எறிகிறார். இந்த விபரீத நடத்தைக்கு என்ன காரணமோ தெரியவில்லை' என்று எண்ணினான். பிற்பாடு, 'இதையெல்லாம்பற்றி நமக்கென்ன கவலை? கிடைத்தது லாபம். புண்ணியவான் மகாராஜனாக இருக்க வேண்டும்' என்று வாழ்த்தி விட்டு, சந்தோஷமாக வீடு போய்ச் சேர்ந்தான்.

ஆனால் தபால்காரன் மாதிரி வாசகர்கள் இருந்துவிட முடியாது. (கிடைத்தது லாபம் என்று சும்மா இருப்பதற்கு, உங்களுக்குப் பார்வதிநாதன் ஒன்றும் கொடுக்கவில்லை.) அந்தக் கடிதத்தைப் பார்த்ததும் அவருக்கு அவ்வளவு ஆனந்தம் உண்டாவானேன்? இதற்குரிய காரணத்தை அறிய, அந்தக் கடிதம் யாருடையது, அதில் என்ன எழுதியிருந்தது என்பதெல்லாம் தெரிந்தால் மட்டும் காணாது; பார்வதிநாதனுடைய பூர்வோத்தரமே கொஞ்சம் தெரிந்திருக்க வேண்டியது அவசியம்.

உ

பார்வதிநாதன் சென்னை ராஜதானிக் கல்லூரிச் சரக்கு. நயம் சரக்குங்கூட. இலக்கிய ஆனர்ஸ் பரீட்சையில் ராஜதானியிலேயே முதல் மாணக்கராகத் தேறினர். இப்பேர்ப்பட்டவருக்கு, இந்தியாவும் இந்தியாவில் நடக்கும் பரீட்சைகளும் எம்மாத்திரம்? ஆகவே, ஐ. ஸி. எஸ். பரீட்சைக்காக சீமைக்குக் கப்பல் ஏறினர்.

சீமையில் வீடும் விடுதியும் ஒருங்கே வாடகைக்கு விடும் ஒரு ஸ்திரீயின் உபசாரப் பான்மையின் மேன்மையில் உளங்களித்து, உடல்வளர்த்து வரலானர். கொஞ்ச நாளைக்குச் சீமையின் அதிசயக் காட்சிகளைக் கண்டு களிப்பதிலேயே பொழுதைப் போக்கி வந்தார். நாளடைவில், சீமைக் காட்சிகளில் முதலில் ஏற்பட்ட அதிசயம் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்தது. அப்படியே படிப்பில் முனைந்தார்.

'சாமுவேல் சும்மா இருந்தாலும், சைத்தான் (நம்முடைய சாட்சாத் சனீஸ்வர பகவான் தம்பி) சும்மா இருப்பானு?' அவன் சாமர்த்தியத்தைக் காட்டத்தானே செய்வான்? பார்வதிநாதன் படிப்பில் முனைந்த சமயம் பார்த்து, அவர் இருந்த வீட்டின் எஜமானி ஒரு காரியத்தைச் செய்துவைத்தாள். அதா

வது, பார்வதிநாதனுக்கு அலைஸ் என்ற ஓர் அழகிய மங்கையை அறிமுகம் செய்து வைத்தாள். அலைஸுக்கு வயது இருபத்தைந்துக்கு மேலாகி விட்டது. பார்வைக்கு பதினாறு இன்னும் நிரம்பாத பிராயத்தினள் என்றுதான் தோன்றும். ஒரு வேளை, என்றும் பதினாறோ என்னமோ என்று கூடச் சந்தேகப்படுவோம். அறிமுகமான அன்றைக்கு, அலைஸ் பார்வதி நாதனுடன் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தாள். அவளுடைய பேச்சில் பார்வதிநாதன் அப்படியே லயித்துவிட்டார். அலைஸின் குரல் கிளிக் குரல்தான். ஆனால், சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையின் பேச்சல்ல அவள் பேச்சு. புதுசு புதுசாக விஷயங்கள் அவள் மனசுக்கு வந்து கொண்டே இருக்கும். அவற்றை அவள் வெகு சுவாரஸ்யமாகக் கையாளுவாள். மொத்தத்தில், அவளுடன் பேசிக் கொண்டிருப்பது யாருக்கும் ஒரு படிப்பினை என்றே சொல்லலாம்.

இன்னும், அலைஸுக்கு இந்தியாவைப் பற்றி அனேக விஷயங்கள் தலைகீழ்ப் பாடம் தான். மகாத்மா காந்தி, ரவீந்திரநாத டாகுர், உதய சங்கர் முதலியவர்களைப் பற்றியும் பொதுவாக இந்தியாவின் கலைச் செல்வத்தைப் பற்றியும், பழம்பெருமையைப் பற்றியும், நாகரிகத்தைப் பற்றியும் வெகுவாகச் சிலாகித்துப் பேசினாள். நம்முடைய நாட்டு நாகரிகத்துக்குச்

சிறந்த சின்னம், ஸ்திரீகள் கட்டிக் கொள்ளும் சேலைதான் என்பாள். புடவையின் அழகையும் பெருமையையும் அவள் அளவுக்கு மிஞ்சிப் புகழுவதாகவே பார்வதிநாதனுக்குப் பட்டது. இருந்தாலும், அவளுக்கு எதிர் சொல்லுவானேன் என்று சும்மா இருந்துவிட்டார்.

சீமைக்காட்சிகளில் பார்வதி நாதனுக்கு முதலில் ஏற்பட்ட அதிசய உணர்ச்சி குறைந்து கொண்டே வந்தது என்று சொன்னேனல்லவா? இப்பொழுது அதே காட்சிகள், அதிக அழகுடனும் புதிய அழகுடனும் பிரகாசிக்கத் தொடங்கின. காரணம், பார்வதிநாதன் அவற்றை அலைஸ் இதயத்தோடு இதயம் வைத்துப் பார்த்ததுதான். அலைஸ் சுட்டிக் காட்டிக் கொண்டு வர்ணித்த எந்தக் காட்சியும் அவருக்கு இன்பமயமாக இருந்தது. அவளுடன் உட்கார்ந்து கொண்டு சாப்பிட்டதெல்லாம் தேவாமிர்தந்தான். அவள் தொட்டுக் கொடுத்த சிகிரெட்டை இழுத்தால் என்றும் இல்லாத ஒரு சுகம் ஏற்பட்டது.

இப்படி இவர்கள் இரண்டு பேரும் ஒன்ருக எல்லாக் காட்சிகளையும் அனுபவித்து வந்த காரணத்தினல், இவர்களுக்குள் ஓர் அரிய மன ஒற்றுமை ஏற்பட்டது. இந்த மன ஒற்றுமை இவர்களுக்குள் ஏற்பட்ட நட்பை நாளுக்கு நாள் வளர்த்துக் கொண்டே வந்தது. கடைசியில் அந்த நட்பு காதலாகவும் மாறிவிட்டது.

இந்த நிலையில், தங்களுக்குள் ஒரு ஒப்பந்தமும் செய்து கொண்டார்கள். அதாவது, கூடிய சீக்கிரம் இரண்டு பேரும் தங்களுக்குள் ஏற்பட்ட காதலைக் கலியாணத்தின் மூலம் ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தான்.

காதல் பரீட்சையில் தேறியவரால் ஐ. ஸி. எஸ். பரீட்சையில் எப்படித் தேறமுடியும்? பார்வதிநாதனுக்கு ஐ. ஸி. எஸ். 'பிளாங்கி' ஆகிவிட்டது. உடனே, பாரிஸ்டர் ஆகிவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்து விட்டார். பாரிஸ்டர் பரீட்சையில் எப்படியோ தேறியும் விட்டார். இந்தியாவுக்குப் புறப்பட்டுப் போக வேண்டிய நாளும் வந்தது. பார்வதிநாதன் மனம் படாத பாடெல்லாம் பட்டது. அலிஸை விட்டு எப்படிப் பிரிய? ஆனால், அலிஸே ஆறுதல் சொல்லிப் பார்வதிநாதனை வழியனுப்பினாள். பார்வதிநாதன் கப்பலில் ஏறினார். கரை மறைகிற வரையும், கப்பல் மறைகிற வரையும், காதலர்கள் கைகுட்டையை அசைத்துக் கொண்டே இருந்தார்கள். கடைசியில் பார்வதிநாதன் கைகுட்டையால் கண்ணையும் துடைத்துக் கொண்டார். பிரயாணம் முழுதும் அவருக்கு அவள் ஞாபகந்தான். ஒவ்வொரு அலையும் அலிஸை அவருக்கு ஞாபகப் படுத்திற்று என்றால் வேறு சொல்லவும் வேண்டுமோ?

இந்தியா வந்து சேர்ந்ததும், முதல் வேலையாக அலிஸுக்கு ஒரு விவரமான கடிதம் எழுதிப் போட்டார். கடிதத்தை அனுப்பிய பின் அவருடைய மனம் பாரிஸ்டர் தொழில் மூலமாகச் சம்பாதிக்கும் வழிகளைப் பற்றி எண்ண ஆரம்பித்தது.

சீமைக்குப் போய்விட்டு வந்த காரணத்தினால் ஏற்பட்ட மதிப்பு, பெரிய பங்களாவாசி என்பதனால் உண்டான கௌரவம், கெட்டிக்காரத்தனம், அதற்கேற்ற உழைப்பு. இவை காரணமாகப் பார்வதிநாதனுக்கு பாரிஸ்டர் தொழிலில் எதிர்பார்த்ததற்கு மேலாக வரும்படி கிடைத்தது. நாளுக்குநாள் கட்சிக்காரர்களும், வழக்குகளும், வரும்படியும் அதிகமாகிக்கொண்டே வந்தன.

இதிலெல்லாம் அவருக்கு எவ்வளவோ சந்தோஷம் இருந்தபோதிலும், ஊடே கூடி ஒரு கவலையும் அவருடைய மனசைச் சஞ்சலப்படுத்திக் கொண்டிருந்தது. கவலைக்குக் காரணம் அலிஸ்தானென்று சொல்லவும் வேண்டுமா? இவர் போட்ட கடிதத்துக்கு வெகுநாள் வரைக்கும் பதில் வரவில்லை. எதிர்பார்த்து எதிர்பார்த்து அனேக நாள் ஏமாந்தார். ஏமாற ஏமாறக் கவலையும் ஏக்கமும் அதிகரித்தன. ஒருநாள், அவள் தம்மை மறந்துவிட்டாள் என்றே எண்ணி எண்ணி மனம் புண்ணானார். அன்றைக்குத்தான் மேஜையின்

மேலிருந்த அலிஸின் படத்தைக் கையில் பிடித்துக் கொண்டு கண்ணீர் உகுத்தது. அன்றைக்கேதான், தபால்காரன் கொடுத்த கடிதம் அலிஸிடமிருந்து வந்திருந்ததால், அது வரைக்கும் துக்கசாகரத்தில் அமிழ்ந்திருந்தவர், அதினின்றும் கரையேறி ஆனந்தக் கடலில் திளைத்தது.

௩

அலிஸின் கடிதத்தைப் பார்வதிநாதன் திரும்பத் திரும்ப எத்தனையோ தரம் படித்தார். அந்தக் கடிதம் அவ்வளவு அழகாக எழுதப் பட்டிருந்தது. இலக்கியச் சுவையும் கவிப்பண்பும் மிகுந்திருந்தது, சிறந்த கதாசிரியர்கள் கதைகளில் கையாண்டுள்ள காதல் கடிதங்களைப் போல. ஏன், அவற்றுக்கும் மேலாக இருந்ததென்றே சொல்லலாம். இந்த கடிதத்தின் மூலம் அலிஸ், அவளுடைய உள்ளத்தையே தனக்குக் காட்டி விட்டாள் என்றே பார்வதிநாதன் எண்ணிப் பரவசமானார். உடனே அலிஸுக்கு ஒரு விரிவான கடிதம் எழுதிப் போட்டார். அதில் சகல விவரங்களையும் எழுதிவிட்டு, அலிஸ் இந்தியாவுக்குப் புறப்பட்டு வரும் தேதியைக் குறித்து உடனே பதில் போடும்படியாகவும், அப்பதிலையே சதா எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் எழுதி யிருந்தார்.

இதிலிருந்து கொஞ்ச நாளைக்குப் பார்வதி நாதன் எதிர்கால இல்லறவாழ்வின் இன்பத்தையே எண்ணி எண்ணிப் பரம சந்தோஷமாகக் காலத்தைக் கழித்து வந்தார். ஆனல், மறுபடியும் பழைய கவலைக்குள்ளானர். அலைஸிடமிருந்து பதில் வரவில்லை. நாலைந்து மாசம் காத்துப் பார்த்தார். பிறபாடு அவளுக்கு இன்னெரு கடிதம் எழுதிப் போட்டார். அதற்கும் வெகு நாளைக்குப் பதில் வரவில்லை. 'சரி, கடைசியாக ஒரு கடிதம் எழுதிப் பார்த்துவிடுவோம்' என்று மூன்ருவதாக ஒரு கடிதமும் எழுதிப் போட்டார். அதற்கும் பதில் வரவில்லை.

பாவம், பார்வதிநாதனுக்கு இன்னதுதான் செய்வதென்று ஒன்றும் தோன்றவில்லை. சதா கவலை மனசைத் தின்றுகொண்டே யிருந்தது. கவலை காரணமாக, அவருக்கு ஒரு வேலையும் ஓடவில்லை. சரியாகச் சாப்பாடுகூடச் செல்லுவது கிடையாது. ஏக்கங் கொண்டவருக்குத் தூக்கமுங் கிடையாது. 'உணவு செல்லவில்லை, உறக்கம் கொள்ளவில்லை' என்ற நிலைமைக்கு வந்த பிறபாடு, உடம்பு துரும்பாவதற்குக் கேட்பானேன் ? இப்போது வேறு வழி ஒன்றும் இல்லாததால், இடமாறுதல் கவலையைப் போக்கிவிடும் என்பதில் எப்படியோ நம்பிக்கை பிறந்துவிட்டது. ஆகையால், பட்டணத்தை

விட்டுத் தம்முடைய சொந்த ஊரான ஏரூருக்குப் புறப்பட்டார்.

௬

ஏரூரில், பார்வதிநாதனுக்கு நிலபுலங்களும் நாலைந்து வீடுகளும் உண்டு. வீடுகளில் ஒன்று மாடிவீடு. அதை முன்கூட்டியே செப்பனிட்டும், வெள்ளையடித்தும் வைக்கும்படியாக, நில புலங்களையும் வீடுகளையும் மேல்பார்த்துக் கொண்டிருந்த மானேஜருக்கு எழுதியிருந்தார். அவருடைய உத்தரவுப்படியே மானேஜரும் எல்லா விதமான சௌகரியங்களும் செய்து வைத்திருந்தார். மாடியிலுள்ள அறை ஒன்றில், மேஜை நாற்காலிகள், புஸ்தகங்கள் வைப்பதற்கு ஒரு அலமாரி, ஒரு மூலையில் ஒரு சின்ன மேஜையின்மேல் முகம் பார்க்கும் கண்ணாடி. இன்னொரு மூலையில் ஒரு கட்டில்; இதெல்லாம் எஜமான் உத்தரவு இல்லாமலே மானேஜர் தம் சொந்த புத்தியைக் கொண்டு செய்து வைத்த சௌகரியங்கள்.

பார்வதிநாதன் வெகுகாலமாக ஒரு கிராமத்தைப் பார்த்ததுகூடக் கிடையாது. இப்போது, கிராமத்துக்கு, அதுவும் தம்முடைய சொந்தக் கிராமத்துக்கு வந்ததும், சஞ்சலம் நிறைந்த அவருடைய மனசுக்குக்கூட சாந்தி ஏற்பட்டது. தினம் தினம் காலையில் எழுந்ததும், வயல்களைப் போய்ப் பார்த்துவிட்டு வருவார். காப்பி பலகாரம் ஆனதும், தம்முடைய

நிலபுலங்களைப் பற்றியெல்லாம் மானேஜரை விசாரிப்பார். மத்தியானச் சாப்பாடானதும், கொஞ்ச நேரம் பகல் தூக்கம். சாயங்காலம் ஒருமுறை வயல்களைப் போய்ப் பார்த்து வருவார். மற்ற நேரங்களில் புஸ்தகமும் கையுமாக இருப்பார்.

ஒருநாள் பார்வதிநாதன் மத்தியானச் சாப்பாடு ஆனதும், வழக்கம்போல் படுக்கையில் போய்ப் படுத்தார். வழக்கத்துக்கு மாருகத் தூக்கம் வரவில்லை. அலைஸ் ஞாபகம் வந்து விட்டது. உடனே படுக்கையை விட்டு எழுந்திருந்து மேஜை முன்னே நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஒரு ரஸமான புஸ்தகத்தைக் கையிலெடுத்தார். ஒரு பக்கம் படித்தார். அதற்குள் ஒன்பது எண்ணங்கள் வந்து மறைந்தன. படிப்பில் மனம் ஓடவில்லை. கொஞ்ச நேரம் மோட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். கொஞ்ச நேரம் புஸ்தக அலமாரியை அர்த்தமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தார். இந்தச் சமயத்தில் ஜன்னல் வழியாக அறைக்குள்ளே ஒரு குருவி பறந்துவந்தது. அதன்பின் இன்னொரு குருவியும் வந்தது. இரண்டில் ஒன்று ஆண்; மற்றொன்று பெண். ஆண் குருவி ஒருமூலையில் போய் உட்கார்ந்தது. அதன் பக்கத்தில் போய் நெருங்கிக் கொண்டு உட்கார்ந்து கொண்டது, பெண் குருவி. கொஞ்ச நேரங் கழித்து ஆண் குருவி அங்கி

ருந்து இன்னொரு மூலைக்குப் பறந்துபோயிற்று. அங்கே போய் உட்கார்ந்துகொண்டு 'கீச்சுக் கீச்'சென்று கூப்பிட்டது. உடனே, பெண் குருவி பறந்து வந்து, ஆண் குருவிக்குப் பக்கத்தில் உட்கார்ந்தது. பிறகு இரண்டு குருவிகளும் அலகுகளை உரசிக் கொண்டன. இதுதான் குருவிகள் ஒன்றுக்கொன்று காதலைக் காட்டிக்கொள்ளுகிற முறை போலும்! குருவிகளுக்குள்ள இந்த அன்னியோன்னியத்தைப் பார்த்ததும், பார்வதிநாதனுக்குப் பழைய ஞாபகங்கள் வந்து விட்டன. தாமும் அலைஸும் இப்படி அன்னியோன்னியமாய் இருக்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று ஏங்கினர்.

இன்னொரு நாள், பெண் குருவி மட்டும் தனியாக அறைக்குள் பறந்து வந்தது. ஆண் குருவி அதன் பின் வரவில்லை. உடனே பெண் குருவி வெளியே போய் விட்டது. கொஞ்சநேரத்தில் மறுபடியும் உள்ளே வந்தது. இப்படி நாலைந்து தடவை செய்தது. கடைசியில் அறைக்குள் வந்து ஒரு மூலையில் கொஞ்ச நேரம் அசையாமல் உட்கார்ந்து கொண்டிருந்தது. அது இருந்த இருப்பு சோகமே ஒரு குருவி உருவம் எடுத்து உட்கார்ந்திருந்தது போல் இருந்தது. பிற்பாடு அந்த மூலைக்கும் இந்த மூலைக்குமாக அது கொஞ்ச நேரம் பறந்து கொண்டிருந்தது. இப்படிப் பறந்துகொண்டிருக்கையில், தற்செயலாக, மூலையில் போடப்

பட்டிருந்த அந்தச் சின்ன மேஜையின் மேல் வந்து உட்கார்ந்தது. உட்காரவும், முகம் பார்க்கும் கண்ணாடிக்குள் பார்த்தது. கண்ணாடியை நாலைந்து தடவை கொத்திற்று. கொஞ்ச நேரம் அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் மாறி மாறி உட்கார்ந்து கொண்டு, தலையை சாய்த்து சாய்த்துக் கண்ணாடிக்குள்ளே தெரிந்த குருவியைப் பார்த்தது. பிற்பாடு வெகு நேரம் கண்ணாடியைக் கொத்திக் கொண்டே இருந்தது. ஆகாரத்தைப் பற்றிய ஞாபகம் வந்து விட்டதோ அல்லது கொத்திக் கொத்திக் களைத்துப் போய் விட்டதோ, என்னமோ தெரியவில்லை. பிறகு அது பறந்து வெளியே போய்விட்டது.

'ஆண் குருவியைப் பிரிந்திருக்கும் காரணத்தால் இந்தப் பெண் குருவி என்ன பாடு படுகிறது! அறிவில்லாத இந்தக் குருவி பிரிவாற்றுமையினால் இந்தப் பாடு பட்டால், அலைஸ் என்ன பாடுபடமாட்டாள்? இதுகாறும் பிரிவாற்றுமையினால் நான் எவ்வளவு கவலைக்குள்ளாகிறேன் என்பதை மட்டுந்தானே எண்ணிக் கொண்டிருந்தேன்? அவள் எவ்வளவு கவலைக்குள்ளாவாள் என்பதை நான் நினைத்தும் பார்க்கவில்லையே! அவள் கடிதம் போடாததற்கு ஏதோ முக்கிய காரணம் இருக்க வேண்டும்' என எண்ணினார். உடனே அலைஸைப் பற்றிய விவரம் தெரிவதற்காக, சீமையில்

இருந்த ஒரு நண்பனுக்குக் கடிதம் எழுதிப் போட்டு விட்டார்.

ஒரு நாள் பார்வதிநாதன் காரியார்த்த மாகப் பக்கத்து கிராமம் ஒன்றுக்குப் போக வேண்டி யிருந்தது. அப்படியே அறைக் கத வைச் சாத்திப் பூட்டிவிட்டுப் போய் விட்டார். போனவர் இரண்டு மூன்று நாள் கழித்துத் தான் திரும்பி வந்தார். வந்ததும் அறைக் கதவைத் திறந்தார். 'குப்' என்று ஒரு வீச் சம் எடுத்தது. உள்ளே போய்ப் பார்த்தால், அந்தப் பெண் குருவி சின்ன மேஜையின் மேல் செத்துக் கிடந்தது. கண்ணாடி பூராவும் புள்ளி புள்ளியாய் இருந்தது. உடனே, தன் அருமைக் காதலியின் கதியும் இப்படித் தானே ஆயிருக்கும் என்று பார்வதிநாதன் எண்ணி விட்டார். இருந்தாலும் நண்பனிட மிருந்து வரும் கடிதத்தைப் பார்த்துவிட்டுத் தான் ஒரு முடிவுக்கு வரவேண்டும்; அவசரப் படக் கூடாது; ஒருவேளை அலைஸ் உயிரோடு இருந்தாலும் இருப்பாள்; நண்பன் கடிதத் தில் அலைஸ் உயிருடன் தான் இருக்கிறாள் என்று எழுதியிருந்தால், உடனே சீமைக்குப் புறப்பட்டுப் போய்விட வேண்டியதுதான் என்று தீர்மானித்தார்.

இவ்வளவு காலமாக அலைஸின் படத் தைப் பெட்டியில் பூட்டி வைத்திருந்தார். அது அடிக்கடி கண்ணில் பட்டால் அலைஸ் ஞாபகம்

வந்துவிடும் என்ற பயந்தான் அதைப் பூட்டி வைத்திருந்ததற்குக் காரணம். ஆனல் ஒரு நாள் அந்தப் படத்தைப் பார்த்தாவது கொஞ்சம் ஆறுதல் அடையலாமே என்று எண்ணி, அதைப் பெட்டியிலிருந்து எடுத்தார். எடுத்து அளவிலா வாஞ்சையுடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, கிராமத்துத் தபால் காரன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். அப்படியே அலிஸின் படத்தை மேஜைமேல் வைத்துவிட்டுக் கடிதத்தைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தார். அது அந்த நண்பனுடைய கடிதம். அதில் பின் வருமாறு எழுதி யிருந்தது :

'என் அருமை நண்பனே !

அலிஸ் உயிருடன்தான் இருக்கிருள். அதுமட்டுமா? வெகு உல்லாசமாய் இருக்கிருள் - இன்னொரு இந்திய வாலிபனேடு. அவள் உன்னை அடியோடு மறந்துவிட்டாள் என்று சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றுல், ஒரு காலத்திலும் உன்னை அவள் உண்மையாக நேசித்தது கிடையாது. அவள் ஒரு பாசாங்குக்காரக் கள்ளி. அவளுடைய பாசாங்கை உண்மைப் பாசம் என்று எண்ணி நீ ஏமாந்து போய் விட்டாய். அவளுடைய தொழிலே இதுதான். இங்கே வரும் ஒவ்...'

இதற்குமேல் படிக்க அவருடைய மனம் இடங்கொடுக்க வில்லை. மனக்கோட்டைகள்

பூகம்பம் வந்ததுபோலத் தகர்ந்து விழுந்து தவிடு பொடி ஆயின. மனங் கலங்கிற்று. மூளை குழம்பிற்று. கடிதத்தைத் தூள் தூளாகக் கிழித்துப் போட்டார். மேஜையின் மேலிருந்த அலிஸின் படத்தை வீசி எறிந்தார். அது சுக்கு நூருக நொறுங்கிற்று. 'மூதேவி, மூதேவி!' என்று கோபாவேசத்துடன் கத்தினர். உடனே வெளியே புறப்பட்டு விட்டார். வழக்கம் போல் ராத்திரி வீடு திரும்பினரா? இல்லை. அவர் பாட்டுக்கு நடந்து போய்க் கொண்டே இருந்தார். மரம், மாடு, மனிதன் என்ற வித்தியாசம் இல்லாமல், எதைக்கண்டாலும், யாரைக் கண்டாலும், 'மூதேவி, மூதேவி' என்று கூப்பாடு போட்டுக்கொண்டு நடந்தவண்ணமாகவே இருந்தார்.

மூன்ருவது நாள் சாயங்காலம், சுமார் ஆறரை மணி இருக்கும். பார்வதிநாதன் காரூர் என்ற கிராமத்துக்கு வந்திருந்தார். அந்த ஊரில் ஒரு அழகான சிவன் கோவில் இருந்தது. கோவிலுக்குள் பார்வதிநாதனை அவருடைய கால்கள் இழுத்துச் சென்றன; அவ்வளவுதான். அவராக யோசனை பண்ணி ஒரு இடத்துக்குப் போவதென்பதுதான் கிடையாதே! கோவிலில் அம்மன் சன்னதிக்கு முன்பாக ஒரு பெண் மண்டியிட்டுத் தெண்டனிட்ட வண்ணம் இருந்தாள். அவள் முகத்தில் சோகமும், பக்திபரவசமும் கலந்த ஒரு பாவம். யார்

மனசையும் கனியவைக்கும் சக்தி வாய்ந்ததாக இருந்தது அந்தக் காட்சி.

அம்மனைத் தொழுது வணங்கியபின், அப் பெண் பிராகாரம் சுற்றினாள். பார்வதிநாதனு டைய கால்களை அப்பெண் இழுத்தாளோ என் னமோ? அப்பெண்ணுக்கு அந்த ஆகர்ஷண சக்தி உண்டோ என்னமோ? சொல்ல முடி யாது. பார்வதிநாதன் அவளைப் பின் தொடர்ந் தார்.

அந்தப் பெண், கோவிலுக்கு வெளியே வந்ததும், விளக்கு வைக்கும் நேரமாகி விட்டத னால், வீதியில் வேகமாக நடக்கலானாள். கொஞ்சதூரம் போனதும் தற்செயலாய்ப் பின் னால் திரும்பிப் பார்த்தாள். யாரோ தன்னைப் பின்தொடர்ந்து வருவதைக் கவனித்தாள். பெண்தானே, பயந்து விட்டாள். இன்னும் வேகமாக நடந்தாள். பார்வதிநாதனும் அதி வேகமாக நடந்து அவளை நெருங்கிவிட்டார். அவள் பார்த்தாள் இருட்டும் நேரம். தொடர்ந்து வருபவன் கள்ளனோ காமக்குரோதனோ, யார் கண்டது? உடனே ஓடவே ஆரம்பித்து விட் டாள். மூச்சு வாங்கக் கொஞ்ச தூரம் ஓடி ஒரு வீட்டுக்குள் நுழைந்தாள். நுழைந்ததும் கத வைச் சாத்திவிடப் பார்த்தாள். அதற்குள், பார்வதிநாதன் ஓடிவந்து, 'அலைஸ், அலைஸ்!' என்று சொல்லிக் கொண்டே அவள் சேலை யைப் பற்றினார். அவள் பயந்து நடு நடுங்கிப்

11

போய், ஒரு உதறு உதறினாள். உதறவும் பார்வதிநாதன் பிடியினின்று தன்னை விடுவித்துக் கொண்டாள்; ஆனால், பார்வதிநாதன் படீரென்று கீழே விழுந்து விட்டார்.

அந்தப் பெண் போட்ட சத்தத்தைக் கேட்டு, பக்கத்து வீட்டுக்காரர்களில் சிலர் அங்கே ஓடி வந்தார்கள். வாசற்படியில் ஒரு ஆள் ஸ்மரணையற்றுக் கிடப்பதைப் பார்த்தார்கள். உடனே, நாலைந்து பேராகக்கூடி பார்வதிநாதனைத் தூக்கிக் கொண்டுபோய் வீட்டுக்குள் பட்டகசாலையில் படுக்கப் போட்டார்கள். இதற்குள், அப்பெண் கைவிளக்கைப் பொருத்திக் கொண்டு வந்தாள். அங்கே இருந்தவர்களில் ஒருவர் ஆள் இன்னாரென்று தெரிந்து கொள்ளுவதற்காக முகத்துக்கு நேரே கைவிளக்கைப் பிடித்தார். பிடிக்கவும், அந்தப் பெண் பார்வதிநாதன் மேல் விழுந்து அழுது புரண்டாள். அங்கே இருந்தவர்கள் வெகு கஷ்டப்பட்டு அவளை விலக்கி பார்வதிநாதன் முகத்தில் தண்ணீரைத் தெளித்தார்கள். ஸ்மரணை வந்தது. பார்வதிநாதன் கண்ணை விழித்துப் பார்த்தார். பக்கத்தில் தான் தொடர்ந்து வந்த பெண் உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் 'அலைஸ், அலைஸ்' என்று ஈனக்குரலில் கூப்பிட்டார். அப்பெண்ணுக்கு ஒன்றும் விளங்கவில்லை. மயக்கம் இன்னும் தெளியவில்லை போலும் என்று எண்ணிக் கொண்டாள்.

அப்பெண்ணின் பெற்ளேர்கள் ஊருக்குள் யார் வீட்டுக்கோ போயிருந்தார்கள். அவர்கள் இந்தச் சமயத்தில் வந்து சேர்ந்தார்கள். அப் பெண்ணின் பெயர் பார்வதி. பார்வதியின் மடியில் மாப்பிள்ளை பார்வதிநாதன் படுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும், அவர்களுக் குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது. "அம்மா பார்வதி! உன்னுடையபாக்கியமே பாக்கியம். கலியாணம் ஆகிப் பத்து வருஷம் ஆகப்போகி றது. இப்பொழுதாவது மாப்பிள்ளை திரும்பி வந்தார்களே!" என்று சொன்னுள் தாயார்.

அப்போது பார்வதிநாதன், "அலிஸ், இது யார்?" என்று கேட்டார். இதென்ன விபரீதமான கேள்வியென்று எண்ணியவ ளாய்ப் பார்வதி சும்மா இருந்தாள். மறுபடியும் பார்வதிநாதன், "இது யார் என்று சொல்ல மாட்டாயோ, அலிஸ்? நீ சொல்லாட்டாப் போ. நான் சொல்லிப் போடுவேன். சொல் லட்டுமா?" என்று உளறினர். பார்வதி "இது எங்கம்மா" என்று சொல்லி வைத் தாள். "இதா உங்கம்மா? உங்கம்மாவா இது? ஹெ, ஹெ, பேஷ் ரொம்ப நல்லாச் சொன்னே. அது சரி. நீ யாரு சொல்லேன்? நானுரு சொல் லட்டுமா?" என்று சொல்லி பார்வதிநாதன் கட கட என்று சிரித்தார். எல்லோருக்கும் பார்வதிநாதனுடைய நிலைமை நன்ருக விளங்கி விட்டது.

"அம்மா பார்வதி! இவ்வளவுதானா உனக்குக் கொடுத்து வைத்தது? தினம் தினம் கோவிலுக்குப் போய் அந்தப் பார்வதி அம்மனுக்கு நீ செய்த பூஜைக்கு இதுதானா பலன்? உன் தலையில் அப்படி எழுதி இருக்கிறது. எல்லாம் அதன்படித்தானே நடக்கும்" என்று சொல்லி விட்டுத் தாயார் அழ ஆரம்பித்துவிட்டாள்.

"அம்மா! அழுகையை நிறுத்து. இப்போது அழவேண்டிய காரியம் ஒன்றும் நடந்து விடவில்லை. சும்மா பிதற்றாதே. இப்போது என் மடியில் அவர்கள் படுத்திருக்கிறார்கள். படுத்துத் தூங்கவும் ஆரம்பித்து விட்டார்கள். இந்தப் பாக்கியம் கிடைக்க இந்தமடி என்ன புண்ணியம் செய்ததோ? என் கண்களுக்கு இந்தப் பாக்கியம் கிட்டிற்றே, அந்தப் பார்வதி அம்மனின் அருளால் என்று சந்தோஷப் பட வேண்டி யிருக்க, என்னம்மா நீ அழ ஆரம்பித்து விட்டாயே! அவர்கள் நிலைமை எப்படி இருந்தால் தானென்ன? அவர்களை இந்தக் கண்ணால் பார்த்தாச்சு. இந்தக் கையால் தொட்டாச்சு. இது போதாதா எனக்கு? வேறென்ன வேண்டும்?" என்றாள் பார்வதி

* * *

வருஷங்கள் கழிகின்றன. ஒரு நாள் இரவு நிலவு பால் போன்ற ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. ஜிலு ஜிலு என்று தென்றல் காற்றும் வீசிக்கொண்டிருக்கிறது. நிலவுக்கும் தென்ற

னுக்கும் போட்டி, மக்களின் இதயத்தை யார் அதிகம் இன்பமாக்க முடியும் என்று. பார்வதியின் வீட்டுப் பின்வாசல் முற்றத்திலே ஒரு கட்டிலில் படுக்கை விரித்து அதன்மேல் பார்வதி உட்கார்ந்திருக்கிறாள், காலைத் தொங்கப்போட்டுக் கொண்டு. பார்வதிநாதன் அவள் மடியில் தலைவைத்துப் படுத்துக் கொண்டிருக்கிறார். திடீரென்று அவர் எழுந்து உட்கார்ந்து கொண்டார். "அலைஸ்! முந்தி ஒரு நாள் கொடுத்தே பாரு, அம்மாதிரி இப்பவும் ஒண்ணு கொடுக்கமாட்டாயா? ஒண்ணே ஒண்ணுதான், அலைஸ்! அதுக்குமேல் வேண்டாம்" என்று பார்வதிநாதனின் வாய் கெஞ்சிற்று. உடனே பார்வதி புன்னகை பூத்த தன்னுடைய அழகிய முத்தத்தைச் சாய்த்தாள்.......மறுபடியும் பார்வதிநாதன் அந்தப் 'புண்ணியம் செய்த' மடியில் படுத்துக் கொண்டார். அப்போது அவர் முகத்தில் புன்னகை தவழ்ந்ததைப் பார்வதி கண்டாள். பரமானந்தம் கொண்டாள்.

**மாடு மனை போனுலென்ன?**
**மக்கள் சுற்றம் போனு லென்ன?**
**கோடிச்செம்பொன் போனுலென்ன?-கிளியே**
**குறுநகை போதுமடி.**



24

# குழந்தையின் மனம்

சுந்தரத்துக்குப் புஸ்தகம் என்றால் உயிர். சிறு பையனாக இருந்தபோதே அவனுக்குப் புஸ்தகங்களின்மேல் பிரியம் ஏற்பட்டுவிட்டது. திருவிழாத் துட்டு யாராவது கொடுத்தால், புஸ்தகக் கடைக்கு ஒரே ஓட்டமாக ஓடுவான். புஸ்தகம் வாங்கினது போக மீதம் இருந்தால், ஏதாவது தின்பண்டம் வாங்கிச் சாப்பிடுவான். இல்லை, தின்பண்டம் வேண்டாம்.

புஸ்தகத்தை வாங்கிக் கொண்டு வந்து வீட்டில் ஒதுக்கமான ஒரு இடத்தில் உட்கார்ந்து கொண்டு புஸ்தகம் முழுவதும் படித்து விட்டுத்தான் மறு சோலி.

நாளுக்கு நாள் இந்தப் புஸ்தக மோகம் வளர்ந்துகொண்டே வந்தது. பள்ளிக்கூடமும் உபாத்தியாயரும் சேர்ந்துமே, சுந்தரத்தின் புஸ்தகப் பைத்தியத்தை விரட்ட முடியவில்லை. கல்யாணத்தின் பிறகும் அவனுக்குப் புஸ்தக மோகம் குறையவில்லை. ஒரு குழந்தை பிறந்தது. சரி, பையன் பிறந்து விட்டான், அப்பா

வுக்குச் சரியான பாடம் கற்பிப்பான் என்று எல்லோரும் எண்ணினர்கள். குழந்தையின் பாச்சாவும் சுந்தரத்தினிடம் பலிக்கவில்லை.

அவன் பாட்டுக்குப் புஸ்தகம் படிப்பதில் கருத்தாகத்தான் இருந்தான். உலகம் புரண்டாலும் அவன் புஸ்தகம் படிப்பது நிற்காது. தினந் தினம் ஒரு புதுப் புஸ்தகமாவது படித்து முடித்தால்தான் அவன் மனம் நிம்மதி அடையும்; ராத்திரி தூக்கமும் பிடிக்கும்.

ஒரு நாள் அவன் ஏதோ புஸ்தகம் படித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அவனை யாரோ கீழே யிருந்து கூப்பிட்டார்கள். புஸ்தகத்தைப் படுக்கையின் மேல் குப்புற வைத்து விட்டுப் போனன். வந்தவரிடம் கீழிருந்தே கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்க நேர்ந்தது. இந்தச் சமயம் பார்த்து, சுந்தரத்தின் இரண்டு வயசுக் குழந்தை, ஒருவருக்கும் தெரியாமல் மாடிப்படி ஏறி, புஸ்தக அறைக்குள் வந்துவிட்டான். வந்ததும், முதல்முதல் அவன் கண்ணைக் கவர்ந்தது, அவனுடைய அப்பா படித்துக் கொண்டிருந்த புஸ்தகந்தான். அதைக் கையில் எடுத்தான். தரையில் உட்கார்ந்தான். ஒவ்வொரு பக்கமாகப் புரட்ட ஆரம்பித்து விட்டான். இந்தக் கட்டத்தில் சுந்தரம் வந்து விட்டான். புஸ்தகத்தைக் குழந்தை கையிலிருந்து பிடுங்கினன். குழந்தை

முதுகில் நாலு அறை வைத்தான். இதற்குள் குழந்தையைத் தேடிக் கொண்டு தாயார் அங்கே வந்தாள்.



"விடுங்க! குழந்தையைப் போட்டு இப்படி அடிக்கலாமா?"

"இத்தனை நேரம் அருமையான புஸ்தகத்தைப் பாழாக்கத் தெரிந்தானே?"

"பாழாக்கி விட்டால்தான் என்ன? இன்னொரு புஸ்தகம் வாங்கி விட்டால் போகிறது. குழந்தை தானே! அவனுக்கு என்ன தெரியும்?"

"சரி சரி, உன்னுடைய அதிகப் பிரசங்கத்தை நிறுத்து. நீயோ, உன் குழந்தையோ, அவனைத் தூக்கிக் கொண்டு வெளியே போ. என் முன் நில்லாதே. வேறு புஸ்தகம் வாங்கிக் கொள்ளலாமாம்! யோசனை சொல்லுகிறாள். இப்பொழுது படிப்பதற்கு என்ன செய்வானோ........"

அழுத குழந்தையும், கலங்கிய கண்ணும், தொங்கிய முகமுமாகத் தாய் போய்விட்டாள்.

மனைவி சொல் சுந்தரத்தின் மண்டையில் ஏறாததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவன் அன்று படித்துக் கொண்டிருந்த அந்தப் புஸ்தகத்தின் பெயரே "குழந்தையின் மனம்" என்பதுதான்.

# கவிதை

க

கவிதை என்றால் என்ன? இந்தக் கேள்வியை இதுவரைக்கும் எத்தனையோ பேர் கேட்டாயிற்று. எத்தனையோ பேர் பதில் சொல்லியும் ஆயிற்று. இன்னும் எத்தனையோ பேர் கேட்கப் போகிறார்கள். இந்த மாதிரிக் கேள்விகளுக்கு முடிவேது?

அனேகருக்கு (முக்கியமாக மேல் நாடுகளில்) ஒரு சந்தேகம் ஏற்பட்டு விடுகிறது— என்னத்துக்கு இந்தக் கவிதையைக் கட்டி அழ வேண்டும் என்று. சீரும் தளையும் மோனையும் எதுகையும் அனாவசியமான வெறும் கட்டுப்பாடுகள். இக் கட்டுப்பாடுகளெல்லாம் உணர்ச்சி வெளியீட்டுக்கு முட்டுக்கட்டைகளாக இருக்கின்றன. எழுதுவோருக்கும் படிப்போருக்கும் இடைஞ்சலாக இருக்கின்றன இந்தத் தொந்தரவெல்லாம் கிடையாது வசனத்தில். இஷ்டப்படி எழுதலாம். கஷ்டமில்லாமல் வாசிக்கலாம். இன்னும், வசனத்தில் எதையும் எழுதிவிடலாம். அப்படியிருக்க,

எதற்காகக் கவிதை இயற்ற வேண்டும்? எதற்காகக் கவிதையைப் படிக்கவேண்டும்?

இப்படியெல்லாம் அனேகர் அபிப்பிராயப் படுகிறபடியால், கொார்டு என்ற மேல் நாட்டு விமர்சகர் கவிதை ஆராய்ச்சி என்ற அவருடைய நூலைப் பின்வருமாறு ஆரம்பித்திருக்கிறார். அந்தப் புஸ்தகத்தில் முதல் வாக்கியமே இதுதான்:

"யாராவது வந்து எதற்காகக் கவிதையைப் படிக்கவேண்டும் என்று கேட்டால், பதில் சொல்லுவது சுலபம்: வசனம் அவ்வளவு இலேத்து (ரஸமற்றதாக) இருக்கிறது!"

இதிலிருந்து, வசன கர்த்தாக்களெல்லாம் அப்படியே விசனக் கடலில் ஆழ்ந்துவிட வேண்டாம். 'வசனக் கவி' ஆசிரியர்களுக்கும் ததாஸ்து.

வசனத்தின் மேல் ஏற்பட்ட வெறுப்பிலிருந்து வெளிவந்த வார்த்தைகளல்ல, கொார்டின் வார்த்தைகள். இப்படிப்பட்ட வார்த்தைகள் வெளிவந்ததற்குக் காரணம், அவருக்குக் கவிதையின்மேலுள்ள மோகமும், 'கவிதை வேண்டாம், வசனமே போதும்' என்று சொல்லுகிற மனோ தர்மமற்ற மக்களின் மேலுள்ள கோபமுந்தான்.

சாதாரணமாக நாம் அங்கும் இங்கும் நடப்பதற்கு எவ்வளவு மதிப்புண்டோ அவ்

வளவு மதிப்புத்தான் வசன நடைக்கு உண்டு. நடனத்துக்கு எவ்வளவோ அவ்வளவு மதிப்பு கவிதைக்கு உண்டு. வசனம் மானுஷ்யம்; கவிதை தெய்விகம். வசன உலகத்தில், நடந்தால் போதும்; கவிதை உலகத்திலோ, பறக்க வேண்டும்.

கவிதையின் கட்டுப்பாடுகள் என்று சொல்லுவதெல்லாம் உண்மையில் கட்டுப்பாடுகளே அல்ல. உணர்ச்சி பாவத்தை வெளியிடுவதற்கு வேண்டிய உதவுபடிகளே. டென்னிஸ் கோர்ட்டில் வரம்புக் கோடுகள் போட்டிருப்பது கட்டுப்பாடுகளா? வயற் காட்டில் போய் டென்னிஸ் விளையாடினால், விளையாட்டு சோபிக்குமா? நம்முடைய பெண்மணிகள் நகை அணிந்து கொள்ளுவதெல்லாம் வெறும் ஆடம்பரத்துக்குத்தானா? அல்ல. இயற்கை அழகை எடுத்துக் காட்டத்தான். ஒட்டியாணம் இடையின் ஒடுக்கத்தைக் காட்டும். கல்லட்டியல் கழுத்தின் அழகை எடுத்துக் காட்டும். (அழகாக இருந்தால்தான். இல்லாவிட்டால், அவலட்சணத்தைத்தான் எடுத்துக் காட்டும்.) காதில் ஒரு அழகான லோலக் ஆடிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அதிலிருந்து, அந்த லோலக்குக்கு உரியவள், முகத்தைக் கொஞ்சம் திருப்பி இருக்கிறாள் என்று அறிந்து கொள்ளுகிறோம். லோலக்கு, முகத்தின் அசைவை, அதாவது சலனத்தை எடுத்துக் காட்டுகிறது. 'ஜில்க் ஜில்க்' என்று பாத

சரத்தின் நாதம் கேட்கிறது. ஒரு பெண்மணி ஜோராக நடந்து வருகிருள் என்று அறி கிறோம். அது மட்டுமா? பாதசரத்தின் சப் தத்திலிருந்து, அப்பெண்மணி மெள்ள அன்ன நடை நடந்து வருகிருளா, வேகமாக நடந்து வருகிருளா, அல்லது ஓடியேதான் வருகிருளா என்பதையெல்லாம் அறிந்து கொள்ளலாம்.

பெண்கள் அணியும் நகைகளெல்லாம் வெறும் ஆடம்பரத்துக்கா? இல்லவே இல்லை. அப்படியே கவிதா அணிகளும் வெறும் அலங் காரத்துக்காக அல்ல. அவசியத்தை முன்னிட் டுத்தான்.

உ

## தமிழ்க் கவிதை

தமிழிலே கவிதைகள் உண்டு; செய்யுட் களோ ஏராளமாக உண்டு. பாடல்கள் உண்டு; வெறும் பாட்டுக்கள் எத்தனையோ உண்டு. வெறும் பாட்டுக்கு ஓர் உதாரணம்:

வேலனே அனு கூலனே உமை
பாலனே வள்ளி லோலனே வடி - வேலனே!

இவை எதுகைக்கும் மோனைக்கும் என்றே எழுந்த வார்த்தைகள். வார்த்தைகளுக்குப் பொருளும் பாவமும் கிடையாது. ஏதோ கொஞ் சம் சங்கீத ஞானம் இருந்தால், யாரும் இம்மாதி ரிப் பாட்டுக்கள் எழுதிவிடலாம். ஆனல், இதை

யும் பாடுகிற விதமாகப் பாடினால் நன்றாகத் தான் இருக்கும். 'வள்ளிலோலனே வடி-வேலனே' என்று பல்லவியைப் பிடிக்கும் போது, சங்கீத சாகித்திய சுகம் கிட்டும். ஆனால், இது பாடல் ஆகிவிடாது.

பாடல் இயற்ற மனோபக்குவம் பெறவேண்டும். பாடலின் பண்ணும் பொருளும் பாவமும் கலந்து வரவேண்டும். பாடப்பாட, பண்ணும், பொருளும், பாவமும் ஒருங்கே சிறக்க வேண்டும். பாடப்பாட உள்ளத்தில் தேனூறும். கடைசியில், இது கவிதைதானோ வென்று தோன்றும். கவிதை என்று சொன்னாலும் குற்றமில்லை என்ற முடிவுக்கு வரவேண்டும். அப்பேர்ப்பட்ட பாடலுக்கு, திருக்குற்றாலக் குறவஞ்சியிலிருந்து ஓர் உதாரணம்:

> **வாகனைக்கண் டுருகுதையோ - ஒரு**
> **மயக்கமதாய் வருகுதையோ!**
> **மோகமென்பதிதுதானோ - இதை**
> **முன்னமேநான் அறியேன், ஓ!**

செய்யுளைப்பற்றி நமக்குக் கவலை வேண்டாம். அது இலக்கணத்தைச் சேர்ந்தது. செய்யுளுக்கும் கவிதைக்கும் உள்ள வித்தியாசம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லிவிட முடியாது. செய்யுள் ஸ்வர சாகித்தியம்; கவிதை சங்கீத சாகித்யம். செய்யுள் செய்யப்படுவது; கவிதை சிருஷ்டிக்கப் பட்டது. ஒன்று காகிதப் பூ; மற்றொன்று கொடியில் மலர்ந்த பூ. காகிதப்

பூ, பார்வைக்குப் பூ மாதிரியேதான் இருக்கும். ஆனால், இரண்டுக்கும் எவ்வளவு வித்தியாசம்! தாமரைப்பூ மலர்வதற்குத் தடாகமா காரணம்? சூரிய கிரணமா காரணம்? இல்லை. எத்தனை எத்தனையோ காரணங்கள். காரணங்களையெல்லாம் ஆராய்ச்சி அறிவினால் கண்டுபிடித்து விடமுடியாது. கவிஞர் உள்ளத்திலிருந்து மலர்ந்த கவிதைக்கு அக்கவிஞரா காரணம்? இல்லை. அவருடைய கருத்தா? உணர்ச்சியா? அனுபவமா? இல்லை. வேறு ஏதோ ஒன்று. அது எதுவென்று கவிஞருக்கே தெரியாது. அவரையறியாமல் ஒரு சக்தி அவர் மூலமாக உலகத்துக்கு உதவும். கவிதையைக் கவிஞர் பாடவில்லை. கவிஞர் உள்ளத்தில் புகுந்து, நாவில் அமர்ந்து, நாமகளே பாடினளோ என்று தோன்றும். அதுவே உண்மைக் கவிதை. மனித யத்தனத்தினால் மட்டும் ஆகாது; தெய்வம் துணை செய்ய வேண்டும்.

இந்த மாதிரிக் கவிதைகள் தமிழில் உண்டா? உண்டு. ஆனால், அவைகளைப் படித்துணர நமது வாழ்நாள் தான் காணாது. உண்மைக் கவிதைக்குச் சிறந்த உதாரணம், முத்தொள்ளாயிரம் வெண்பாக்கள்தான். முத்தொள்ளாயிரம் என்ற பெயரையே அனேகர் கேட்டிருக்க மாட்டார்கள். முத்தொள்ளாயிரம் என்றால் மூன்று தொள்ளாயிரம், அதாவது, இரண்டாயிரத்தெழுநூறு பாட்

டுக்கள் அடங்கிய ஒரு பெரிய பாடல் தொகுதி. அத்தனை பாடல்களும், சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப் புகழ்ந்து பாடியவை. இந்த இரண்டாயிரத்து எழுநூறு பாட்டுகளில், சுமார் நூறுபாட்டுகள்தான் நமக்குக் கிடைத்திருக்கின்றன. மற்றவைகளைக் கலிகால தேவன்—பாவிப்பயல்-எப்படியோ கொண்டு போய்விட்டான்!

*　　*　　*　　*

தமிழிலுள்ள பாட்டுகளனைத்தும் பக்திச் சுவையுடையனவாகவே இருப்பது சிலருக்குப் பிடிப்பதில்லை. தமிழிலே நாயைப் பற்றியும், பூனை, வண்ணாத்திப் பூச்சி, கலங்கரை விளக்கம் ரயில், டிராம் முதலியவைகளைப் பற்றியும் கவிதைகள் இல்லையே என்று அவர்களுக்குக் கவலை. என்னமோ தெரியவில்லை. நம்மவர்கள் இந்த மாதிரி விஷயங்களைப்பற்றியெல்லாம் அதிகமாகப் பாடுவதில்லைதான். பாடுவதெல்லாம் அவன் புகழையேதான். அவன் புகழைப் பாடுவதில்தான் அவர்களுக்கு இன்பம். உலக விஷயங்களில் அவர்கள் மனம் ஈடுபடுவதில்லை. ஆனல், அங்கங்கே உலக விஷயங்களும் வரத்தான் செய்யும். ஏனென்ருல், உலகானுபவத்திலிருந்துதானே பாடுகிறார்கள்?

மயில் எவ்வளவோ அழகாக இருக்கிறது. அது தோகை விரித்தாடும் காட்சி இணையில்லாக் காட்சி. அதைப்பற்றி அருணகிரிநாதர்

என்ன சொல்லுகிறார் பாருங்கள். சாதாரண மயிலைப் பற்றியல்ல; ஆறு முகங்களில் ஒரு முகம் ஏறி விளையாடும் மயிலைப் பற்றித்தான். "கராசலங்கள், எட்டும் குலகிரி எட்டும் விட்டோட எட்டாதவெளி, மட்டும் புதைய விரிக்கும் கலாப மயூரம்." கலாபத்தை எப்படி விரித்து விட்டார் பார்த்தீர்களா! நாம் பார்க்கும் கலாபத்துக்கும் அருணகிரியார் பார்க்கும் கலாபத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்! இப்படிப்பட்ட கண்ணை வைத்துக் கொண்டு, அது காணுதென்று வேறு சொல்லிக் கொள்ளுகிறார்.

மாலோன் மருகனை, மன்றுடி மைந்தனை,
வானவர்க்கு
மேலான தேவனை, மெய்ஞ்ஞான தெய்வத்தை,
மேதினியில்
சேலார் வயற்பொழிற் செங்கோ டனைச்சென்று,
கண்டு, தொழ
நாலா யிரங்கண் படைத்தில னே, அந்த
நான்முகனே


இப்படி அலங்காரமாக எத்தனையோ பாடல்களைக் 'கந்தரலங்காரம்' என்ற அவர் நூலில் காணலாம். ஆனால், அருணகிரி நாதருடைய புகழுக்குக் காரணம் கந்தரலங்காரமல்ல; அவர் சந்தத்தில் அமைத்துப் பாடியுள்ள திருப்புகழ்தான்.

வேதம்வேண் டாம்ஒரு வித்தைவேண் டாம்கீத
நாதம்வேண் டாம்ஞான நூல்வேண்டாம்-சோதி
பரப்புமயில் மேவுகின்ற பாலகனைப் போற்றும்
திருப்புகழைக் கேளீர் தினம்.

வேதம், வித்தை, கீதநாதம், ஞானநூல் ஒன்றும் வேண்டாம். திருப்புகழைக் கேட்டால் போதுமாம். திருப்புகழில் அப்படி என்ன இருக்கிறது? இந்த உலகத்தில் பிறந்து, வளர்ந்து, கல்வி கற்று, கலைகள் பயின்று, சிற்றின்பத்திலேயே திளைத்து விடாதபடி முருகனைத் துதித்துப் பேரின்பம் பெறவேண்டும் என்ற கருத்தை அருணகிரிநாதர் ஒவ்வொரு பாட்டிலும் அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார்.

கருவி னுரு வாகிவந்து வயதளவி லேவளர்ந்து
கலைகள்பல வேதெரிந்து மதனாலே
கரியகுழல் மாதர்தங்கள் அடிசுவடு மார்புதைந்து
கவலைபெரி தாகிநொந்து மிகவாடி
அரகரசி வாயவென்று தினமும்நினை யாமல்நின்று
அறுசமய நீதியொன்றும் அறியாமல்
அசனமிடு வார்கள்தங்கள் மனைகள்தலை வாசல்நின்று
அனுதினமும் நாணமின்றி அழிவேனோ?

இப்படியே திருப்புகழ் முழுவதும் உள்ளது. உலகத்தில் பிறந்தபின் முக்கியமாகத் தெரியவேண்டிய ஒரே விஷயம் இதுதான்.



# கடிதங்கள்-3

.........அவர்களுக்கு,

உங்களுடைய அன்பு கனிந்த கடிதம் வந்து சேர்ந்தது. ரொம்ப சந்தோஷம். மிக்க வந்தனம் என்று சேர்ப்பது நமக்கு அழகல்ல என்று விடுகிறேன். என்னுடைய கடிதத்தைப் பற்றியும், கடிதம் எழுதுவதில் எனக்குள்ள திறமையைப் பற்றியும் வெகுவாகப் பாராட்டி எழுதியிருப்பது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது. கர்ஸான் பிரபுவைப் பற்றிச் சொன்ன வார்த்தைகளை எனக்கு ஏற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். இப்பேர்ப்பட்ட புகழுரைக்கு நான் அருகதை உடையவன் தானா என்பதைத் தீர்மானிக்க எனக்கு அதிகாரம் கிடையாது. இருந்தாலும் இது விஷயம் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

கடிதமெழுதுவதென்பது சென்ற பத்து வருஷத்துக்கு மேலாக எனக்கு மனமுவந்த வேலையாக இருந்திருக்கிறது. இந்தச் சந்தோஷம் காரணமாக என்னுடைய ஆப்த நண்பர்களுக்குப் பக்கம் பக்கமாய் எழுதித் தள்ளி

விடுவதுண்டு. இன்னும், எனக்கு, கடிதத்தில் இன்னதுதான் எழுதுவதென்று கிடையாது. என்னத்தை வேண்டுமானாலும் எழுதிவிடுவேன். அதனால், கடிதம் எழுதுவதற்கு விஷயம் இல்லையே யென்று திண்டாடினதே கிடையாது. எழுதுவதற்கு மனசு மட்டும் இருக்க வேண்டும். அவ்வளவுதான். கடிதம் எழுதுவதில் இன்னொரு பெரிய செளகரியம் இருக்கிறது. அதாவது நடையைப் பற்றிக் கவனிப்பதே கிடையாது. அந்த ஒரு காரணத்தாலேயே நடை தானாகவே அமைந்துவிடும். எனக்கு நடை வந்ததற்குக் காரணம், கடிதங்கள் எழுதி எழுதித்தான் - கட்டுரைகளும், கதைகளும் எழுதியல்ல என்றுகூடச் சொல்லலாம். இன்னும், கடிதம் எழுதும்போது நண்பனை நமக்கு முன்னால் வைத்துக்கொண்டு, அவனுடன் பேசுவது போல் எழுதி விடுகிறோம். அவனுக்குச் சில விஷயங்களைச் சொல்லிவிட வேண்டும் என்ற ஆத்திரம் வேறு இருக்கிறது. கடிதம் எழுதுவதில் ஒரு இன்பம். இந்த இன்பம் யாருக்கு எழுதுகிறோமோ அந்த நண்பனையும் பொருத்தது. அந்த நண்பனுக்கு அன்பும் அனுதாபமும் இருக்க வேண்டும். அத்துடன், அவன் ரஸிகனாகவும் இருந்துவிட்டால், கேட்க வேண்டியதில்லை!

நண்பன் இதை இதை ரஸிப்பான் என்று எண்ணிக்கொண்டு எழுதும்போது ஏற்படும்

இன்பத்துக்குக் குறைவுதான் - எண்ணிய படியே ரஸித்ததாக அந்த நண்பன் எழுதியிருப்பதைப் படிப்பதில் ஏற்படும் இன்பங் கூட.

ரொம்ப காலமாகக் கடிதம் எழுதுவது எனக்கு ஒரு பெரும் பொழுது போக்காக இருந்து வந்திருக்கிறது. நேற்றல்லவா பாங்கியில் எனக்கு வேலை ஆகி யிருக்கிறது. அதற்கு முன்னலெல்லாம் கடிதம் எழுதுவதுதான் எனக்குத் தொழிலாக இருந்து வந்தது என்ருல் பொருந்தும்.

நான் கடிதம் எழுதுவதனல் பிறருக்குச் சந்தோஷமும் நன்மையும் உண்டோ என்னமோ? எனக்கு இரண்டும் ஏராளமாக உண்டு. கடிதம் எழுதி எழுதிக் 'கை திருந்தி' யிருப்பது என்னமோ வாஸ்தவந்தான். என்னுடைய கடிதங்களை அன்போடும் அனுதாபத்தோடும் வாசித்து அனுபவிக்க நீங்கள் ஒருவர் இருக்கிறீர்கள் என்ற எண்ணம் என்னை அதிகமாக எழுதத் தூண்டும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனல், நீங்கள் உங்களுடைய திறமையை அனவசியமாகவும், அளவுக்கு மிஞ்சியும், குறைவுபடுத்திச் சொல்லிக்கொள்வது எனக்குப் பிடிக்கவே இல்லை. உங்களுடைய கடிதங்களை நீங்கள் நன்ருகத்தான் எழுதுகிறீர்கள்.

உள்ளத்தில் உணர்ந்த உணர்ச்சி பாவங்களை வெகு அழகாக உங்களால் சொல்லிவிட முடிகிறது என்பதை நிரூபிக்க உங்களுடைய கடிதங்களிலிருந்து எத்தனையோ உதாரணங்களை எடுத்துக் காட்டலாம்: போன கடிதத்தில், தமிழ்த் தாயின்மேல் உங்களுக்கு எவ்வளவு அன்பு இருக்கிறது, தமிழ் வசனம் உங்களுடைய ஆளுகைக்கு உட்பட்டு வரவேண்டும் என்பதில் உங்களுக்கு எவ்வளவு ஆத்திரம் இருக்கிறது என்பதையெல்லாம், வெகு அழகாகவும், உருக்கத்துடனும் வெளியிட்டிருக்கிறீர்கள். 'மற்ருெரு ஜன்மத்தில் சீக்கிரம் தாயின் மடிமேலேயே பார்ப்பீர்கள்' என்று எழுதி யிருக்கிறீர்கள். ஏன்? இந்த ஜன்மத்திலேயே உங்களை அந்த மடிமேல் வீற்றிருக்கப் பார்ப்பதாக உத்தேசம்; இதை அடுத்த ஜன்மத்துக்கு ஒத்திப் போட நான் தயாராக இல்லை. இன்னும், அதற்கு முந்திய கடிதத்தில் ஒரு வாக்கியம் ரொம்ப அருமையாக இருந்தது. டைப் அடித்தனுப்பிய டாகூரின் முகவுரை சம்பந்தமாக, அதைப் படிக்கும் பாக்கியம் பெற்ற ஒரு காரணத்தினல் ஆங்கிலம் கற்று விட்டதற்கு வருந்தவில்லை என்று எழுதி யிருந்தீர்கள். உண்மை ரொம்ப அழகாக வெளிவந்திருக்கிறது. 'ஒருவர் உண்மையாக அனுபவித்த விஷயத்தை மற்றவர்களுக்கு விளங்கும்படி சொல்ல முடியுமானல், அவர்களுக்கும் அது நிச்சயம் பயனுடையதா யிருக்கும்;

சுருங்கச் சொன்னல், அதுவே இலக்கியம்.' இவ்வளவு திறமைசாலியான ஒருவருக்குத் தமிழன்னை, தனது மடியில் இருக்க இடமில்லை, அடுத்த ஜன்மத்தில் பார்த்துக்கொள்ளுவோம் என்று சொல்லுவாள் ? ஒரு நாளும் சொல்ல மாட்டாள்.

என்னுடைய கும்மியைப் பற்றிச் சொல்லும்போது, திரு அருட்பாவிலுள்ள "சண்முகர் கும்மி"யைப் பாடுவது வழக்கம் என்று எழுதியிருப்பது எனக்கு அளவிலா ஆனந்தத்தைக் கொடுத்தது. காரணம், அந்தக் கும்மி அத்துணை அழகு வாய்ந்தது. கும்மிப் பாட்டுக்களில் சிறந்தவற்றுள் ஒன்றைச் சொல்லு என்றால் இதைத்தான் சொல்லுவேன். எல்லா அம்சங்களிலும் இந்தக் கும்மி சிறப்புற்றிருக்கிறது. இப்பேர்ப்பட்ட பாடலை அனுபவித்துப் பாடிய ஒருவருக்குக் கும்மிப் பாட்டின் லட்சணங்கள் தெரியாமல் போகவே போகாது. அவரை அறியாமலே அந்த லட்சணங்கள் அவருடைய அனுபவ ஞானத்தில் கலந்திருக்கும் என்பதில் சந்தேகமென்ன ?

இன்னும் உங்களுக்கு ரொம்பவும் பிடித்த கும்மிகள் (முற்றிலும் வட்டமா யாச்சுதடி, ராத்திரி எங்குதான் தங்குமோடி) எனக்கு மட்டுமல்ல, வேறு சில நண்பர்களுக்கும் ரொம்பவும் பிடித்தனவா யிருக்கின்றன. மொத்தத்தில் நீங்கள் என்னுடைய கும்மி

யைப் பாராட்டிச் சொல்லி யிருப்பதில் எனக்கு எவ்வளவு இன்பம் இருக்கும் என்பதை என்னால் எடுத்துச் சொல்ல முடியாது; எப்போதாவது ஒரு குழந்தையைப் பற்றிப் புகழ்ந்து சொல்ல நேரிட்டால், அப்போது அக்குழந்தையின் தாயைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

இந்த உற்சாகத்தில் இன்னொரு துணிச்சலான செயலும் செய்ய முற்பட்டுவிட்டேன். அதை ஒட்டிச் சில வார்த்தைகள் சொல்லத் தோணுகிறது. பாரசீகக் கவியான ஓமர்க் காயத்தின் கவிதைகளைப் படிக்கும்போது (-முழுவதும் நான் இன்னும் படிக்கவில்லை. சிலவற்றைத்தான் படித்து அனுபவித்தேன்-) நம்முடைய சித்தர் பாடல்கள் எனக்கு ஞாபகத்துக்கு வந்து விடுகின்றன. முக்கியமாக,

நந்த வனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறுமாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தாண்டி ஓர் தோண்டி - அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி

என்ற பாட்டுத்தான். இந்தப் பாட்டுக்கு நம்முடைய மனசைச் சுருதி சேர்த்துக்கொண்டு ஓமரின் பாட்டுகளைப் படித்தால், அவைகளை நன்கு அனுபவிக்கலாம். பிற பாஷையிலுள்ள கவிகளை அனுபவிப்பதற்கு இதுதான் சரியான முறை. அந்தக் கவிகளை மொழிபெயர்ப்பதற்கும் இதுதான் வழி. இந்த

மாதிரி ஓமரின் பாடல்களைப் பார்த்து அனுபவிக்காததனால் இதுவரைக்கும் ஒருவராலும் அப்பாடல்களை வெற்றிகரமாக மொழிபெயர்க்க முடியவில்லை............இந்த முயற்சியில் நானும் நேற்றுக் கொஞ்ச நேரம் ஈடுபட்டேன் என்பது, என்னுடைய துணிவையல்ல, என்னுடைய அசட்டுத்தனத்தைத்தான் காட்டுகிறது................

ஒரு காரியத்தைச் சாதிக்க முயலுவதில் குற்றமொன்றுமில்லை. சாதித்துவிடுவோம் என்ற அகந்தைதான் ஏற்படக் கூடாது. சாதித்து விட்டோமென்று கர்வமும் கொள்ளப் படாது. இப்படியெல்லாம் நான் எண்ணுபவனல்ல. இந்த முன்னுரையை மனசில் வைத்துக் கொண்டு, மூலத்தையும் 'நந்தவனத்தில் ஓர் ஆண்டி' மெட்டில் அமைந்த மொழிபெயர்ப்பையும் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

தங்கியி ருக்கும்நாள் ஒன்றிரண்டே – அதில்
தங்கியி ருப்பதுக வலைஒன்றே
இங்கெந்த வேலையும் செய்திடாமல் – நாம்
ஏங்கித் துயரமுற் றேகிடுவோம்.



27

# கைகூடாக் காதல்

கத்தரிக்காய் தோட்டத்திலே
காத்திருந்தேன் நாட்கணக்காய்
கத்தரிக்காய்க் கூடைக்காரி
கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. 1

பண்ணெடுத்துப் பாடிப்பார்த்தேன்
பக்கத்திலே சாடிப்பார்த்தேன்
கண்ணெடுத்தும் பார்க்கவில்லே
கத்தரிக்காய்க் கூடைக்காரி. 2

கத்தரிக்காய் கேட்டுப்பார்த்தேன்
காசையும் நீட்டிப்பார்த்தேன்
கத்தரிக்காய்க் கூடைக்காரி
கண்ணெடுத்தும் பார்க்கவில்லே. 3

கத்தரிக்காய்க் கூடைக்கொரு
கைகொடுத்துத் தூக்கிவிட்டேன்
கத்தரிக்காய்க் கூடைக்காரி
கண்ணிரண்டும் மூடிக்கொண்டாள். 4

கண்ணிரண்டும் மூடிக்கொண்ட
கல்நெஞ்சக் காரியவள்
கண்ணிரண்டும் திறந்தென்னேக்
காணுவாளோ இப்பிறப்பில்! 5

# கார்த்திகை

எவ்வளவோ காலமாக மேல்நாட்டு விஞ்ஞான நிபுணர்கள் தீச்சுடரை ஆராய்ச்சி செய்து வந்திருக்கிறார்கள். இன்னும் எவ்வளவோ ஆராயவேண்டி யிருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். அதாவது, தங்களுடைய ஆராய்ச்சிக்கு எட்டாத பண்புகள் எத்தனையோ சுவாலையில் இருக்கின்றன என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். உலக மகா கவிகளும் அக்கினியின் அழகைக் கண்டு களித்திருக்கிறார்கள்.

வங்காளக்கவி ரவீந்திரர் தீக்கொழுந்தைத் தாம் அனுபவித்ததை ஒரு கவிதையில் வெகு அழகாக வெளியிட்டிருக்கிறார். வீட்டுக்குள் குத்துவிளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. அதன் சுவாலையை ஒரு பெண்ணுக்கு ஒப்பிட்டிருக்கிறார். பெண் வீட்டிலேதானே இருப்பாள்! காற்றுத்தான் சுவாலையின் காதலன். காதலன் வீட்டுக்குள்ளேயும் இருப்பான், வெளியேயும் இருப்பான். சமயங்களில் காட்டுக்கும் மலைக்கும் போயிருப்பான். காதலன் வீடு திரும்பியதும், காதலி சொல்லுகிறாள்: "நீ

பார்த்து வந்த விஷயங்களை யெல்லாம் எனக்குச் சொல்லமாட்டாயா? காட்டில் என்னென்ன கண்டாய்? மலையில் என்னென்ன பார்த்தாய்? அத்தனையும் சொல்லு. ஆனால், சொல்லுவதை மெள்ளச் சொல்லு. காதோடு காதாய் ரகசியமாகச் சொல்லு.' காதலன் விஷயத்தைச் சொல்லுகிற விதமாகச் சொன்னால்தான் காதலிக்குத் திருப்தியாயிருக்குமாம். சுவாலை எரிவதற்கு, அதாவது வாழ்க்கையை நன்கு அனுபவிப்பதற்கு, காற்று அவசியம். ஆனால், காற்று கொஞ்சம் பலமாக அடித்துவிட்டால் சுவாலையின் கதி என்னவாகும்? சுவாலையின் அழகில் ஈடுபட்டு, அச்சுவாலைக்கும் காற்றுக்குமுள்ள சம்பந்தத்தைக் கவி சொல்லுகிற விதமே வேறு என்பதைத் தெளிவாகக் காட்டிவிட்டார். காற்று, தீயைக் கட்டியணைக்க வரும்போதெல்லாம், சுவாலை நாணிக்கோணிக்கொண்டு வளைந்து வளைந்து கொடுக்கும் அழகை நாமும் எத்தனையோ தரம் கண்டு களித்திருக்கிறோம். அதையே கவி வர்ணிப்பதையும் பார்த்தோம்.

சிலர் அக்கினியைத் தெய்வமாக வழிபடுகிறார்கள். அக்கினியின் உபயோகத்தையும் அழகையும் கண்டு உணர்ந்ததனால் தான் அதைத் தெய்வமாக வழிபடுகிறார்கள். நம்மவர்கள் அக்கினியை ஒரு தேவனாகச் சிருஷ்டி செய்திருக்கிறார்கள். இன்னும் கடவுளே ஜோதிமயமாக

இருக்கிறார் என்ற வேதாந்த உண்மையும் நமக்குள் சர்வ சாதாரணமாக இருக்கிறது. "தீப மங்கள ஜோதி நமோ நம."

ஒரு காலத்தில் பிரும்மாவும் விஷ்ணுவும் சிவனைத் தேடப்போனார்களல்லவா? அவர்களால் தேடிப் பிடிக்கமுடியவில்லை என்று திரும்பிவந்துவிட்டார்கள். அப்போது சிவபெருமான் ஜோதிஸ்தம்பமாக நின்றாராம். இதை வைத்துத்தான் கார்த்திகையன்று சிவன் கோவில்களில் சொக்கப்பனை எரியவிடுவது வழக்கமாயிருக்கிறது. இந்தத் திருவிழா திருவண்ணுமலையில் அதிவிமரிசையாய் நடக்கும். குறிப்பிட்ட நேரத்தில் மலையுச்சியில் இருக்கும் சொக்கப் பனைக்குத் தீ வைப்பார்கள். வைத்ததும், லட்சக் கணக்கான வாய்கள் ஒரே சமயத்தில், 'அண்ணுமலைக்கு அரோகரா' என்று சொல்லும். அந்தச் சப்தம் உலகெங்கும் பரவியிருக்கிறதோ என்றுதோன்றும். லட்சக்கணக்கான மக்களின் மனம் ஒன்றுபடுவதற்கு நம்முடைய முன்னோர்கள் எப்பேர்ப்பட்ட வழிகளைக் கண்டு பிடித்து வைத்திருக்கிறார்கள்!

வீடுகளிலும் கார்த்திகை மும்முரமாய் நடக்கும். எங்கு பார்த்தாலும் விளக்குகள் வைக்கப்பட்டிருக்கும். கார்த்திகையன்று நட்சத்திர மண்டலமே உலகத்துக்கு வந்துவிட்டது போல் தோன்றும். அன்றைக்கு வீதி வழியே நடந்து போனால் நட்சத்திர மண்டலத்

தில் சஞ்சரிப்பது போன்ற ஒரு ஆனந்தம் ஏற்படும். அதோ அந்த மேல் மாடியில் ஒரு பெண் விளக்கைத் தூண்டிவிடுகிறாள். தூண்டத் தூண்ட, விளக்கும் அவளுடைய களங்கமற்ற முகமும் ஒருங்கே பிரகாசிக்கின்றன. இந்தக் காட்சி வீதியில் போகிறவர்களின் உள்ளத்தைத் தூண்டாமலா இருக்கும்?

# முதலியார்வாள் வீட்டுக் கல்யாணம்

க

" அண்ணச்சி வாருங்க! என்ன, சௌக்கியந்தானு?"

" ஆமா அண்ணுத்தே. வீட்டில் எல்லாரும் சௌக்கியந்தானே? அது சரி. முதலியார் வீட்டில் கலியாணமாமே?"

" என்ன ஐயா இது! நீங்களே இப்படியெல்லாம் பேச ஆரம்பிச்சிட்டேகன்னு.."

" அப்படி என்ன ஐயா பேசிப்பிட்டேன்? எனக்கு ஒண்ணும் விளங்கலேயே."

" முதலியார்வாள் என்று சொல்லாமல் சும்மே முதலியார் என்று சொல்லுகிறீர்களே! நமக்குள்ளே இது நல்லாருக்கா? நீங்களே சொல்லுங்கள்."

" மன்னிக்கணும் அண்ணுத்தே! தஞ்சாவூர்ப் பழக்கத்தில் அப்படிச் சொல்லிப்பிட்டேன்."

"அதுக்கென்ன பரவாயில்லை. நல்ல வேளை, உங்களுடைய அனுபவம் தஞ்சாவூரோடே நின்றது. கொஞ்ச நாள் மதராஸ் வாசியாக இருந்திருந்தால், முதலி என்றே சொல்லி இருப்பீர்கள்."

"நீங்கள் சொல்லுவது உண்மைதான். மதுரைக்கு வடக்கே மரியாதை என்பதே கிடையாது. மரியாதைக்குப் பேர் போனது நம்ம திருநெல்வேலிதான்."

"இன்னும், இந்த மதராஸ்காரன்கள் இருக்காங்களே, அவன்களுக்கு இந்த விஷயங்களெல்லாம், சொன்னாலும் புரிவது கிடையாது. எனக்குத் தெரிஞ்ச மதராஸ்காரன் ஒருவன் எங்களுடன் பழகி, 'முதலி' என்றதற்குப் பதில் 'முதலியார்வாள்' என்று சொல்லக் கற்றுக் கொண்டான். நம்ம சங்கரலிங்கம் பிள்ளை அண்ணாச்சி ஒரு தடவை மதராஸுக்கு வந்திருந்தார்கள். அவரை அவன் 'பிள்ளையார்வாள்' என்று கூப்பிட்டுவிட்டான். எங்கள் இரண்டு பேருக்கும் சிரிப்புத் தாங்கவில்லை. விழுந்து விழுந்து சிரித்து விட்டுத் தலையில் அடித்துக் கொண்டோம்."

"பேஷ்! ரொம்ப வேடிக்கையாய் இருக்கிறது. அது சரி, முதலியார்வாள் வீட்டில் என்றைக்கு நிச்சய தாம்பூலமாச்சு?"

"நிச்சய தாம்பூலமா? அது ஆகிப் பத்துப் பதினைந்து வருஷமாச்சே!"

"அதென்ன! அப்படிச் சொல்றேக!"

"ஆமா, அப்படித்தான். ஐயாத்துரை முதலியார்வாள் பெண் ஷண்முகவடிவண்ணி இருக்கிறாள் அல்லவா? அவள் பிறந்த அன்றைக்கே நிச்சயம் பண்ணியாச்சே!"

"யாருக்கு?"

"நாளைக்குக் கலியாணம் நடக்கப் போகிறதே, அதே மாப்பிள்ளைக்குத் தான். நம்ம சிதம்பரத்துக்கு, வடிவு, அத்தை மகள் அல்லவா? எங்களுக்குள்ளே, 'அஞ்சும் மூணும் எட்டு; அத்தை மகளைக் கட்டு' என்பதுதான் விதி."

"அத்தை மகள் அழகாயில்லையென்றால்....?"

"அழகாயில்லையென்றலா? அதுதான் கிடையாது. அத்தானுக்கு அத்தை மகள் எப்போதும் அழகுதான். இரண்டு பேரும் சிறு வயது முதற்கொண்டு அன்னியோன்யமாய்ப் பழகி வருவார்கள். பையன் அடிக்கடி அத்தை வீட்டுக்குப் போவான். அங்கே மச்சினியுடன் சகல விதமான விளையாட்டுக்களும் விளையாடிக் கொண்டிருப்பான். அவளுடன் அடிக்கடிச் சண்டையும் போடுவான். அவளைக் கிள்ளிவிடுவான். கையைப் பிடித்து 'நறுக்'

கென்று கடித்து விடுவான். அந்தப் பெண், பாவம், 'கூவேகூ' வென்று அழுதுகொண்டு அவளுடைய அண்ணியினிடம் போய்ச் சொல்லும். அதற்கு அண்ணி, 'அதுக்கென்ன? அத்தான்தானே அடிச்சான்? அத்தான் தானே கிள்ளினன்?'' என்று சொல்லி விடுவாள். இப்படிச் சொன்னதும், அந்தப் பெண்ணின் மனமும் எப்படியோ சமாதானம் ஆகிவிடும். மறு நிமிஷம் எப்போதும் போல அத்தானும் மச்சினியும் விளையாட ஆரம்பித்து விடுவார்கள். இப்படி வளர்ந்த பிள்ளைகள் அழகைப்பற்றி அதிகம் கவலை கொள்ளமாட்டார்களல்லவா?''

"வாஸ்தவம். நீங்கள் சொல்லுவது முற்றிலும் சரி. இப்பொழுது நாம் நம்முடைய.... நம்முடைய...."

"நம்முடைய....என்ன? அதைத்தான் சொல்லுங்களேன் வாய்விட்டு! முழுங்குகிறீர்களே!"

"அதுதான், நம்முடைய 'ஒய்புஸ்'கள்' அழகாக இல்லை என்று வருத்தப்படுகிறோமா? அது சரி, நாளைக்கு முகூர்த்தம் பத்து மணி முதல்—"

"பன்னிரண்டு வரைக்கும். பதினொன்றுக்குள்ளாகவே முகூர்த்தம் முடிந்துவிடும் என்று நினைக்கிறேன். ஐயாத்துரை அண்

ஞத்தைக்கு, எல்லாம் சட்டுப்புட்டென்று முடியணும். இதிலெல்லாம் அனுவசியமாக யாராவது நேரத்தைக் கடத்தினல் அசாத்தியக் கோபம் வந்திரும். அண்ணச்சி, நாளைக்கு சீக்கிரம் வந்திருவேகள்ள ?"

"ஒம்பது மணிக்கே வந்திருவேன். உங்களுக்கு ராத்திரிச் சாப்பாடே அங்கேதானே ?"

"இல்லை. ராத்திரிச் சாப்பாடு வீட்டிலேதான். நாளைக்கு விடியற்காலம் காப்பிப் பலாரம் அங்கேதான். ஏழு மணிக்கே குளிச்சுக் கிளிச்சுப் போட்டு, அங்கே போய்விட வேண்டியதுதான்."

"அப்பண்ணே, இப்ப நான் போயிட்டு வரட்டுமா ?"

"அப்பண்ணே, போயிட்டுவாருங்க அண்ணச்சி. நாளைக்குக் காலம்பர வந்திருங்க" என்று சொல்லிவிட்டு வீடு வந்து சேர்ந்தேன்.

உ

விடியற்காலம் ஏழு மணிக்கே கலியாண வீட்டுக்குப் போய்விட்டேன். 'காப்பிப் பலாரம்' ஆனதும், கலியாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் மும்முரமாக நடந்தன. ஆளுக்கு ஒரு மூலையில் இருந்து கொண்டு, 'அதைக் கொண்டா' 'இதைக் கொண்டா' என்று அதிகாரம் பண்ணிக் கொண்டிருந்தார்களே ஒழிய, வேலை ஒன்றும் நடப்பதாகக்

காணோம். ஐயாத்துரை அண்ணாத்தை மட்டும் பம்பரம்போல் வீடெங்கும் சுழன்று கொண்டிருந்தார்கள். ஒன்பதரை மணிக்கே பந்தலில் கூட்டம் நிறைந்து விட்டது. மணி பத்து ஆகியும் முகூர்த்தத்தை ஆரம்பிக்க முடியவில்லை. அண்ணாத்தைக்குக் கோபம் கோபமாய் வந்தது. சாஸ்திரிகளிடம் போனார்கள்.

"சாஸ்திரிகளே! மணி பத்தரை ஆகப் போகுது. மந்திரங்களை எல்லாம் சீக்கிரம் சொல்லுங்கள். வீணாக நேரத்தைக் கடத்தக் கூடாது."

"அதுக்கென்ன! இதோ முடிச்சுட்டேன். ஓமம் வளர்க்க நெய் காலியாகி விட்டது. நெய் கொண்டாரச் சொல்லுங்கோ."

"நெய்யில்லை யென்றால் எண்ணெயை விட்டு வளருங்கையா. நேரமாச்சுன்னா! சொன்னாத் தெரியலையே!"

"எண்ணெயுமில்லையே ஐயா! என்ன பண்ண?"

"அப்பண்ணா, தண்ணியை விடுங்க' என்று அண்ணாத்தை சீறினார்கள்.

கொஞ்ச நேரங் கழித்து, சாஸ்திரிகள், "பெண்ணோட தாய் மாமனை வரச் சொல்லுங்கோ" என்று கத்தினார். தாய் மாமனைக் காணோம். எட்டுத் திசைக்கும் ஆள் விட்

டார்கள். தேடப்போன சிகாமணிகள் ஒருவரும் திரும்பி வரவில்லை. கடைசியில் ஒரு பயல் வந்து, "ஆளைக் காணும்" என்று சொன்னான்.

அண்ணாத்தை, பல்லை 'நெறு நெறு' வென்று கடித்தார்கள். தாய் மாமனார் அந்தச் சமயத்தில் வந்திருந்தாலும் அவர் அழுது கொண்டுதான் அல்லது முதுகைத் தடவிக் கொண்டாவதுதான் பெண் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு கிரியை நடத்த வேண்டியதாயிருந்திருக்கும். இவ்வளவுக்கும் அவர் காணமற்போனதன் மர்மம் அண்ணாத்தைக்குத் தெரியாது. 'ஆளைக் காணும்' என்று சொன்னானே, அவன் மூலமாக எனக்கு உண்மை தெரிய வந்தது. கலியாண சமயத்தில், தாய் மாமனார் ஒரு குட்டிச் சுவரில் இன்னும் நாலைந்து கழுதைகளுடன் ரங்காட்டம் ஆடிக்கொண்டிருந்தாராம். இந்தச் சின்னப்பயல் அவரிடம் விஷயத்தைச் சொன்னதும், அவர் இந்தப் பயலை அதட்டி, "ஓடிப்போய், ஆளைக் காணும் என்று அத்தானிடம் சொல்லி விடு. வேறு விதமாகச் சொன்னே, முதுகுத் தோலை எடுத்திருவேன். ஜாக்கிரதை!" என்று சொல்லி யிருக்கிறார். இந்தப் பயலும், அவருக்குப் பயந்து, அப்படியே சொல்லி விட்டான். உடனே, இன்னொரு தாய் மாமனாரைப் பிடித்து வைத்து அந்தக் கிரியையை நடத்த வேண்டியதாயிற்று.

பிறகு, மாப்பிள்ளை, பட்டைத்தார், கம்பு குடை, ஒரு வேட்டிப் பொட்டணம் முதலியவை சகிதம் காசிக்குப் புறப்பட்டு விட்டார். வழக்கம் போல் மாமனார் விழுந்தடித்து ஓடிப்போய், "மாப்ளே! நீங்க இப்படிக் கோவிச்சிக்கிடப்படாது. திரும்பி வந்திருங்க தயவு செய்து; வந்து என் பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டி விடுங்க" என்று மாப்பிள்ளையைத் 'தாங்குடா தாங்கு' என்று தாங்கினார். மாப்பிள்ளையும், பிகு ஒன்றும் பண்ணாமல் திரும்பி வந்து விட்டார். முந்தி ஒரு கலியாணத்தில் மாமனார் ஒருவர் ஒரு வேடிக்கை பண்ணிவிட்டார்: மாப்பிள்ளை காசிக்குப் புறப்பட்டுப் போனதும், மாமனார் ஓரிடத்தில் 'சக்'கென்று உட்கார்ந்து கொண்டார்; மாப்பிள்ளை பாட்டுக்குக் காசியைப் பார்த்துப் போய்க்கொண்டேயிருந்தார்; பிறகு மாப்பிள்ளைவீட்டுக்காரர்களெல்லோரும் மாமனாரைப் போய்த் 'தாங்குடா தாங்கு' என்று தாங்க வேண்டியதாயிற்று.

காசிக்குப் போய்விட்டு-இல்லை-போகாமல் திரும்பி வந்ததும், மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் கலியாணம் சிறப்பாக நடந்தேறியது. மாப்பிள்ளை ஒரு முடிச்சும், மாப்பிள்ளையின் அப்பாத்தை (அக்காள்) இரண்டு முடிச்சுமாகப் போட்டுப் பெண் கழுத்தில் தாலி கட்டப்பட்டது.

இதற்கப்புறம்; பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் விபூதி பூசி மொய்ப்பணம் வைக்கும் விசேஷம். கலியாணத்துக்கு வந்திருந்த பந்துக்கள், அவரவர் அந்தஸ்துக்குத் தக்கபடி வரிசைக்கிரமமாகவே ஒவ்வொருவராக வந்து, மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் ஐந்தோ,மூன்றோ, ஒன்றோ வைத்துவிட்டுப் போனார்கள். நம் கர்ணம் துரைசாமி முதலியார்வாளும், அவர்களுக்குச் சட்டை போடும் வழக்கமே கிடையாததால், இடுப்பில் வலது பக்கம் செருகியிருந்ததை எடுத்து, மொய்ப்பணமாக மாப்பிள்ளை கையில் கொடுத்துவிட்டு நகர்ந்தார்கள். உடனே சுற்றியிருந்த எல்லோரும் 'கொல்'லென்று சிரித்தார்கள். துரைசாமி ஐயா என்னடா என்று திரும்பிப் பார்த்தார்கள். முதலில் அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. பிற்பாடு, மாப்பிள்ளை கையிலிருந்த தம்முடைய வெள்ளிப் பொடி டப்பியைப் பார்த்ததுந்தான் அவர்களுக்குப் பூர்வஞானம் தட்டுப்பட்டது. மறுபடியும், இடுப்பில் இடது பக்கம் செருகியிருந்த மூன்று ரூபாய்களை எடுத்து மாப்பிள்ளை கையில் கொடுத்துவிட்டு டப்பியை வாங்கிக்கொண்டார்கள். டப்பியை வாங்கும்போது "மாப்ளே! வேணும்னு ஒரு சிம்டா எடுத்துப் போட்டுக்கிடுமே" என்று சொல்லிவிட்டு யதாஸ்தானத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

எல்லோருக்கும் தாம்பூலம் கொடுப்பதற்குள் திண்டாடிப் போய்விட்டது. கூட்டம்

அவ்வளவு அதிகம். சமாளிக்க முடியவில்லை. இன்னும், தாம்பூலம் கொடுப்பதில் முதலியார் வாள்களுக்குள் ஒரு பெரிய சங்கடம் இருக்கிறது. அதாவது, தாம்பூலமும், அந்தஸ்துக்குத் தகுந்தபடி முதல் வெற்றிலை பாக்கு, இரண்டாம் வெற்றிலை பாக்கு என்று வரிசைக் கிரமமாகக் கொடுக்கவேண்டும். அந்தஸ்து என்றால் ஏதோ, பணம், செல்வாக்கு, படிப்பு முதலியவைகளை வைத்தல்ல. பெரிய பரம்பரைக் குடும்பத்தில் பிறந்த காரணத்தினால் ஏற்பட்ட அந்தஸ்துத்தான். பரம்பரைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் வெறுஞ் சின்னப்பயலாக இருப்பான்; அத்துடன் ஒரு சல்லிப் பயலாகவும் இருப்பான். சிகரட்டே சகாயம், குடியே சுவர்க்கம், தாசியே துணை என்பதே அவனுடைய 'மத சம்பிரதாயம்'. வயது பதினேழு தான் ஆச்சு; அதற்குள் அவனுக்குச் சகல விதமான அனுபவமும் சித்தித்துவிட்டது. மைனர் விளையாட்டு விளையாடி, இருந்த சொத்தையெல்லாம் பாழாக்கிவிட்டு, அடுத்த வீட்டுக்காரரிடமிருந்து இரவல் வாங்கின அங்கவஸ்திரதாரியாய் அங்கே உட்கார்ந்திருப்பான். இவனுக் கடுத்தாற் போல், ஒருவர் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர், ஆனால் எல்லாவிதத்திலும் உண்மையான அந்தஸ்து உடையவர், உட்கார்ந்திருப்பார். தாம்பூலம் கொடுக்கும்போது, அந்தப் பயலுக்குக் கொடுத்துத்தான் இந்தப் பெரிய மனிதருக்குக் கொடுக்க வேண்டும்.

இப்படியெல்லாம் அந்தஸ்தையும் கிந்தஸ்தையும் பார்த்துத் தாம்பூலம் கொடுத்து முடிய, மணி ஒன்றுக்கு மேலாகிவிட்டது. இலை போட்டபோது மணி ஒன்றேமுக்கால் இருக்கும். அண்ணாச்சியும் நானும் பக்கத்திலே பக்கத்திலே உட்கார்ந்து கொண்டோம். கறிவகைகளைப் பரிமாறவே அரைமணி நேரம் பிடித்தது. நாங்கள் இருவரும் சும்மா இருப்பானேனென்று பேச ஆரம்பித்தோம்.

"என்ன அண்ணாச்சி! பசி எப்படி?"

"வயிற்றில் எவ்வளவு பசியிருக்கலாமோ அவ்வளவு பசி யிருக்கிறது. இன்னும் கொஞ்ச நேரமானால் பசி செத்துக்கூடப் போய்விடும். ஏன் இலைபோட இவ்வளவு நேரமாகி விட்டது? எந்த ஊர்த் தவசுப்பிள்ளைகள்?"

"சமையல் பன்னிரண்டு மணிக்கே 'ரெடி'. தாம்பூலங் கொடுப்பதில்தான் நேரமாகிவிட்டது."

"முகூர்த்த நேரம் அப்படி அமைஞ்சு போச்சு. என்ன செய்யலாம்! சூரியோதயத்துக்கு முன் இருந்தால் செளகரியமா யிருந்திருக்கும்."

"அது தான் இல்லை. இந்த முகூர்த்த நேரம் அனேக விதத்தில் ரொம்ப செளகரியமானதாச்சே! அண்ணாத்தை ஜோசியரிடமெல்

லாம் கேட்காமல், வேணுமென்றே இப்படி வைத்திருக்கிறார்கள். ஜோசியரிடத்தில் கேட்டு நடத்திய கலியாணங்களெல்லாம் கோழிக்கும் காக்கைக்கும் தெரியாமலே நடந்து விடும். அதி லுள்ள சௌகரியக் குறைவுக்கு அளவில்லை. அன்றி, ராத்திரிப் பூராவும் கலியாண வீட்டுக் காரர்களுக்குத் தூக்கம் கிடையாது. கலியாண வீட்டுக்கு வந்தவர்களும் மூணு மணிக்கே எழுந் துவிட வேண்டும். ஒவ்வொருவர் முகத்திலும் மூதேவி தாண்டவமாடிக் கொண்டிருப்பாள். அதற்கு இது எவ்வளவோ மேலல்லவா ?"

"எது எவ்வளவோ மேல் ?"

"நன்றாகப் பசிச்சுச் சாப்பிடுவது."

"பேஷ், பேஷ்! அண்ணாத்தைக் கேற் றாற் போலத் தம்பி வந்து வாய்த்தீர்கள். அவா ளுக்கு வேறென்ன வேண்டும்? விட்டுக் கொடுக்காமல் பேசுதேகளே! சரி, சாப்பிட்டுக் கொண்டே பேசுவோம்."

"அந்த ஓரத்திலிருக்கே, அது என்ன துன்னு தெரியாதோ ?"

"தெரியாமலென்ன ? இஞ்சிப் பச்சடி பேஷாயிருக்கு."

"இது உடம்புக்கு ரொம்ப நல்லது. இதில் என்னமெல்லாமோ இருக்காம். இதைப் பற்றி அமெரிக்காவிலே ஒரு பெரிய டாக்டர் பத்திபத்தியா பேப்பரிலே எழுதிக் கொண்டி

ருக்கிறாரென்று அன்னிக்கு யாரோ சொல்லிக் கொண்டார்கள்."

"புதினாத் துவையலை ருசி பார்த்தேகளா, அடாடா! என்னமாயிருக்கு!"

"ஏ சிவலிங்கம்! அண்ணாச்சி இலைக்கு அவியல் படை. சாமான் இல்லாத இலை பார்த்து படைக்கத் தெரியலையே!"

"என்னதான் சொல்லுங்கள். இந்த அரிசிப் பாயசத்துக்குப் பிறகுதான் மற்றப் பாயசமெல்லாம்."

"அண்ணாச்சி! நீங்க பாதாம்கீர் சாப்பிட்டிருக்கேகளோ?"

"இல்லையே. பேரே புதுசா யிருக்கே."

"ருசியும் அப்படித்தான். இதுவும் ஒரு வகைப் பாயசந்தான். கூடிய சீக்கிரம் 'மந்திர விலா'சில் ஒரு கப் வாங்கிச் சாப்பிட்டு விடுங்கள். அதில் மூட்டைப் பூச்சியின் மணம் கமழும். தொண்டைக்குள்ளே போகும்போது என்னமோ மாதிரி யிருக்கும். ஆனால், இதை வெளியில் சொல்லாதைங்க. சொன்னீர்களோ உங்களை அநாகரிகம் என்று தள்ளி விடுவார்கள். இப்பொழுது கொஞ்ச காலமாகப் பாதாம் கீர் இல்லாத 'டின்னர் பார்ட்டி'யே கிடையாது. அதற்கு அப்படி அடிக்கிறது யோகம்."

* * *

இரண்டரை மணிக்குச் சாப்பாடு முடிந்தது. அண்ணாச்சி அப்படியே வீட்டுக்கு போய் விட்டார்கள். நானும் இன்னும் சிலரும் கீழ் வீட்டில் உட்கார்ந்துகொண்டு வெற்றிலை பாக்குப் போட்டோம். கொஞ்ச நேரத்தில், கூட இருந்தவர்கள் ஒவ்வொருவராய்ப் படுத்துத் தூங்க ஆரம்பித்து விட்டார்கள். உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டல்லவா? ஆனால், எனக்கோ மத்தியானம் தூங்குகிற கெட்ட பழக்கம் கிடையாது. பொழுதும் போகவில்லை. அப்படியே அங்கிருந்து புறப்பட்டேன்.

௩

தெற்கு வீடு, வடக்கு வீடு, மேல வீடு, கீழ வீடு எல்லாம் போய்ப் பார்த்தேன். ஒவ்வொரு இடத்திலும் செட்டு செட்டாக உட்கார்ந்து கொண்டு "கம்ப ராமாயணம் - சுந்தர காண்ட"த்தைப் படித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு சிலர் 'மூன்றாத்தி நாலு' விளையாடிக் கொண்டிருந்தனர். ஒரு சிலர் 'கழுதை' ஆட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அனேகர், துட்டு வைத்து ரங்காட்டம் விளையாடுவதில் வெறிகொண்டிருந்தனர். கலகல என்று காலணாவாக வந்து களத்தில் குவிந்தன. ஆட்டத்துக்காட்டம் உற்சாகம் அதிகரித்துக் கொண்டிருந்தது. இது நம்முடைய உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது என்று அங்கிருந்து கிளம்பினேன்.

கிளம்பி, நடு வீட்டுக்குள் நுழைந்தேன். அங்கே நாலைந்து கிழடுகள் உட்கார்ந்திருந்தன. எல்லோர் தலையிலும் வெகு நன்றாக வழுக்கை விழுந்திருந்தது. வழுக்கை மண்டைகள் பளபள வென்று மின்னின. இவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் தெரியுமா? உண்மை யாகவே ஒரு கம்ப ராமாயணப் புஸ்தகத்தை எடுத்து, உண்மையாகவே அதைத் திறந்து, ஒரு வர் ராகம் போட்டுப் படிக்க, மற்றவர்கள் வாய்க்குள் யானை போவது தெரியாமல் கேட் டுக் கொண்டிருந்தார்கள். நான் போனபோது, ராமர் போய் ஏதோ ஒரு வில்லை ஒடித்தாரல் லவா, அந்தக் கட்டத்தில் ஒரு பாட்டைப் பாடி நிறுத்தினார்கள். கண்ணாடி போட்டிருந்த பாட் டையா, "அடடா! கம்பனென்றால் கம்பன் தான்" என்றார்கள். இன்னொரு பாட்டையா, "கவிக்கென்றே பிறந்தவன் கம்பன்" என் றார்கள். அதற்கு மற்றொரு பாட்டையா, "இல்லை, கம்பனுக்கென்றே பிறந்தது கவி" என்று சொன்னார்கள். இப்படியாக, இந்தப் பாட்டையாக்கள் ஒரே பரவசத்தில் இருந்தார் கள். மனசை அப்படி அப்படியே கம்பன் கவியில் லயிக்க விட்டு விட்டார்கள். இந்த உலக ஞாபகமே அவர்களுக்கு அப்பொழுது இல்லை. இந்தச் சமயத்தில் ஒரு தவசுப் பிள்ளை வந்து, வெள்ளித் தம்ளரில் காப்பியை விட்டு ஒரு பாட்டையாவிடம் நீட்டினான். பாட் டையா அதில் கையை முக்கி விட்டார்கள் -

சந்தனம் என்றெண்ணி! அவர்களுக்குக்கம் பன் கவியில் அவ்வளவு ஈடுபாடு. இதைப் பார்த்து மற்றைப் பாட்டையாக்களும் காலே அரைக்கால் நிமிஷநேரம் சிரித்துவிட்டார்கள். எனக்கோ சிரிப்புத் தாங்கவில்லை. இதுதான் சமயமென்று அங்கிருந்து ஓடியே போய் விட்டேன்.

வழியில், நத்தம்பட்டி நமச்சிவாய முதலி யார்வாளைப் பார்த்தேன். அவர்கள் ரொம்பக் கோபமாக முகத்தை வைத்துக்கொண்டு, எங் கேயோ அவசர அவசரமாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

"எங்கய்யா வேகமாப் போறேக?"

"நத்தம்பட்டிக்குத்தான்."

"என்ன, அதுக்குள்ளயா ஊருக்குக் கிளம்பி விட்டீக? கச்சேரி, பட்டணப் பிரவே சம், இதற்கெல்லாம் இருக்கலையா?"

"என்னய்யா இருப்பு? கச்சேரி கேட்டு விட்டுத்தானே வருகிறேன்?"

"என்ன! கச்சேரி ஆரம்பிச்சாச்சா? எப்படி யிருக்கு?"

"ரொம்ப மோசம்! சுத்த ஊழல்! அது தானே திரும்பிப் போறேன்? இவ்வளவுக்கும் பொம்பளைக் கச்சேரிதான். யாரோ, மதுரை யாம். குப்புலச்சுமியாம். வயசு அம்பத் தைஞ்சுக்குக் குறைவில்லை. மூஞ்சியைப்

பார்த்தால் நாலு நாளைக்குச் சாப்பாடு வேண்டாம். உங்க அண்ணைத்தை நல்ல ஆள் கொண்டாந்தாரையா கச்சேரி பண்ண !''

"பாட்டு எப்படி ஐயா இருக்கு ?"

"பாட்டு எப்படி இருக்கும் ? இவ்வளவு அசிங்கமா யிருப்பவள் எவ்வளவு நல்லாப் பாடினாலும் கச்சேரி எப்படி நல்லா இருக்கும் என்று நான் கேக்கேன் ?''

"சரி, நீங்க போயிட்டு வாருங்க. நான் போய்க் கச்சேரியைக் கேட்டுப் பார்க்கிறேன்'' என்று சொல்லிவிட்டுக் கலியாண வீட்டுக்குப் போனேன்.

அங்கே கச்சேரி நடந்து கொண்டிருக்கிறது. குப்புலச்சுமியின் உருவத் தோற்றம் நத்தம்பட்டி ஐயா சொன்னபடியேதான் இருந்தது. சாரீரம் இனிமையாக இருந்தது. மற்றப்படி எனக்கு ஒன்றுமே புரியவில்லை. முதல் இரண்டு மணி நேரத்துக்கு எல்லாம் தெலுங்குப் பாட்டுக்கள். பிற்பாடு, ஒரு மணி நேரத்துக்கு இந்துஸ்தானிப் பாட்டுக்கள். இதற்குள் ஒரு ரஸிகர், "கன்னடப் பாட்டு" ஒன்று பாடும்படி சீட்டு அனுப்பினர். இன்னொருவர் இங்கிலீஷ் நோட்டுபாடச் சொன்னார். நல்ல வேளையாக, லத்தீன், கிரீக்கு, தமிழ் இந்த பாஷைகளில் மட்டும் யாரும் பாடச் சொல்லவுமில்லை; பாடவும் இல்லை.

ராத்திரி பதினொரு மணிக்குப் பட்டணப் பிரவேசம் ஆரம்பித்தது. கொஞ்ச தூரம் போனதும் அண்ணாச்சி வந்து விட்டார்கள். அண்ணாச்சி வரவில்லை யென்றால் நமக்குப் பேச்சுக்கு ஆள் கிடையாது. மேளக்காரன் 'நொய்' என்று ஆரம்பித்துப் பத்துப் பதினைந்து நிமிஷத்துக்கு என்னமோ வாசித்தான். வாசிப்பது என்ன ராகம் என்று கண்டு பிடிக்க அனேகர் முயன்றார்கள். ஆளுக்கு ஒன்றைச் சொன்னார்கள். 'காம்போதி மாதிரி இருக்கு'; 'அங்கங்கே பிலகரிக் களையையும் காட்டுதான்'', 'சில இடங்களில் மோகனம் மாதிரியும் இருக்கு'; 'ஒரு வேளை பாசந்தியா யிருக்குமோ'; 'அப்படி ஏதாவது ஒரு அபூர்வ ராகமாகத்தான் இருக்க வேண்டும்' என்றெல்லாம் அபிப்பிராய பேதங்கள் அடிபட்டன. கடைசியில் ஒரு ஞானஸ்தர், "ஏன் ஐயா இப்பொழுது போட்டு உங்களுக்குள் அடிச்சுக் கொள்ளுதேக? இப்போதைக்குள்ளே அவன் ராகத்தைக் காட்ட மாட்டான். நாலு மணிக்குத்தான் ராகக் களையை லேசாகக் காண்பிப்பான். அப்பொழுது பார்த்துக்கிடுவோம்" என்றார்.

எனக்கும் அண்ணாச்சிக்கும் இதிலெல்லாம் தலையிட்டுக் கொள்ளுவதில் விருப்பமே கிடையாது. சங்கீதத்தைப் பற்றிப் பேச்சென்ன? எங்களுடைய பேச்செல்லாம் வேறு தினுசாகத்தான் இருக்கும்.

"அண்ணாத்தே! உங்களுக்குள் நலுங்கு வைப்பது கிடையாதே?"

"உண்டே! இன்னைக்கிக்கூட நலுங்கு நடந்தது. இன்னொரு விஷயம் உங்களிடம் சொல்ல மறந்து விட்டேனே! இன்னைக்குச் சாயங்காலம் கலியாணத்துக்கு வந்திருந்த பெண்களெல்லாம் ஏதோ ஒருத்திக்கொருத்தி காதைக் கடித்துக் கொண்டிருந்தார்கள். விசாரித்ததில் உண்மை தெரிய வந்தது. பெண்களுக்குக்குள் ஒரு பெரிய புகார் கிளம்பி விட்டது. காரணம், நலுங்குச் சமயத்தில் பெண் சிரித்து விட்டாளாம்! இதை ஒரு பெரிய குறையாக எடுத்து இந்தப் பெண்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். இதை இவ்வளவு பிரமாதப் படுத்துவதற்குத் தக்க காரணமுண்டு. பெண்ணுக்கு இருக்கும்போது சிரிப்பது எங்களுடைய ஜாதி வழக்கத்துக்கு முற்றிலும் விரோதமானது. 'பெண்ணுக் கிருப்பது' என்றால் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமோ? பெண்ணுக்கிருப்பது என்பது ஒரு கலை; இது பெண்களால்தான் முடியும். ஆடவர்களால் முடியவே முடியாது. நம்மால் மாப்பிள்ளைக்கு இருக்க முடியுமா, என்ன? கலியாணத்துக்கு இரண்டு நாளைக்குமுன், பெண் பாண்டி, கீச்சுக் கீச்சுத் தாம்பாளம் எல்லாம் விளையாடிக் கொண்டிருக்கும். சில பெண்கள் புளியங்காய் பறிக்க மரத்துமேல் ஏறிவிடும்.

நாம் பராக்குப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, பின்னுலே ஓடிவந்து 'நறுக்'கென்று நம் தலையில் ஒரு குட்டுக் குட்டிவிட்டு நாம் திரும்பிப் பார்ப்பதற்குள் மாயமாய் மறைந்துவிடும். இதேபெண், கலியாணத்தன்று சாந்த ஸ்வரூபியாய் நாணமே ஓர் உருவெடுத்ததுபோல் பெண்ணுக்கு உட்கார்ந்திருப்பாள். கலியாணம் முடியும் வரை ஒரு புன் சிரிப்பு வரணுமே, கிடையாது. கீச்சங் காட்டிலுைம் சிரிக்கமாட்டாள். சிரித்தால், கெட்டுது காரியம்! மற்றப் பெண்களெல்லாம் 'பெண்ணு லட்சணமாக் காணேம்! சிரிக்கிருள், வெக்கங்கெட்ட மூளி!' என்று திட்டுவார்கள். இன்னும்,கலியாணத்தில் பெண்ணுல் சிரிக்கவும் முடியாது. அனேகமாகக் கலியாணத்தன்று பெண்ணுக்கு மண்டையிடி வந்துவிடும். இதற்குக் காரணம், பெண்ணின் தலையில் நாலு வண்டிக்கு நகைகள் வைத்து முடிப்பதுதான். ஒரு உலைமுடி, ஒரு பிரிமணை, ஒரு நாகம், ஒரு தேள் இவ்வளவும் பெண்ணின் தலைமேல் ஏறிவிடும். ஆகமொத்தம், கலியாணத்தன்றுதான் பெண் ரொம்ப அவலட்சணமா யிருப்பாள். இனிமேல் இதைக் காட்டிலும் அழகாத்தான் இருப்பாள் என்ற நம்பிக்கை மாப்பிள்ளைக்கு எவ்வளவு திருப்தியைக் கொடுக்கும்?"

"அது சரி, பட்டணப் பிரவேசத்திற்கு ஏன் கோவில் யானையைக் கொண்டுவரவில்லை?"

'யானை என்னத்துக்கு? எல்லாருக்கும் முன்னாலே தான் சோமையா அத்தான் போறாகளே !'' என்று சொன்னேனே இல்லையோ, அண்ணாச்சியும் மற்றவர்களும் சேர்ந்து ஆனை வெடிபோட்டது போல் ஒரு சிரிப்புச் சிரித்தார்கள். இதைக்கேட்டு, விஷயம் என்ன என்று தெரிந்து கொள்வதற்கு, சோமையா அத்தான் இந்தப் பக்கம் திரும்பினார். ஆனால், அவர் உடம்பைப் பூராவும் திருப்புவதற்குள் நானும் அண்ணாச்சியும் வீடுபோய்ச் சேர்ந்தோம்.



# கடிதங்கள்-4

.... அவர்களுக்கு,

சென்ற இரண்டு வாரங்களாக எனக்கு உடம்புக்குச் சௌகரியமில்லை. அது என்னுடைய உடம்பை அதிகமாகப் பாதிக்கவில்லை. ஆனால், என் மனசைப் பாதாள லோகத்துக்கே கொண்டு போய்விட்டது. 'ஏது, நமக்கும் வியாதிக்கும் உள்ள தொந்தம் விடவே விடாதோ? இந்த வியாதி நம்மை வாழ விடாதுபோலிருக்கிறதே!' என்றெல்லாம் எண்ணத் தலைப்பட்டேன். ஆகையால் இந்த இரண்டு வாரங்களாகப் பேசாமல் படுத்த படுக்கையாய்க் கிடந்தேன். தாகூரைக்கூட ஏறிட்டும் பார்க்கவில்லை. நேற்றைக்கு 'டெம்பரேச்சர்' இல்லை. இன்றைக்கு நீங்கள் வருவீர்கள் பேசிப் பொழுதைச் சந்தோஷமாகப் போக்கலாம் என்றிருந்தேன். ஆனால், நீங்கள் வரவில்லை. சரி, கடிதம் ஒன்று எழுதிவிடுவோம் என்று உட்கார்ந்தேன்.

இன்னும், ஊசி குத்திய இடங்கள் அதாவது இரு புஜங்களும் சிறிது வீங்கி விட்டன. கொஞ்சம் வலியும் இருந்தது. நேற்று ராத்திரி என்னை அறியாமல் அந்த இடங்களைச் சொறிந்திருக்கிறேன். இன்றைக்கு விடியற்காலம்

பார்த்தால் ரெத்தக் கோரையே கண்டிருந்தது. கோடு கோடாய் விழுந்திருந்தது. தேகம், பெண்களைப் போல், அவ்வளவு மென்மையாகி விட்டது! புஜங்களில் உள்ள நகக் குறிகளைப் பார்த்துப் பரிதவித்துக் கொண்டிருக்கிறேன்!

அன்றைக்கு நீங்களெல்லாம் வந்திருந்த போது, நான் தூங்குமூஞ்சியாகத்தான் உங்கள் முன்னல் பிரசன்னமாக வேண்டி யிருந்தது. என்ன செய்வது? சிறு வயது முதலாகவே காலையில் எழுந்திருக்கிற நல்ல பழக்கத்தைக் கடைப் பிடிக்காமல் போய் விட்டேன் 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' இருக்கத்தான் செய்யும் போலிருக்கிறது! நான் சூரியோதயத்தைப் பார்த்து வருஷங்கள் ஆகின்றன. அப்படி யிருந்தும் சூரியோதயத்தைப்பற்றி ஒரு பாட்டு எழுதிவிட்டேன். ரொம்ப வேடிக்கைதான் அல்லவா? கண்ட காட்சியினும் காணுத காட்சியே மேல் என்று கொள்ளவேண்டியதுதான்.

அன்றைக்கு நீங்களெல்லோரும் கவிதா லோகத்தில் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தீர்கள். நான்மட்டும், சிறகொடிந்த பறவை போல, நீங்கள் பறப்பதையெல்லாம் கூட்டில் இருந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தேன் 'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்' என்று பாரதி

யார் பாடி யிருக்கிருர். அன்றைக்கு, என்னுடைய வாக்கினிலே ஒளி இல்லாமற் போய்விட்டது. மௌன இருள்தான் குடிகொண்டிருந்தது.

இந்தக் குரலுக்கு என்றைக்குத்தான் விமோசனம் வருமோ தெரியவில்லை. இதில் நிபுணர் ஒருவரிடம் கேட்டதற்கு, நாளடைவில் தானகவே தெளிவடையும் என்று சொல்லுகிருர். பொறுத்திருக்கத் தயார்தான். ஆனல், தெளிவடையாமலே இருந்து விட்டால் என்ன செய்வது என்றுதான் பயமா யிருக்கிறது. பேசுவதற்கு இந்தக் குரல் போதும்; ஒருவிதமாகச் சமாளித்துக் கொள்ளலாம். ஆனல், பாடுவதற்கு இந்தச் சாரீரம் போதாதே! வாழ்நாள் முழுவதும் பாடாமலே இருந்து விடவா? பாடுவதென்ருல் ஏதோ கச்சேரி பண்ணுவதற்காக அல்ல. 'அடடா, என்னமாப் பாடுகிருன்' என்று பிறர் கேட்டு என்னைப் புகழவேண்டாம். சுவானுபவத்துக்கே பாட்டு எவ்வளவு அவசியம்! என்னுடைய பாட்டுக்களையாவது நான் பாடிப் பார்த்துக் கொள்ள வேண்டாமா?

தாகூரின் 'கிரிபாலா' என்ற கதையில் முதல் பாராவையும், முக்கியமாக, முதல் வாக்கியத்தையும் முந்நூறு தடவையாவது படித்திருப்

பேன். எந்த நேரத்திலும் அந்தக்காட்சி என் கண்முன் வந்து நின்றுவிடும்.

மங்கைப் பருவமுன் மேனி முழுவதும்
    பொங்கி வழியுதடி - பொங்கிப்
பொங்கி வழியுத டீ (மங்கை)

செங்கையின் வீச்சினிலும் - உன்றன்
    செந்தமிழ்ப் பேச்சினிலும் - இள (மங்கை)

அன்ன நடை தன்னிலும் - நீ
    அங்கு மிங்கும் ஓடி ஆடித்திரியும்
மின்னல் நடை தன்னிலும் – அந்த
    மெட்டி குலுங்கும் இசைதன்னிலும் - இள
(மங்கை)

தங்கள்

1 0-3-40 தெ. சி. தித்தாரப்பன்

UNIVERSITY LIBR...
31 MAY 1957
MADRAS.

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI
11070
031:6x Y8
H8

Univ. Grants Commission.

...ERSITY EXTENSION LIBR...
16 DEC 1957

# வடிவேலன்

அங்ஙனே பார்த்தாலும் - அதைவிட்(டு)
அப்புறம் பார்த்தாலும்
எங்ஙனே பார்த்தாலும் – முருகன்
எழிலுருவமடி. 1

குங்கும வர்ணனடி - செந்தில்
குமாரப்பெருமானடி
தங்குமிடங்களெல்லாம் – மனமும்
தாவிக் குதிக்குதடி. 2

கண்டஇடத்திலெல்லாம் - முருகன்
காட்சியிருக்குதடி.
நின்றஇடத்திலெல்லாம் - அவனடி
நீழல் இருக்குதடி. 3

நேராத பாக்யமெல்லாம் - அவனல்
நேர்ந்ததடியெனக்கே
வேறேது வேணுமடி - சகியே
வேலனிருக்கையிலே - வடி
வேலனிருக்கையிலே. 4

---

